# தொல்காப்பியம் உரைவளம்

## பொருளதிகாரம்

## உவமவியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொகுப்பும் குறிப்பும்
ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம் உரைவளம்
# பொருளதிகாரம்

## உவமவியல்

தொகுப்பும் குறிப்பும்
**ஆ. சிவலிங்கனார்**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை 600 113

தொல்காப்பியம் - உரைவளம்
வெளியீட்டுத் திட்டம்

வெளியீடு

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Tolkappiyam-Uvamaviyal |
| Subject | : | Compilation of the Commentaries of Tolkappiyam - Uvamaviyal |
| Editor | : | A. Sivalinganar |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113 |
| Publication No | : | 284 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 16 kg Super Printing |
| Size of the book | : | 21 x 14cms |
| No. of pages | : | xiii+114 |
| Price | : | Rs.30/- |
| No. of copies | : | 1000 |
| Printer | : | Annam Offset Printers,<br>25 C.N.K. Salai, Chepauk,<br>Chennai - 600 005. ☎ : 858 8466 |

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113

# அணிந்துரை

**"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமி ழுடன்பிறந்தோம்
நாங்கள்!"**

என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழினத்தின் பெருமையைப் பாடுவார்.

தமிழினத் தொன்மைக்குக் கட்டியங்கூறும் தொல்காப்பியம், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமன்றிப் பொருளுக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உடையது. இதற்கு வெளிவந்த உரைகளே இதன் ஆழத்தையும், அகலத்தையும் வெளிக் கொணரும். எனவே, தொல் காப்பியத்தின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் உரைவளம் எழுதும் திட்டப்பணிக்காகப் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் இந் நிறுவனத்தில் 1980ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவருடைய முதல் திட்டப்பணி நூலான 'தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவளம்' 27-9-80-ல் அப்போதைய மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் வெளியிடப் பெற்றது.

தொடர்ந்து எழுத்ததிகாரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும் அவர் தொகுத்த உரைவளம் வெளிவந்தது. பொருளதிகாரத்தில் மரபியல் 1981-லும், அகத்திணையியல் 1991-லும், கற்பியல் 1993-லும், பொருளியல், களவியல் 1994-லும், புறத்திணையியல் பகுதி-1, பகுதி-2 1996-லும், செய்யுளியல் பகுதி-1 1997-லும் வெளிவந்தன.

தொல்காப்பிய உரைவளத் திட்டத்தின் 32 ஆவது வெளியீடாக உவமவியல் எனும் இந் நூல் அமைகிறது.

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் பெற்ற பெரும் புலவர்; பழம்பெரும் தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகியோரது உரைகளைத் தொகுத்து அவற்றுடன் தம்முடைய உரையினையும் இணைத்து இந் நூலினை அமைத்துள்ளார். தொல்காப்பியத்தில் ஆய்வினை

மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்ற முனைவர் சி. இலக்குவனார் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

இவரது தொல்காப்பியப் புலமையைப் பாராட்டும்முகத்தான் 4, 5, 6-8-97களில் நடைபெற்ற 'தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்' தேசியக் கருத்தரங்கின்போது நிறுவனம் அவருக்குத் **'தொல்காப்பியச் செம்மல்'** என்ற விருது வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற நிறுவனத் தலைவர் மற்றும் தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் திருமிகு த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலின் படிகளை மெய்ப்புத் திருத்திய பெரும்புலவர் அ. நக்கீரர் அவர்களுக்கும் நூலின் முதலில் அமைந்துள்ள சூத்திர நுவல்பொருள், இறுதியில் அமைந்துள்ள சூத்திர முதற்குறிப்பு அகராதி, சொல்லகராதி ஆகியவற்றைச் செய்து தந்த திருமிகு கோ. உத்திராடம் அவர்களுக்கும், இந் நூலினைக் கவினுற அச்சடித்துத் தந்த அன்னம் மறுதோன்றி அச்சகத்திற்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# SYSTEM OF TRANSLITERATION

## உயிரெழுத்துகள் Vowels

| | | | |
|---|---|---|---|
| அ | a | எ | e |
| ஆ | ā | ஏ | ē |
| இ | i | ஐ | ai |
| ஈ | ī | ஒ | o |
| உ | u | ஓ | ō |
| ஊ | ū | ஔ | au |

## மெய்யெழுத்துகள் - Consonants

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | k | ங் | ṅ | ய் | y |
| ச் | s | ஞ் | ñ | ர் | r |
| ட் | t | ண் | ṇ | ல் | l |
| த் | th | ந் | n | வ் | v |
| ப் | p | ம் | m | ழ் | l̲ |
| ற் | r̲ | ன் | n̲ | ள் | ḷ |

## சுருக்க விளக்கம்

அகத்திணை - அகத்திணையியல்
அகம் - அகநானூறு
இ-ள் - இதன் பொருள்
இ.வி - இலக்கண விளக்கம்
இளம் - இளம்பூரணர்
உ-ம் - உதாரணம்
எ-டு - எடுத்துக்காட்டு
எழுத்து - எழுத்ததிகாரம்
எ-று - என்றவாறு
என்-னின் - என்னுதற்றோ வெனின்
ஐங்குறு - ஐங்குறுநூறு
கலி - கலித்தொகை
ஐந்.ஐம். - ஐந்திணை ஐம்பது
குறள் - திருக்குறள்
குறுந் - குறுந்தொகை
சிவ. சிவலிங்கனார்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சூ - சூத்திரம்
செய் - செய்யுளியல்
சொல் - சொல்லதிகாரம்
தண்டி - தண்டியலங்காரம்
திணைமாலை நூற் - திணைமாலை நூற்றைம்பது
தொல் - தொல்காப்பியம்
தொன் - தொன்னூல் விளக்கம்
நச் - நச்சினார்க்கினியர்
நற் - நற்றிணை
நாலடி - நாலடியார்
பதிற் - பதிற்றுப்பத்து
பட்டினப் - பட்டினப்பாலை
பரிபா - பரிபாடல்
பி.இ.நூ - பிற்கால இலக்கண நூல்கள்
புறம் - புறநானூறு
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பேரா - பேராசிரியர்
பொருந - பொருநராற்றுப்படை
மணிமே - மணிமேகலை
மலைபடு - மலைபடுகடாம்
மாறன் - மாறனலங்காரம்
மு.வீ - முத்துவீரியம்
முத்தொள் - முத்தொள்ளாயிரம்
முருகு - திருமுருகாற்றுப்படை
யா.வி - யாப்பருங்கல விருத்தி
வீர - வீரசோழியம்

## சூத்திர நுவல்பொருள்

272. உவமையின் நான்குவகைத் தோற்றத்தைக் கூறுகின்றது.
273. உவமைகள் ஒரோவொரு பொருளான் வருதலின்றி இரண்டும் பலவும் வரும் என்று கூறுகின்றது.
274. உவமை உயர்ந்த பொருளாகல் வேண்டும் என்று கூறுகின்றது.
275. உவமைக்குரிய நால்வகை நிலைக்களன்களைக் கூறுகிறது.
276. நிலைக்களம் நான்கேயன்றிக் கிழக்கிடு பொருளோடு ஐந்தெனவும் கூறுகின்றது.
277. முதலுஞ் சினையும் வரல்பற்றிக் கூறுகிறது.
278. குறிப்பிட்டுச் சொல்லாத உவமமாக இருக்குமானால் உவமச் சொல்லோடு பொருந்த உவமிக்கப்படும் பொருளோடு சேர்ந்து வரல் வேண்டும் என்று கூறுகின்றது.
279. உவமானமும் பொருளும் தம்மின் ஒத்துவரல் வேண்டும் என்று கூறுகின்றது.
280. உவமிக்கப்படும் பொருளும் உவமமாகக் கூறப்படலாம் எனக் கூறுகின்றது.
281. உவமையை உயர்வும் இழிவுமாக நவிலுமாறு கூறுகின்றது.
282. உவம உருபுகளாக முப்பத்தாறு சொற்களையும் இவற்றைத் தவிரப் பிறவும் வரும் என்று கூறுகின்றது.
283. வினையுவம உருபுகளாக எட்டுச் சொற்களைக் கூறுகின்றது.
284. அன்ன என்னும் சொல் ஒழிந்த பொருளோடும் பொருந்தும் என்று கூறுகின்றது.
285. பயனுவம உருபுகளாக எட்டுச் சொற்களைக் கூறுகின்றது.
286. மெய்யுவம உருபுகளாக எட்டுச் சொற்களைக் கூறுகின்றது.
287. உருவுவம உருபுகளாக எட்டுச் சொற்களைக் கூறுகின்றது.
288. நான்கு உவமைக்கும் ஒரோவொன்று எட்டாகக் கூறிய வாய்பாட்டிற் கெல்லாம் புறனடை கூறுகின்றது.
289. உவமை நான்கு வகையாதலேயன்றி எட்டாகும் என்று கூறுகின்றது.
290. பெருமையும் சிறுமையும் ஆக உவமம் கூறும் இடம் கூறுகின்றது.
291. உவமப் பொருளாலே சொல்லுவான் குறிக்கப்பட்ட பொருளை உணர்ந்து தெளியும் பக்கமும் கூறுகின்றது.
292. உவமப்பொருளை உவமிக்கப்படும் பொருளாக உணரும்போது பொருந்திய மரபினால் ஆகிய வழக்கோடு வரும் என்கிறது.
293. இச் சூத்திரம் மேலதற்குப் புறனடை கூறுகின்றது.
294. உள்ளுறை உவமையின் இயல்புகளைக் கூறுகின்றது.
295. உவமப்போலி ஐந்து என்று கூறுகின்றது.
296. உவமப்போலி வகையைக் கூறுகின்றது.
297. தலைமகட்குரியதோர் பொருள் வரையறுத் துணர்த்துகின்றது.
298. தோழி உவமை கூறுமாறு உணர்த்துகின்றது.

299. தலைவன் உவமை கூறுவானாயின் அறிவொடு கூறப்பெறும் என்கின்றது.
300. மூவரும் அல்லாத நற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமை கூறுதல் வரையறுக்கப்படாது என்கின்றது.
301. மகிழ்ச்சியளிக்கும் கூற்றும், புலவி பயக்கும் கூற்றும் உவமப் பக்கத்தால் தோன்றும் என்று கூறுகின்றது.
302. தலைமகள் கூற்றிற்குரிய இடம் கூறுகின்றது.
303. தலைமகன் கூற்றிற்குரிய இடம் கூறுகின்றது.
304. தோழி செவிலி கூற்றிற்குரிய இடம் கூறுகின்றது.
305. வேறுபட்டு வந்த உவமத் தோற்றம் எடுத்தோதிய நெறியில் கொள்ளும் என்கின்றது.
306. உவமையை உவமிக்கப்படும் பொருளினின்று நீக்கிக் கூறுதலும் பொருந்திய இயல்பாகும் என்கின்றது.
307. உவமைக்கண் தடுமாறு வருதலும் விலக்கப்படமாட்டாது என்கின்றது.
308. உவமை பல அடுக்கித் தோற்றுதல்பற்றிக் கூறுகின்றது.

## பொருளதிகாரம்
## உவமவியல் - பொருட்சுருக்கம்

உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமை கூறுதல். அவ் வுவம இலக்கணம் கூறும் இயல் உவமவியல் ஆயிற்று. உவமம் இருவகை; உவமம், உள்ளுறையுவமம் என அவ் விரண்டும் இவ் வியலில் விரிவாகக் கூறப்படுகின்றன. உள்ளுறையுவம விலக்கணம் அகத்திணையியலில் கூறப்பட்டது. இவ் வியலில் அது உவமப் போலி எனப்படும் என்பதும் அது எவ்வெவ்வாறு எவ்வெவரால் செய்யுளில் ஆளப்படும் என்பதும் கூறப்படுகின்றது. உள்ளுறையுவமம் என ஒன்றனைக் கூறியதனால் மற்றது ஏனை உவமம் என ஆளப்பட்டது. அவ் வேனையுவம இலக்கணமும் இவ் வியலில் விரிவாகக் கூறப் படுகின்றது. முதலில் ஏனையுவமம் கூறப்படுகின்றது.

ஏனையுவமம் வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உரு(நிறம்) வுவமம் என நான்குவகைத் தோற்றமுடையது (1).* உதாரணம்: முறையே புலிபோலப் பாய்ந்தான், மாரியன்ன வண்கை, துடிபோலும் இடை, தளிர்போலும் மேனி என்பன.

ஒரே பொருளுக்கு ஒருவகை உவமையேயன்றிப் பல வகையுள்ள பொருளும் உவமையாக வரலாம் (2). உதாரணம்: பிறைபோலும் வெள்ளிய கூரிய எயிறு. பிறை வடிவுக்கும் வெண்மையும் கூர்மையும் நிறமும் குணமுமாகிய உருவுக்கும் உரிய உவமம்.

கூறவந்த பொருளினும் அதற்குக் கூறும் உவமப்பொருள் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் (3). உ-ம்: தாமரைமுகம்.

நால்வகையான உவமைக்கும் சிறப்பு, நலன், காதல், வலி என்ற நான்கும் நிலைக்களனாக அமையும் (4). உ-ம்: அரசன்போல வீற்றிருந்தான் - சிறப்பு. பாவை போல்வாள் - நலன். காளை போல்வான் - காதல். புலிபோலும் வலியன் - வலி.

உவமை உயர்வுகுறித்து வருதலேயன்றித் தாழ்வுகுறித்தும் வரும். அதனுடன் உவமவகை ஐந்தாகும் (5). உ-ம்: கண்ணாடியில் ஊதிய ஆவி சுருங்குவதுபோல் உடல் மெலிந்தாள்.

---

* பிறைக்கோட்டுக்குள் இருக்கும் எண்கள் உவமவியற் சூத்திர எண்கள்

உவமை கூறுங்கால் முதற்பொருளுக்கு முதற்பொருளும் சினைப் பொருளுக்குச் சினைப்பொருளும் கூறுதலேயன்றி மாறியும் கூறப்படும் (6). உ-ம்: மலையனைய களிறு - முதலுக்கு முதல். தாமரை முகம் - சினைக்குச் சினை. நெருப்புப்போலும் கண் - சினைக்கு முதல். தாமரை போலும் குடை - முதலுக்குச் சினை.

பவளம் போலும் செவ்வாய் என உவமைக்கும் பொருளுக்கும் உள்ள பொதுத்தன்மையையும் - அதாவது வகையுள் ஒன்றாகிய நிறப்பண்பையும் போலும் என்னும் உவமச்சொல்லையும் சுட்டிக்கூறாமல் `பவளவாய்' என்று கூறினாலும் அவ் விரண்டையும் நாம் கொணர்ந்து கூட்டி விரித்துப் பொருள்காணல் வேண்டும் (7). அன்றியும் உவமையைக் கூறி அதுபோல எனச் சுட்டிப் பொருளைக் கூறவில்லை யென்றாலும் அதாவது உவமையும் பொருளும் ஆக உள்ள இரு கருத்துகளைக் கூறும்போது அதுபோல எனச் சுட்டிக் கூறாவிடினும் நாம் பொருள் காணுங்கால் அவ்வாறு சுட்டிக் காணுதல் வேண்டும்.

(உ-ம்)“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு” (குறள்.1)

இதில் ‘அதுபோல’ எனச் சுட்டிப் பொருள் காணுதல் வேண்டும்.

உவமையும் பொருளும் அறிஞர் மனத்துக்கு ஒத்தனவாதல் வேண்டும் (8). உ-ம்: புலிபோலப் பாய்ந்தான் என்பதன்றிப் பாய்தல் ஒப்புமை ஒன்றே கருதிப் பூனைபோல் பாய்ந்தான் என்னலாகாது.

உவமத்தைப் பொருளாகவும் பொருளை உவமமாகவும் கூறினும் அது உவமம் எனவே படும் (9). உ-ம்: தாமரை முகம் என்பது முகத்தாமரை என வருவது.

பொருளுக்குக் கூறப்படும் உவமை மிக உயர்த்தியும் பெருக்கியும் மிகத் தாழ்த்தியும் கூறப்படினும் உவமைச்சிறப்பின் நீங்காதன ஏற்றுக் கொள்ளும் முறைமையினையுடையதாம் (10). உ-ம்: கடல் நடுவில் தோன்றும் எட்டாம் பிறைபோலக் கூந்தலின் பக்கமாக நெற்றி தோன்றும். இதில் கடலும் பிறையும் பெரியன. சான்றோர் கேள்விபோல நுணுகிய இடை. இதில் இடையின் மெலிவுக்குச் சான்றோர் வினாவின் நுண்மை சிறியதாகும்.

உவமைப்பொருளை யுணர்த்தும் இடைச்சொற்கள் அன்ன, ஏய்ப்ப முதலாகப் புரைய ஈறாக முப்பத்தாறாம் (11). உ-ம்: தாமரையன்ன முகம் முதலியன.

அவ் விடைச்சொற்களுள் அன்ன, ஆங்கு, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்க என்னும் எட்டும் வினையுவமத்துக்குரியன (12).

எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ என்னும் எட்டும் பயனுவமத்துக்குரியன (14).

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப என்னும் எட்டும் மெய்யுவமத்துக் குரியன(15).

போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்னும் எட்டும் உருவுவமத்துக்குரியன (16).

வினையுவமத்துக்குரிய அன்ன என்பது மற்றவற்றுக்கும் வரும் (13).

மேற்கூறப்பட்ட வரையறைக்குரிய உவமச் சொற்கள் எல்லாம் மரபாக வழங்கிவருவன; மரபுக்கு ஏற்பப் பொருள்தருவன. ஒன்றற்குரியது பிறிதொன்றற்கு வருதலும் உண்டு (17).

(அன்ன ஆங்க முதலாகக் கூறிய முப்பத்தாறு இடைச்சொற்களுள் ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட, நடுங்க என்னும் ஆறும் வினை யுவமம் முதலியவற்றுள் எதிலும் கூறப்படவில்லை. இலேசினாற் கொள்ளப்பட்ட இடைச்சொற்களுள் 'நோக்க' என்பதை வினையுவமத் துக்கும், 'நேர' என்பதை உருவுவமத்துக்கும் கூறினார் ஆசிரியர்.)

மேற்கூறப்பட்ட வினையுவமம் முதலிய நான்கும் எட்டாதலும் உடைய; வினையும் வினைக்குறிப்பும் நன்மை தீமைப் பயன்கள், வடிவு அளவு என மெய் இருவகை. நிறமும் குணமும் என உரு இருவகை(18). இஃது இளம்பூரணர் கொள்கை. வினையுவமம் முதலிய நான்கும் உவமத் தொகை எனவும் உவமவிரி எனவும் இவ்விரண்டாக எட்டாம். இது பேராசிரியர் கொள்கை. வினையுவமம் முதலியவற்றுக்கு எட்டு எட்டாகப் பிரித்துக் கூறிய இடைச்சொற்களுள் ஒவ்வொன்றிலும் முதல் நான்கும் உவமப்பொருள் தவிர வேறு பொருள் உணர்த்தாமையின் அவை ஒரு நான்கும் பிற்கூறிய இடைச்சொற்கள் நான்கும் பிறிது பொருளும் உணர்த்தலின் அவை ஒரு நான்கும் என எட்டாம். இதுவும் பேராசிரியரின் இரண்டாவது கருத்து.

உவமைகள் பெருமையாகவும் சிறுமையாகவும் கூறப்படும்போது அவை மெய்ப்பாட்டின் வழியில் அமையும் என்பர்(19). மெய்ப்பாடு தோன்றவில்லை யென்றால் பெருமைப்படுத்துவதும் சிறுமைப்படுத்துவ தும் பயனில்லையாம். உ-ம். அவாப்போல் அகன்ற அல்குல் - இது பெருமைபற்றி வந்த உவகை மெய்ப்பாடு. சான்றோர் உசாப்போல் இடை. இது சிறுமைபற்றி வந்த உவகை மெய்ப்பாடு. பிறவும் கொள்க.

கூறப்படும் உவமத்தால் பொருளில் விளக்கம் இல்லையென் றாலும் விளக்கமாகக் கொள்ளுதல் உண்டு. உவமைக்கு அடைமொழி கொடுத்துப் பொருளுக்கு விட்டாலும் பொருளுக்குக் கொடுத்து உவமைக்கு விட்டாலும் பிறவாறு கூறினாலும் விளக்கம் பெறுதல் வேண்டும் (20).

**(உ-ம்)''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
கோடாமை சான்றோர்க்கு அணி'' **(குறள்.118)**

என்னும் குறளில் கோலுக்குக் கூறிய சமன்செய்தலும் சீர்தூக்குதலும் சான்றோர்க்கும், சான்றோர்க்குக் கூறிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் கோலுக்கும் கொண்டு விளக்கம் காணப்படும். பிற வேறுபட வருவனவும் கொள்க.

உவமையெல்லாம் தொன்றுதொட்டு மருவிவரும் வழக்கொடு பொருந்தவரும் (21). கருமைநிறம் குறித்துக் கார்போலும் கூந்தல் என்பது மரபேயன்றி யானைபோலும் கூந்தல் என்பது மரீஇய மரபன்று.

உவமை இரண்டு சொல்லோடு அடுத்துவரின் பொருளும் இரண்டு சொல்லோடு அடுத்து வருதல்வேண்டும் (22).

(உ-ம்)"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்" (குறள்.410)

உவமை கூறி அதற்கேற்ற பொருள் கூறாது அவ் வுவமையையே பொருளாக்கிக் குறிப்பினால் பொருள் உணர வைப்பின் அது அறிவுடையார் துணிவொடு பொருந்தவரும் (23). உ-ம்: "தன் கதிரைத் தானே காணத் திங்கள் எழுவதுபோல." இதில் உவமையும் பொருளும் திங்கள்.

உவமை யிலக்கணத்துக்கு மாறுபட வருமாயினும் பொருத்திக் கொள்ளுதல் வேண்டும் (34). உ-ம்: "சோழனின் யானை பகைவனின் குடையைத் தேய்த்த வெகுளியால் தன்னையும் தேய்க்கப் பாயுமோ என்ற அச்சத்தால் மதியானது அடையாளம் தெரியாதபடி தேயும்." இதில் குடைபோன்றது மதி என்பது பெறப்படும். இப்படிப் பிறவும்.

உவமையை நீக்குமுகத்தான் உவமிப்பதும் உண்டு (35).

(உ-ம்)"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி." (குறள்.1118)

உவமிக்கப்படும் பொருளோடு உவமை தோன்றவருதலேயன்றிப் பொதுவாக உவமையின் இயல்பை மட்டும் கூறினும் உவமையாம் (36). உ-ம்:- "பாரி பாரி என்று பல ஏத்தி அவனையே புகழ்வர் புலவர்; பாரிமட்டும் உலகைப் புரப்பவன் அல்லன்; மாரியும் உண்டு."

உவமையையும் பொருளையும் எது உவமை எது பொருள் என அறிய இயலாது தடுமாறும் நிலையில் அமைப்பதும் உவமையாம் (37). உ-ம்:- "நீலம்போல் மலரும் கண், கண்போல் மலரும் நீலம். மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ இவன் அழியா அழகுடைய வடிவம்" எனத் தடுமாறுதலும் ஆம்.

உவமைக்கு உவமையாகவோ பிறவாறோ அடுக்கிவருதல் தவிர்க்கப்படும்; ஆனால் நிரல்நிறை, சுண்ணம், அடிமறிமாற்று, மொழிமாற்று என்னும் நான்கில் அடுக்கிவருதல் உண்டு (38). பிறைபோலும் சங்குபோலும் தாழை என்றல் ஆகாது. கொடி குவளை

கொட்டை நுசுப்பு உண்கண் மேனி என நிரல்நிறையில் அடுக்கி வந்தது. பிறவும் கொள்க.

இதுகாறும் கூறப்பட்டன ஏனையுவமத்துக் குரியன; இனி உள்ளுறையுவமத்துக்கு உரியன வருமாறு: (இது பேராசிரியர் உரைக்கு உரியது. இளம்பூரணர் உள்ளுறையுவமத்துக்குக் கூறியனவற்றை ஏனையுவமத்துக்கெனக் கொண்டார். அவர் கொள்கை பொருந்தாது.)

உவமப்போலி எனப்படும் உள்ளுறையுவமம்.[1] அது ஐந்துவகை (24). அவை வினை, பயன், மெய், உரு, பிறப்பு எனப்படும் (25).

தலைவி உள்ளுறையுவமம் சொல்ல வேண்டின் அவளறிந்த கருப்பொருள்களால் சொல்லுதல் வேண்டும் (26).

தோழி சொல்வதாயின் அவள் இருக்கும் நிலத்துக் கருப்பொருள் எல்லாவற்றாலும் சொல்லலாம் (27).

தலைமகன் சொல்வதாயின் தன் அறிவு தோன்றச் சொல்லப்படும் (28).

மற்றைப் பாணன், பாங்கன் முதலாயினோர் இடம் வரையறை யின்றித் தத்தமக்கு அறியவரும் வகையான் சொல்லப்பெறுவர் (29).

உள்ளுறையுவமமானது[1] மகிழ்ச்சிக்காலத்தும் ஊடற்காலத்தும் அவற்றைப் புலப்படுத்தும் சொற்களாற் கூறப்படும்(30).

தலைவி மருதம், நெய்தல் என்னும் இரண்டிடத்துமட்டும் உள்ளுறை கூறப்பெறுவாள் (31).

தலைவனுக்கு இடம் வரையறையில்லை (32).

தோழியும் செவிலியும் கால இடங்களுக்கேற்பப் பொருந்து மாற்றால் உள்ளுறையுவமம் கூறப்பெறுவர் (33).

---

1. உள்ளுறையுவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை நிலைக்களனாகக்கொண்டு வரும் என்பதும், கூறப்படும் ஒரு கருத்தினை உவமையெனக்கொண்டு அதனிடமாகவே வேறோர் குறிப்புப்பொருளைப் பெறுமாறு (வெளிப்படையாக அமையாமல்) அமைவது அதன் இலக்கணம் என்பதும் அகத்திணையியலில் (50,51) கூறப்பட்டன.

# தொல்காப்பியம் உரைவளம்
## பொருளதிகாரம்
### உவமவியல்

**272*** **வினைபயன் மெய்யுரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமைத் தோற்றம்.** **(1)***

**இலக்குவனார்**

276. Action, result, body and colour - these are the four upon which the comparison is made in a classified manner.

**பி.இ.நா.**

**இ.வி.639**

பண்பும் தொழிலும் பயனும்என் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்பின் அதுவே
உவமையாம் அதன்திறம் உணர்ந்தனர் கொளலே.

**தண்டி. 81**

பண்பும் தொழிலும் பயனும்என் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை.

முவீ.பொ.8 மேற்படி

**வீர. 158**

பட்டாங் குரைத்தல் புகழ்தல் பழித்தலின் பண்புபயன்
சிட்டார் தொழில்வடி வாதி உவமை செறிந்துறுப்புத்
தட்டா தியலும் பொருளும் உவமமும் சார்பொதுவாய்
முட்டாம லேநிகழ் காரண மும்பெறும் மொய்குழலே.

---

* சூத்திரத்தின் முதலில் உள்ள எண் பொருளதிகாரத் தொடர் எண்; இறுதியில் உள்ள எண் உவமவியல் தொடர் எண்.

**மாறன். 92**

உவமை வகையே உணருங் காலை
வினைபயன் உறுப்புஉரு என்ற நான்கினும்
தமிதமி நிகழ்ந்தும் தம்மின் விரவியும்
..............................................................................
வரன்முறை புணர்த்தும் வனப்பிற் றாகும்.

**தொல். 328**

உவமை யென்பது உரிக்குணத் தொழிற்பயன்
இவற்றொன்றும் பலவும் இணைந்து தம்முள்
ஒப்புமை தோன்றச் செப்புவது அணியே.

## இளம்பூரணர்

*இவ் வோத்து என்ன பெயர்த்தோ எனின், உவமையியல் என்னும் பெயர்த்து, ஒருபுடை ஒப்புமைபற்றி யுவமை[1] உணர்த்தினமையாற் பெற்ற பெயர். மெய்ப்பாடுபற்றித் தோன்றி வழங்குவது.[2]*

இதனாற் பயன் என்னை மதிப்பதோவெனின், புலன் அல்லாதன புலனாதலும்[3] அலங்காரமாகிக் கேட்டார்க் கின்பம் பயத்தலும். ஆப்போலும் ஆமா என வுணர்த்தியவழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைபற்றி இஃது ஆமாவென்று அறியும். "தாமரைபோல் வாள்முகத்துத் தையலீர்" என்றவழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும். அஃதாவது மேற்சொல்லப்பட்ட எழு திணையினுள் யாதனுள் அடங்கும் எனின், அவை யெல்லா வற்றிற்கும் பொதுவாகிப் பெரும்பான்மையும் அகப்பொருள்பற்றி வரும்.

மேற்குறிப்புப்பற்றி[4] வரும் மெய்ப்பாடு கூறினார். இது பண்புந் தொழிலும்பற்றி வருதலின் அதன்பின் கூறப்பட்டது.

**272. வினைபயன் மெய்உரு..........................தோற்றம்**
என்பது சூத்திரம்.

*இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் உவமத்தினை யொருவாற்றாற் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.*

---

1. உவமை - உவமையிலக்கணம்
2. மெய்ப்பாடுபற்றித் தோன்றி வழங்குவதாவது ஒருவனிடத்து நிகழும் மெய்ப்பாடு கண்டான் ஒருவன் 'இதுபோலும் அது' என உணர்ந்து கூறப்பட்டு வருவது. ஒருவனைப் போரில் தாக்கப் பாய்ந்தான் ஒருவனின் பாய்ச்சலைக் கண்டவன் முன்னர்ப் புலியின் பாய்ச்சல் கண்டிருந்தமையால் அப் புலிப் பாய்ச்சல் நினைவுக்குவர உடன் புலிபோலப் பாய்ந்தான் என வழங்குவது.
3. புலனல்லாதன புலனாதல் - முன்னர் அறியவாராதன உவமையால் அறியவருதல். ஆமா விளக்கம் வருவது காண்க.
4. குறிப்பாவது உள்ளத்தெழும் உணர்வு.

(இ-ள்) வினை, பயன், மெய், உரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம் என்பது - தொழிலும், பயனும், வடிவும், நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே அப் பாகுபட வந்த உவமைக்கண் புலனாம் என்றவாறு.

எனவே, கட்புல மல்லாதனவு முள என்றவாறாம். அவை செவியினானும், நாவினானும், மூக்கினானும், மெய்யினானும், மனத்தினானும் அறியப்படுவன. இவ் விருவகையும்[1] பாகுபட வந்த உவமையாம்.

அவற்றுள், கட்புலனாகியவற்றுள் வினையாவது நீட்டல், முடக்கல், விரித்தல், குவித்தல் முதலாயின. பயனாவது நன்மையாகவும் தீமை யாகவும் பயப்பன. வடிவாவது வட்டம், சதுரம், கோணம் முதலாயின. நிறமாவன வெண்மை, பொன்மை முதலாயின. இனிச் செவிப்புலனாவது ஓசை. நாவினான் அறியப்படுவது கைப்பு, கார்ப்பு முதலிய சுவை. மெய்யினான் அறியப்படுவன வெம்மை, தண்மை முதலாயின. மூக்கால் அறியப்படுவன நன்னாற்றம், தீநாற்றம். மனத்தால் அறியப்படுவன இன்ப துன்ப முதலியன.

(உ-ம்) "புலிபோலப் பாய்ந்தான்"
என்பது வினை.

"மாரி யன்ன வண்கை" (புறம்.133)
என்பது பயன்.

"துடிபோலும் இடை"
என்பது வடிவு.

" தளிர்[2]போலும் மேனி"
என்பது நிறம்.

"குயில்[3]போன்ற மொழி"
செவியாலறியப்பட்டது.

"வேம்புபோலக் கைக்கும்"
நாவினாலறியப்பட்டது.

"தீப்போலச் சுடும்"
மெய்யினாலறியப்பட்டது.

"ஆம்பல்[4] நாறுந் துவர்வாய்" (குறுந்.300)
மூக்காலறியப்பட்டது.

1. இருவகை - கட்புலனாவனவும் ஆகாதனவும்
2. தளிர் - தளிரின் பொன்னிறம்
3. குயில் - குயிலின் குரல் ஒலி
4. ஆம்பல் - ஆம்பல் மலர்மணம்

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"[1] (குறள்.1107)

மனத்தானறியப்பட்டது.

பிறவுமன்ன. (1)

## பேராசிரியர்

**276. வினைபயன் மெய்யுரு..............................தோற்றம்.**

*இவ் வோத்து என்ன பெயர்த்தோவெனின், உவமவியல் என்னும் பெயர்த்து. உவமம் என்பது, ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல். இதனானே இவ் வோத்து நுதலியதூஉம் உவமப் பொருளே கூறுதலாயிற்று. மற்று அகம் புறம் என்பனவற்றுள் இஃது என்ன பொருளெனப் படுமோவெனின், அவ் விரண்டு மெனப்படும்; மெய்ப்பாடு போல என்பது; என்னை?*

"உவமப் பொருளி னுற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான"[2] (295)

என மேல் வருகின்றதாகலின்.

*மற்றிவ் விருதிணைப் பொருளும் உவமம்பற்றி வழக்கினுள் அறியப்படுதலானும் உவமம்பற்றியும் பொருள் கூறுகின்றானென்பது மேல் அகத்திணையியலுள் (49) உவமத்தினை இரண்டாக்கி ஓதினான், உள்ளுறையுவமம், ஏனையுவமமென. அவ் விரண்டனையும் ஈண்டு விரித்துக் கூறுகின்றவாறு; அவற்றுள், ஈண்டு ஏனையுவமத்தினை முற்கூறினான், அஃது அகத்திணைக்கே சிறந்ததின்றாயினும் யாப்புடைமை[3] நோக்கி, உலக வழக்கினுஞ் செய்யுள் வழக்கினும் வருமாகலானு மென்பது.*

*அஃதேல் உள்ளுறையுவமஞ் செய்யுட்கே உரிமையின் அதனைச் செய்யுளியலுட் கூறுகவெனின், உவமப் பகுதியாத லொப்புமை நோக்கி ஓரினப் பொருளாக்கி ஈண்டுக் கூறினானாயினும் வருகின்ற செய்யுளியற்கும் இயையுமாற்றான் அதனை ஈற்றுக்கண் வைத்தான், அது செய்யுட்குரித்தென்னுங் கருத்தானென்பது. எனவே எழுத்தினுஞ் சொல்லினும் போலச்[4] செய்யுட்குரியன செய்யுட்கென்றே ஓதலும்[5] ஒருவகையாற் பெற்றாம்.*

---

1. அழகிய மாமைநிறமுடைய இத் தலைவியைக் கூடியதால் பெற்ற இன்பம், தம் வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்குப் பகுத்துக்கொடுத்து உண்ட காலத்துப் பெறும் இன்பமகிழ்ச்சியைப் போன்றதாகும்.

2. உவமை யெனப்பட்ட பொருளான் உவமிக்கவரும் பொருட்கு உற்றதெல்லாம் அறிந்து துணியும் பகுதியும் பலவாகிய இலக்கண வகையால் உள.

3. யாப்புடைமையாவது புறத்திணைக்கும் வரும் ஆதலின் தொடர்புடைமை.

4. எழுத்துக்குரியவற்றை எழுத்ததிகாரத்தும் சொல்லுக்குரியவற்றைச் சொல்லதிகாரத்தும் கூறியதுபோல

5. செய்யுட்குரியவற்றைச் செய்யுள்பற்றிக் கூறும் இடத்திலேயே ஓதலும்.

*மற்று, 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்', (53) அல்லாத வழக்கு,[1] ஆராயப் பயந்ததென்னை யெனின், அப் புலனெறி வழக்கிற்கு உறுப்பாகிய வழக்கினை[2] ஆராய்தலும் அதற்கு உபகாரமுடைத்தாதலா னென்றவாறு. மற்றிது மேல் எவ் வோத்தினொடு இயைபுடைத்தோ* வெனின் மேற் பொருள் புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றானாகலின்; எங்ஙனமோவெனின், 'ஆப்போலும் ஆமா' என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்றவழி அதனைக் கண்டால் ஆப்போலும் என்னும் உவமையேபற்றி ஆமா இதுவென்று அறியுமாகலானென்பது.

*இவ் வோத்தின் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் உவமத்திற்கெல்லாம் பொதுவிலக்கணங் கூறி அவற்றது பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தொழிலும், பயனும், வடிவும், வண்ணமும் என்னும் நான்கெனப்படுங் கூறுபட வரும் உவமத் தோற்றம் என்றவாறு.

'உவமம்' என்பதனை வினைமுதலாகிய நான்கினொடுங் கூட்டி வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருவுவமமெனப் பெயர் கூறப்படும்.

வினையாற் பயப்பது பயனாதலின் பயத்திற்குமுன் வினை கூறப்பட்டது; அதுபோலப் பிழம்பினால்[3] தோன்றும் நிறத்தினை அதற்குப் பின் வைத்தான்; பயனும் பொருளாக நோக்கி[4] மெய்யினையும் அதனுடன் வைத்தானென்பது. மற்று மெய்யெனப்படுவது பொருளாதலின் அதன் புடைபெயர்ச்சியாகிய வினை பிற்கூறுகவெனின், வினையுவமந் தன்னுருபு தொக்குநில்லாது விரிந்தே நிற்றற் சிறப்புடையனவும் உளவாக நோக்கி அது முற்கூறினானென்பது. அது 'புலிமறவன்' எனத் தொகாது 'புலியன்ன மறவன்' என விரிந்தே நிற்றலும், 'புலிப்பாய்த்துள்' எனத் தொக்கு வருதலும் உடைத்தென்பது. தொகை நான்கென எண்ணிக் கொடுத்தான்.

வரலாறு: 'புலியன்ன மறவன்' என்பது 'வினையுவமம்' அது பாயுமாறே பாய்வனென்னுந் தொழில்பற்றி ஒப்பித்தமையின்; அற்றன்றித் தோலும் வாலுங் காலும் முதலாகிய வடிவும் ஏனைவண்ணமும் பயனும் ஒவ்வா வென்பது; ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்.

---

1. இது உலகவழக்கு.
2. புலனெறி வழக்கு என்பது நாடக வழக்கும் உலகியல் வழக்கும் உடையது ஆதலின் உலகியல் வழக்கு அதற்கு உறுப்பாகும்.
3. பிழம்பு - வடிவு
4. பொருளாக நோக்குதலாவது காணப்படும் பொருளாகக் கருதுதல்.

"மாரி யன்ன வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே" (புறம்.133)

என்பது பயவுவமம்; என்னை? மாரியான் விளைக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்குமென்றவாறு.

'துடியிடை' என்பது மெய்யுவமம்; அல்குலும் ஆகமும்[1] அகன்று காட்ட அஃகித்[2] தோன்றும் மருங்குலால் துடி அதனோடு ஒத்தது.

'பொன்மேனி' என்பது உருவுவமம் பொன்னின்கண்ணும், மேனியின்கண்ணுங் கிடந்த நிறமே ஒத்தன பிற ஒத்திலவென்பது. இந் நான்கும்பற்றி உவமந் தோன்றுமென்பது கருத்து. 'உவமத்தோற்றம்' என்பது மூன்றாவதன் தொகை, உவமத்தாற் பொருள் தோன்றுந் தோற்ற மென்றவாறு.

மற்று 'அடைசினைமுதல்' (தொல்.சொல்.26) என்றாற் போல அடையெனவே இந் நாற்பகுதியும் அடங்கக் கூறிப் 'பண்புத்தொகை' என்புழி வண்ணம் வடிவு முதலாயின அடங்கியவாறுபோலப் பண்பென்று அடங்குதல் செய்யாது ஈண்டு நான்கெனப் பகுத்ததென்னை யெனின்[3] இது பொருளாராய்ச்சியாகலான் (கட்புலனாம் பண்பும் உற்றுணரும் பண்பும் வேறாக நோக்கி வடிவினையும், உருவினையும் வேறுபடுத்தான்; என்னை? வடிவுபற்றிய பண்பினை இரவின்கண் (உருவாக உற்றுணரப்படும்) வண்ணமாயின் அவ்வாறு உற்றுணரப்படா தென்பது. அல்லாக்காற் பகற்குறிக்கட் கூறப்படும் வண்ணம் முதலாயினவும் இரவுக்குறிக்கண் எய்துவான் சொல்லும் வடிவும், பண்பும் ஒன்றாகக் கூறினானென்பது; அல்லதூஉம், உணர்த்துகின்ற திணைப் பொருளினை எளிதிற் புலப்படுத்த லுபகாரம் நோக்கியும் அவ்வாறு பகுத்தானென்பது.

"களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கி
னொளித்தியங்கு மரபின் வயப்புலி போல"[4] (அகம்.22)

என்புழி, பார்வலொதுக்கமாகிய வினை பண்பெனப் படாது; என்னை? பண்பென்பது குறிப்பின்றி நிகழுங் குணமாகலினென்பது. அடையெனினும் அதுவேயெனக் கூறி மறுக்க. எனவே, பார்வலொதுக்க மெனப்பட்ட வினைப்பகுதியாற் பிழையாமற் கோடற்குப் பார்வலொதுக்கி

---

1. மேகம்போலும் வள்ளன்மையுடைய கையும் தேரும் உடைய ஆய் என்னும் வேளிர் தலைவனைக் காணச் செல்லுங்கள்.
2. ஆகம் - இடைக்கு மேற்பட்ட உடம்பு
3. தொழிற்பண்பு, நிறப்பண்பு, வடிவப்பண்பு, குணப்பண்பு என யாவும் பண்பு எனப் படுதலின் இவ் வினாவை எழுப்பினார். அடை என்பது இந் நான்கு பண்பையுமே குறிக்கும்.
4. இங்கிருந்து வினை, பயன், மெய், உரு என்பன பண்பில் அடங்காமை கூறுகின்றார். சிவ. விளக்கம் காண்க.

னின்றானென்பதும் பிறர்க்கஞ்சிப் பார்வலொதுங்குகின்றானல்ல னென்பதுஞ் சொல்லி அவன் தலைமைக்கேற்ற உவமையாதலின், அது பொருட்டோற்றமாயிற்று.

"மாரி யன்ன வண்கை" (புறம்.133)

என்பதூஉம் பண்பாயின், அதன் நிறத்து மேற்கொண்டு வண்கையுங் கரிதெனல் வேண்டுமாகலின் அது பண்பென அடங்காது.

"அணைத்தோள்" (கலி.87)

என்பதும் அது.

"உருவுகிள ரோவினைப் பொலிந்த பாவை
யியல்கற் றன்ன வொதுக்கினள்" (அகம்.141)

என்றக்கால், வடிவுபற்றி உவமங்கொள்ளவே, உயிரில்லாதாள் போல அச்சமின்றி, இரவிடை வந்தாளென்னும் பொருள் தோன்றும். வடிவு பண்பெனப்படாது; பண்பு இழிபாகலின்.

"மாரிப் பீரத் தலர்சில கொண்டே" (குறுந்.98)

காட்டி,

"இன்ன ளாயின ணன்னுதல்"

என்றவழி, குறித்த பருவங் கழிந்ததென்னும் பொருண்மை விளங்கிற்று. இது உருவுவமம்.

இவ்வாறு பொருளுணர்த்துதற் பகுதி நோக்கி 'உவமப்பகுதி' என்றான் என்பது; என்றாற்கு, இந் நான்கு பகுதியேயன்றி அளவும், சுவையும், தன்மையும், வெம்மையும், நன்மையும், தீமையும், சிறுமையும், பெருமையும் முதலாயினபற்றியும் உவமப்பகுதி கூறாரோவெனின், அவையெல்லாம் இந் நான்கனுள் அடங்குமென்றற்கும் அந் நான்கும் இன்ன பொருட்பகுதி உடையவென்றற்குமன்றே அவற்றை 'வகைபெற வந்த' என்பானாயிற் றென்பது.

"பறைக்குர லெழிலி"[1] (அகம்.23)

என்றக்காற் பறையும் எழிலியும் ஒத்தல் வினைபற்றி உவமை கொள்வான் ஒன்றற்குக் குரல்கூறி ஒன்றனை வாளாது கூறினானாயினும் வினையுவமத்தின் வகையெனப்படும்.

"கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி" (கலி.51)

என்பதூஉம் அதன் வகை.[2]

---

1. பறையின் ஒலிபோலும் ஒலியுடைய மேகம். பறைக்குக் குரல்(ஒலி) கூறி எழிலிக்கு ஒலி கூறப்படவில்லை.

2. கடைக்கண் நோக்கம் கொல்லுமளவில் துன்பம் செய்வதாதலின் உவமையாயிற்று.

'வந்த' என்றதனான் இல்லாத வினை வருவித்துஞ் சொல்லப்படும்; அவை,

"விசும்புரி வதுபோல்"[1] (அகம்.24)

"மணிவாழ் பாவை நடைகற் றன்ன"[2] (நற்.194)

"வான்றோய் வன்ன குடிமையும்"[3] (தொல்.பாயிரம்)

இவை, உவமையும் பொருளுமாகிய வினைபற்றி வந்திலவாகலின் அதன் வகையெனப்பட்டன. 'அன்ன', 'ஆங்க' என்பன இடைச்சொல் லாகலின் வினைப்பின்னும் வந்தன[4]; "நடை கற்றன்ன" என்புழிக் கற்று என்னும் வினையெச்சந் தன் னெச்சவினை இகந்ததாயினும்[5] அஃது உவமப்பகுதியாகலான் அங்ஙனம் வருதலும் வகை என்றதனானே கொள்ளப்படும்.

"கொன்றன்ன வின்னா செயினும்" (குறள்.109)

என்பதும் அது.

"இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்" (குறள்.308)

என்பது, வினைப்பெயர்[6] பற்றி உவமஞ் சென்றது.

'பொன்மரம் போலக் கொடுக்கும்' என்பது பயவுவமத்தின் பகுதியாய் அடங்கும்; என்னை? மழைத் தொழிலாகிய பெயலாற் பயந்த விளையுளுடன் இடையிட்டுப்போய் உவமங் கொள்ளாது கொடைப் பொருள் இரண்டும் ஒத்தமையின் மெய்யுவமம் எனப்படாது, கொள்வார்க்குப் பயம் ஒத்தலாற் பயவுவமத்தின் வகையாயிற்று; 'நிலம் போலுங் கொடை' என்பதும் அது.

"தெம்முனை யிடத்துச் சேயர்கொல்"[7]

என்னும் எல்லைப்பொருண்மை மெய்யுவமத்திற்கு வகையெனப்படும், அஃது அன்னவாகலினென்பது. இடைக்கிடந்த நிலம் இரண்டினையும் வடிவுபற்றி உவமஞ்செய்தானென்பது. மற்றுச் சேய்மை அண்மை குணமாம் பிறவெனின், அற்றன்று; 'துடியிடை' என்றவழி அதன்

1. விசும்புக்கு உரியும் வினையில்லை.
2. பாவைக்கு நடைகற்கும் வினையில்லை.
3. குடிமைக்கு வானைத் தோயும் வினையில்லை.
4. கற்று அன்ன, தோய்வு அன்ன என வந்தன கற்றலும் தோய்தலும் வினை.
5. கற்று என்னும் செய்துஎன் வாய்பாட்டு வினையெச்சம் தன் கருத்தாவின் வினை கொண்டு முடிதல்வேண்டும். அங்ஙனம் முடியாமல் அன்ன என்பதனுடன் முடிந்தது. ஆதலின் தன் எச்சம் வினை இகந்தது. தன் எச்சவினை - தான் எஞ்சியிருக்கும் தன்வினை.
6. தோய்வு என்பது தோய்தல் என்னும் தொழிற்பெயர்.
7. பகைவர் இடம் சேயதாயதுபோல நமக்குச் சேய்மையிடத்தார் போலும் என்பது பொருள்.

இடைநுணுக்கமுங் குணனாகும், அவ்வாறு கொள்வார்க்கு என்பது; எனவே நிறப்பண்பு அல்லனவெல்லாம் மெய்யுவமத்தின் வகையெனப்படுவனவாயின. குணமாத லொப்புமையான் அவை நிறப்பண்பிற்கு இனமெனவும்படும். அவ்வாறு திரிபுடைமையின் அவற்றை விதந்தோதாது 'வகை' என்றதனாற் கொண்டா னென்பது.

"தளிர்சிவந் தாங்குச் சிவந்த மேனி"

என்பது, உருவுவமத்தின் வகையெனப்படும்; என்னை? உவமத்தாற் கொள்ளப்பட்ட பொருள் நிறமாயினும் அதனை வினைவிரித்தாங்கு விரித்தமையின் அவ் வேறுபாடு நோக்கி வகையெனப்பட்டது. பிறவும் அவ்வாறே கொள்க. இப் பகுதியுடைமை நோக்கி 'வகைபெற வந்த' என்றானென்பது. (1)

## சிவலிங்கனார்

*உவமையிலக்கணக் கூறும் பகுதியாதலின் உவமவியல் என்னும் பெயர்த்தாயிற்று ஒவ்-ஒவ்வு-ஒவ்வுமை-உவமை எனத் திரிபு கொள்க.*

*தொல்காப்பியம் பொருளதிகாரம், நாடகவழக்கும் உலகியல் வழக்கும் அமைந்த செய்யுள்வழக்கம் கூறுவதாதலின், அகத்திணை புறத்திணை ஒழுக்கங்களின் நிகழ்ச்சிகளைக் காணும்போது எழும் மெய்ப்பாடுகளின் காட்சிகள் வினை, பயன், மெய், உரு என்பன காரணமாகச் சில காட்சிகளை ஒப்புமைப்படுத்திக் காண நேர்வதுண்டா தலின் மெய்ப்பாட்டியலின் பின் உவமவியல் வைக்கப்பட்டது.*

**வினைபயன்................................தோற்றம்.**

*இச் சூத்திரம் உவமையின் வகைகளைக் கூறுவது*

(இ-ள்) பல்வேறு வகைகளாக நாம் உணருமாறு செய்யுள்களில் வந்த உவமத்தின் பொருட்புலப்பாடு என்பது வினை, பயன், வடிவம், நிறம் என்னும் நான்கு வகைகளிலேயே அடங்கும் என்றவாறு.

தொழிலால் வரும் ஒப்புமை வினையுவமம். உதாரணம்: புலிபோலப் பாய்ந்தான்.

பின் விளையும் பயனைக் குறித்துவருவது பயன் உவமம். உதாரணம்: மாரி போலும் வண்கை. மழை பொழிவதும் கை கொடுப்பதுமாகிய தொழில்களால் வரும்பயன் மாரிக்கும் கைக்கும் இன்றி உலகுக்கும் பெறுவானுக்கும் பின் விளைவனவாகும்.

காணப்படும் வடிவால் ஒப்புமை கூறுவது மெய்யுவமம். உதாரணம்: அரசன்போல் வீற்றிருந்தான், பாவைபோல்வாள்.

நிறத்தால் ஒப்புமை காண்பது உருவுவமம். உதாரணம்: 'செவ்வான் அன்ன மேனி.'

'வகைபெற வந்த உவமம்' என்றதனால் வெளிப்படையாக வினைமுதலிய நான்கு வகைகளேயன்றிக் குறிப்பாக அவற்றில் அடங்குமாறு வரும் பிறவற்றையும் கொள்க. அவற்றிற் குதாரணம் அணியிலக்கண நூலுட் காண்க.

ஒருவன் செயலால் விளைவது பயன் ஆதலின் வினைக்குப்பின் வைக்கப்பட்டது. வினைசெய்யும் வடிவம் அதன் பின்னும், வடிவத்தில் வெளிப்படையாகக் காணப்படும் நிறப்பண்பு அதன் பின்னும் வைக்கப் பட்டன.

**273. விரவியும் வரூஉம் மரபின என்ப. (2)**

## இலக்குவனார்

227. They say that they may serve jointly or severally.

## பி.இ.நூ.

| | |
|---|---|
| இ.வி.639<br>தண்டி. 81<br>மு.வீ. பொ. 8<br>வீர. 158<br>மாறன். 92<br>தொன். 328 | 1, 2ஆம் பக்கம் காண்க. |

## இளம்பூரணர்

**273. விரவியும்............................என்ப.**

*என்-னின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமைகள் ஓரோவொரு பொருளான் வருதலின்றி இரண்டும் பலவும் விரவியும் வரும் மரபினையுடைய என்றவாறு.

உம்மை இறந்தது தழீஇயிற்று.[1]

"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று"

(அகம்.கடவுள்வாழ்த்து)

என்றவழி வடிவும் நிறனும் விரவிவந்தது.[2] பிறவும் அன்ன. இன்னும் 'விரவியும் வரூஉம் மரபின' என்றதனாற் பலபொருள் விரவிவந்தது.[3]

---

1. விரவியும் என்பதன் உம்மை முன் சூத்திரத்தில் வினை, பயன், மெய், உரு என்பன தனித்தனியாக உவமமாக வரும் என்றதைத் தழுவியது.
2. பிறையின் வெண்மை நிறமும் கூர்மைவடிவும் விரவிப் பல்லுக்கு உவமையாய் வந்தன.
3. 'பல பொருள் விரவி வந்ததும் கொள்க' என்றிருத்தல் வேண்டும்.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ" (கலி.84)

என்றவழித் தாமரையிலையும் பூவும் குடைக்கும் புதல்வற்கும் உவமையாயினும் தோற்றத்திற் கிரண்டும் ஒருங்குவந்தமையான்[1] வேறோதப்பட்டது.[2] இன்னும் "விரவியும் வரூஉம் மரபின" என்றதனான் 'தேமொழி' எனத் தேனின்கண் உளதாகிய நாவிற் கினிமையும் மொழிக்கண் உளதாகிய செவிக்கினிமையும் உவமிக்க வருதலுங் கொள்க. பிறவும் இந் நிகரனவெல்லாம் இதுவே ஓத்தாகக் கொள்க. (2)

## பேராசிரியர்

**277. விரவியும்....................வென்ப.**

*இஃது, எய்தியது இகந்துபடாமற் காத்தது;[3] நான்கென மேல்(276) தொகை கொடுத்தமையின் அவை வேறு வருதலெய்தியதனை அவ்வாறேயன்றி விரவியும் வரும் என்றமையின்.*

(இ-ள்) அந் நான்கும் ஒரு பொருளோடு ஒரு பொருள் உவமஞ் செய்யும்வழி ஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் விரவியும் வரும் அதன் மரபு என்றவாறு.

"செவ்வா னன்ன மேனி" (அகம்.கடவுள்)

என வண்ணம் ஒன்றுமேபற்றி உவமஞ்சென்றது.

"அவ்வா, னிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று".
(அகம்.கடவுள்)

என்றவழி, வண்ணத்தோடு வடிவுபற்றி உவமஞ் சென்றது.

"காயா மென்சினை தோய நீடிப்
பஃறுடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்த
ளணிமலர் நறுத்தா தூதுந் தும்பி
கையாடு வட்டிற் றோன்று
மையாடு சென்னிய மலைகிழ வோனே" (அகம்.108)

என்புழி, ஆடுதற் றொழில்பற்றியும் வடிவுபற்றியும் வண்ணம்பற்றியும் வந்தது.[4] பிறவுமன்ன.

---

1. இலையால் வெயில் மறைக்கப்பட்ட தாமரைப் பூப் போல் குடையால் வெயில் மறைக்க வந்த புதல்வன் என்றதால் பல பொருள் வினையால் உவமமாக விரவிவந்தன என்க.
2. ஒருங்கு வருதலாவது ஒரு வினையால் ஒப்புமை கொள்ள வருதல்
3. இகந்துபடாமற் காத்தது என்பதினும் புறனடை என்பதே நன்று.
4.. பொருள்: காந்தள் மலரில் தேன் ஊதும் வண்டுகள் மேல் எழுவதும் மலரில் படிவதுமாக ஆடும் தோற்றம் மகளிர் கையில் அம்மனைக் காய்களை மேலெறிந்து பிடித்து ஆடும் ஆட்டம் போன்றது என்பது கருத்து. இதில் மேல் எழுதலும் படிதலுமாகிய தொழிலும் காந்தள்போற் கையும் வண்டுபோல் அம்மனைக் காயும் ஒத்த வடிவும் காந்தட் செந்நிறம் கைச் செந்நிறமாகவும் வண்டின் கருமை காயின் கருமையாகவும் ஆக வரும் நிறமும் விரவிவந்தன.

'மரபின' என்றதனால் அவை அவ்வாறு விராய் வருதலும் மரபே, வேறு வேறு வருதலே[1] மரபெனப்படாதெனக் கொள்க. (2)

## சிவலிங்கனார்

**விரவியும்............................என்ப.**

*இச் சூத்திரம் மேலதற்குப் புறனடை.*

(இ-ள்) மேற்சூத்திரத்துக் கூறப்பட்ட வினை, பயன், மெய், உரு என்பன ஒரு பொருளுக்கு ஒன்று வரும் என்பது பெறப்பட்டாலும் ஒரு பொருளுக்கு இரண்டு முதலியவாகவும் ஒரு தொடரில் பல உவமைகளாகவும் விரவியும் வரும் மரபினையுடையது உவமம் என்றும் கூறுவர் புலவர் என்றவாறு.

'மரபின' என்றதனால் அவ்வாறு வருதல் தொன்றுதொட்டு வரும் வழக்கம் என்பது பெறலாம்.

உதாரணம்: பிறைபோலும் எயிறு. பிறையின் வெண்ணிறமும் கூர்மையும் பல்லின் வெண்மைக்கும் கூர்மைக்கும் உவமையாயின. இது நிறமும் வடிவும்பற்றிய உவமையாம். ஒரு பொருளில் இரண்டு உவமத் தோற்றம் வந்து விரவின.

வெயில் மறைக்கும் இலையின்கீழ்த் தாமரைமலர் போல வெயில் மறைக்கும் குடையின்கீழ் மகன்வரத் தந்தை வந்தான் என்னும் தொடரில் இலைபோல் குடையும் மலர்போல் மகனும் என இரண்டு உவமைகள் விரவிவந்தன. இவ் வுதாரணத்தில் இலையும் மலரும் சினைப் பொருள்கள்; குடையும் மகனும் முதற் பொருள்கள். சினைப்பொருள்கள் முதற்பொருள்களுக்கு உவமையாய் வந்தன. எனவே, முதற்பொருளுக்கு முதற்பொருளும் சினைப்பொருளுக்குச் சினைப்பொருளும் வருக என்னும் வரையறையின்றி முதற்குச் சினையும் சினைக்கு முதலும் விரவியும் வரலாம் எனக் கொள்ளலும் அமையும்.

## 274. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை. (3)

## இலக்குவனார்

278. If we examine, it is found to occur upon the superior (object).

## இளம்பூரணர்

**274. உயர்ந்ததன்......................காலை.**

---

1. வருதல் மட்டும்.

*என்-னின், மேலதற்கோர் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை ஆராயுங்காலத்து உயர்ந்ததன் மேலன என்றவாறு.

ஈண்டு உயர்ச்சியாவது - வினைமுதலாகச் சொல்லப்பட்டன உயர்தல்.[1]

"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்" (பட்டினப்.298)

என்றவழித் துப்புடையன பலவற்றினும் அரிமா உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந்.கடவுள் வாழ்த்து)

என்றவழிச் சிவப்புடைய பலவற்றினும் தாமரை யுயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது. அஃதேல்,

"கொங்கியர் ஈன்ற மைந்தரின்
மைந்துடை உழுவை திரிதருங் காடே"

என இழிந்ததன்மேல் உவமை வந்ததால் எனின்[2] ஆண்டுக் கொங்கிய ரீன்ற மைந்தரின் என விசேடித்த தன்மையான் அவர் பிற நிலத்து மக்களொடு ஒருநிகரன்மையின் அவரும் உயர்ந்தோராகக் கொள்க.

"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரியல் நெடுந்தகை போரே"[3] (புறம்.82)

என்பது இழிந்ததன்மேல்[4] வந்ததாயின் ஆணியூசியினது விரைவு மற்றுள்ள விரைவின் உயர்ந்ததாகலின் அதுவும் உயர்ந்ததாம். (3)

## பேராசிரியர்

**278. உயர்ந்ததன்.......................................காலை.**

---

1. வினையால் உயர்தல், பயனால் உயர்தல், மெய்யால் உயர்தல், நிறத்தால் உயர்தல் என்க. அதாவது பலவற்றுள் உயர்ந்த ஒன்றால் உவமம் கூறப்படும் என்றவாறு.

2. கொங்குநாட்டு மகளிர் ஈன்ற மைந்தர் போல வலியுடைய புலி திரியும் என்பதில் மைந்தர் உயர்ந்தவரில்லையாதலின் இழிந்ததன்மேல் உவமை வந்தது என்பது கருத்து. பிறநிலத்து மைந்தரினும் இவர் மைந்துடையர் என்பதால் அவரினும் உயர்ந்தார் எனப்பட்டு உயர்ந்ததாகும் எனக் கொள்ளல் வேண்டும்.

3. பொருநனொடு நெடுந்தகை போரின் விரைவு எத்தகையது எனின், ஊரில் விழாத் தொடங்கிய நிலையிலும் அப்போது தன் மனைவி மகப்பேறுயிர்த்த நிலையிலும் மழை பெய்து நின்ற பகல்வேளையில் இருபிளவான தோல்தைக்கும் இழிந்தவன் கையில் உள்ள ஊசியினது விரைவு போலும் என்பதாம்.

4. இழிந்தவன்மேல்

*இஃது, எய்தாதது எய்துவித்தது.*

**(இ-ள்)** உவமையெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும் என்றவாறு.

எனவே, உவமிக்கப்படும் பொருள் இழிந்துவரல் வேண்டு மென்பது.

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்" **(பட்டினப்.298)**

"மாரி யம்பின் மழைத்தோற் சோழர்" **(அகம்.176)**

"கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்" **(அகம்.176)**

"பொன்மேனி"

என வரும்.

இவற்றுள் உவமையுயர்ச்சியானே உவமிக்கப்படும் பொருட்குச் சிறப்பெய்துவித்தவாறு கண்டுகொள்க.

'உள்ளுங்காலை' என்றதனான் 'முன்னத்தி னுணருங் கிளவி' (தொல்.சொல்.459)யான் உவமங்கோடலும், இழிந்தபொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப்படச் செயல்வேண்டுமெனவுங் கொள்க. அவை: 'என் யானை', 'என் பாவை' என்றவழி, அவைபோலும் என்னுங் குறிப்புடையான், பொருள் கூறிற்றிலனாயினும்[1] அவன் குறிப்பினான் அவை வினையுவமையெனவும் மெய்யுவமையெனவும் படும். இவற்றுக்கு நிலைக்களங் காதலும் நலனும் வலியுமென்பது சொல்லுதும்;[2] அவை பற்றாது சொல்லுதல் குற்றமாகலின்.

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு" **(குறள்.1081)**

என்பது, ஐயுற்று முன்னத்தான் உவமஞ்செய்தது. தாமரையன்று முகமேயெனத் துணிந்தவழியும், மழையன்று வண்டிருத்தலிற் குழலேயெனப் பொருட்குக் காரணங் கொடுத்தவழியும், மதியங் கொல்லோ மறுவில்லையென்று உவமைக் குறைபாடு கூறுதலும்,

"நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ
யைதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று

---

1. யானை போலும் மகன் என்றும், பாவை போலும் மகள் என்றும் கூறவில்லையாயினும்
2. என் யானை என்பது காதல் காரணமாகவும் அவன் வலி காரணமாகவும் கூறப்படுவது. என் பாவை என்பது நலன்(அழகு) காரணமாகக் கூறப்படுவது.

மெல்ல வியலு மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று"[3] (கலி.55)

என்பனவுமெல்லாம் அவை. இவற்றுண் மலையுஞ் சுனையும் உவமையின்மையின் அவற்றைப் பிறையோடும் மதியோடும் உடன்வைத்து உவமைபோலக் கூறி எதிர்மறுத்தது என்னையெனின், அவையாமாறு 'முதலுஞ் சினையும்' (281) என்புழிச் சொல்லுதும்.

"என்ற வியப்ப வென்றவை யெனாஅ" (286)

என மேல்வருஞ் சூத்திரத்துள் 'என்ற' வென்பதோர் உவமவுருபு கூறி னமையின் 'வாயென்ற பவளம்' எனவும், 'வாய் பவளமாக' எனவும், 'வாய் பவளம்' எனவும் வருவனவும் அக் குறிப்புவமையின் பகுதியெனவே படும். இவற்றை வேறுவேறு பெயர் கொடுத்து விரித்துக்கூறாது 'முன்னத்தினுணர்'வனவே இவையெல்லாமென்னுந் துணையே இலேசினாற் கூறி ஒழிந்த தென்னையெனின், இவற்றாற் செய்யுள் செய்வார் செய்யும் பொருட்படைப் பகுதி எண்ணிறந்தன வாகலின், அப் பகுதி யெல்லாங் கூறாது பொதுவகையான் வரையறைப் படும் இலக்கணமே கூறி யொழிந்தானென்பது. 'வாயென்ற பவளம்' எனவும் 'வாய் பவளமாக' எனவும் 'வாய் பவளம்' எனவும், வந்த பவளக் குறிப்புவமைகளை இக்காலத்தார் உருவகமென்றே வழங்குப. இனி,

'வாய் பவளம்' (யா.வி.ப.362)

எனவும்,

'கண்ண் கருவிளை' (யா.வி.ப.364)

எனவும் பெயர்ப்பயனிலை வரின் அவற்றை ஒற்றுமை காட்டி உருவகம் என்றாராகலின் அதுவும் உவமையெனவே படுமென்பது.[2] (3)

## சிவலிங்கனார்

**உயர்ந்ததன்..................................காலை.**

*இச் சூத்திரம் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகிறது.*

(இ-ள்) உவமத்தை நினைக்குமிடத்து அது உயர்ந்த பொருள் மேலதாகும் என்றவாறு. அதாவது எடுத்துப் பேசப்படும் பொருளைச்

---

1. பொருள்:- நுதல் வியப்புடையதாய்த் தேய்ந்தது; ஆனாலும் பிறையன்று. முகம் மறுவற்றது; ஆயினும் மதியும் அன்று; தோள் வேயின் தன்மை நெருங்கிற்று. அது பிறக்குமிடமன்று; கண் பூவின் தன்மை நெருங்கிற்று; அது பிறக்குமிடமன்று; சாயலுடன் மெல்ல நடக்கும் மயிலும் அன்று; சொல்லு, சொல்லத் தளரும் கிளியுமன்று - இவற்றுள் தோள் கண் ஆகிய இரண்டினும் நேரே பொருளொடு வந்த உவமைகளை மறவாமல் அவை பிறக்குமிடமாகிய மலை, சுனை ஆகியவற்றோடு மறுக்கப் பெற்றுள்ளமை காண்க.

2. வாய்பவளம் - வாய் என்பது பவளம். வாய் எழுவாய்; பவளம் பெயர்ப் பயனிலை ஒற்றுமை காட்டுதலாவது செம்மைநிறம் கூறுதல்.

சிறப்பிக்கும்படியான உயர்வுடைய பொருளே உவமமாகக் கூறப்படும் என்பதாம்.

உயர்வாவது பொருளைச் சிறப்பிக்க வரும் தன்மை. 'தாமரைமுகம்' என்றால் நிறத்தாலும் அழகாலும் மணத்தாலும் வட்டவடிவாலும் காண்பாரை ஈர்க்கும் சிறப்பு - உயர்வு தாமரைக்கு இருப்பதால் அது பொருளாகிய முகத்துக்கு உவமமாயிற்று.

இளம்பூரணர் 'உயர்ந்தது' என்பதற்கு, வினை முதலிய நான்கனுள் ஒன்றில் மற்றவற்றினும் உயர்ந்த ஒருபொருள் என்று கூறி, உதாரணமாக வினையுவமம் கூறுவதாயின் வினை வலிமையுள்ள பொருள்கள் பல இருப்பினும் அவற்றுள் உயர்ந்த - சிறந்த வலியுடையது புலியாதலின் 'புலி போலப் பாய்ந்தான்' என உயர்ந்த பொருளாகிய புலியை உவமையாகக் கூறுதல் என்பர். புலியைக் கண்டறியாதவன் ஒருவனின் பாய்ச்சலைக் கூறுங்கால் தான் கண்ட ஏற்றின் பாய்ச்சலைச் சுட்டி 'ஏறுபோற் பாய்ந்தான்' என்பதேயன்றிப் பாய்ச்சலில் வல்ல பொருள் களுள் உயர்ந்தது புலி என ஆராய்ந்து கூறுதல் உலகவழக்கில்லை. உலகவழக்கும் கொண்டது புலனெறி வழக்காதலின் அவர் உரை பொருந்தாது.

பேராசிரியர் எடுத்துக் கூறப்படும் பொருளினும் அதைச் சிறப்பிக்க வரும் உவமப்பொருள் உயர்ந்ததாக இருத்தல்வேண்டும் என்பர். இது பொருந்துமாயினும் அவரே "சாறுதலைக் கொண்டென" (புறம்.82) என்னும் புறப்பாடலைக் காட்டி, "என்பது இழிந்ததன்மேல் வந்ததாயின் ஆணியூசியினது விரைவு மற்றுள்ள விரைவின் உயர்ந்ததாகலின் அதுவும் உயர்ந்ததாம்" என்றும் கூறினார். அவர் 'உயர்ந்தது' என்பதற்கு இளம்பூரணர் உரையைத் தழுவிக் கூறினார் இங்கு.

பேராசிரியர் உயர்ந்தது என்பதற்குப் பொருளினும் உவமப்பொருள் உயர்ந்ததாகல் வேண்டும் என்றும், மற்றையவற்றின் உயர்ந்ததாகல் வேண்டும் என்றும் கொண்டார் என்பது பெறப்படும். இரண்டாவது கருத்து முன்னர் மறுக்கப்பட்டது. 'நீலமலர்போலும் கண்' என்னுமிடத்து மலர் கண்ணினும் உயர்ந்தது எனப்படாது. 'காந்தள் மலர்போலும் கை' என்புழிக் கையினும் மலர் உயர்ந்தது எனப்படாது. ஆதலின் பொருளினும் உவமப்பொருள் உயர்ந்ததாதல் வேண்டும் என்பது அத்துணைச் சிறப்பில்லை.

எனவே, 'உயர்ந்தது' என்பதற்குக் "கூறவந்த பொருளைச் சிறப்பிக்கும் படியான உயர்வுடையது" என்பதே பொருந்தும்.

**275. சிறப்பே நலனே காதல் வலியோடு**
**அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப. (4)**

## இலக்குவனார்

279. They say that excellence, goodness, love and strength are the four qualitites which serve as source of comparison.

## பி.இ.நா.

**மாறன்.92**

உவமையின் வகையே..........................
காதல் சிறப்பே நலன்வலி யுடன்இழிபு
ஓதிய ஐந்தும் உறுநிலைக் களனா
.......................................................................
வரன்முறை புணர்க்கும் மாண்பிற் றாகும்.

## இளம்பூரணர்

**275. சிறப்பே நலனே..........................மென்ப.**

*என்-னின், இதுவுமது.*

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை தம்மின் உயர்ந்தவற்றோடு உவமிக்கப்பட்டனவேனும், சிறப்பாதல் நலனாதல் காதலாதல் வலியாதல் நிலைக்களனாக வரும் என்றவாறு இவையிற்றைப்பற்றித் தோன்று மென்பது கருத்து.

"முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழாஅல்"[1] (பொருந.54-6)

எனச் சிறப்புப்பற்றி வந்தது.

"ஓவத் தன்ன வியனுடை வரைப்பின்" (புறம்.251)

என்பது நலம்பற்றி வந்தது.

"கண்போல்வான் ஒருவ னுளன்"

என்பது காதல்பற்றி வந்தது.

"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்" (பட்டினப்.218)

என்பது வலிபற்றி வந்தது.

பிறவு மிவ்வாறே படுத்துநோக்கிக்[2] கண்டுகொள்க. (4)

---

1. மூவேந்தரும் ஒன்றுகூடி ஓர் அரசவையில் இருந்த தோற்றம்
2. படுத்துநோக்கி - உதாரணத்திற் சேர்த்து ஆய்ந்து

## பேராசிரியர்

**279. சிறப்பே நலனே.................................மென்ப.**

*இதுவும், எய்தாதது எய்துவித்தது.*

(இ-ள்) வினை, பயன், மெய், உரு என்பனபற்றி உவமை கூறுங்கால் இவை நான்கும் இடனாகப் பிறக்கும் உவமை என்றவாறு.

'நிலைக்களம்' என்பது, அவை அவ்வாறு உவமை செய்தற்கு முதலாகிய நிலைக்களனென்றவாறு.

"முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅத்
கோடியர் தலைவ கொண்ட தறிக" (பொருந.54-7)

என்பது, சிறப்பினாற் பெற்ற உவமமாகலிற் சிறப்புநிலைக் களனாகப் பிறந்தது.

"ஓவத் தன்ன விடனுடை வரைப்பின்" (புறம்.251)

என்புழி, அந் நகரினது செயற்கைநலந் தோன்றக் கூறினமையின் அதற்கு நிலைக்களன் நலனாயிற்று.

"பாவை யன்ன பலராய் மாண்கவின்" (அகம்.98)

என்புழி மகள்கட் காதல் காரணமாக உவமை பிறந்தது. 'என் யானை' என்பதும் அது.

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்" (பட்டினப்.298)

என ஒருவன் வலிகாரணமாக உவமம் பிறந்தமையின் அதற்கு நிலைக்களம் அவன் வலியாயிற்று.

இவ்வாறு கூறவே, உயர்ந்த பொருளின் இழிந்ததெனப்பட்ட பொருள் யாதானும் இயைபில்ல தொன்று கூறலாகாதெனவும், உவமையொடு முழுவதும் ஒவ்வாமை மாத்திரையாகி அதனோடொக்கும் பொருண்மை உவமிக்கப்படும் பொருட்கண்ணும் உளவாகல் வேண்டுமெனவுங் கூறி,. அவைதாமும் பிறர் கொடுப்பப் பெறுவனவும், ஒரு பொருட்கண் தோன்றிய நன்மைபற்றியவும், காதன் மிகுதியால் உளவாகக் கொண்டு உரைப்பனவும், தன்றன்மையால் உளவாயின வலிபற்றினவுமென நான்கா மென்றவாறு. இவற்றுக் கெல்லாம் வினை, பயன், மெய், உரு என்னும் நான்குந் தலைப்பெய்யு மென்பது.

சிறப்பென்பது, உலகத்துள் இயல்புவகையானன்றி விகாரவகையாற் பெறுஞ் சிறப்பு. நலனென்றது அழகு. காதலென்பது அந் நலனும் வலியும்

இல்வழியும் உண்டாக்கியுரைப்பது. வலியென்பது தன்றன்மையானே உள்ளதோர் வலியெனக் கொள்க. இவற்றை நிலைக்களமெனவே இவை பற்றாது உவமம் பிறவாதென்பதாம். தன்மேல் வருகின்ற பகைவனைப் 'பகைவன் புலிபோலும்' என்று வீரக் குறிப்பு அறியாமற் கூறுங் குறிப்பு இன்மையின் அவ் வுவமைக்குத் தோற்றம் ஆண்டில்லை; தன்வினை யுவமமாகலின் திரியாதாயினு மென்பது.[1] (4)

## சிவலிங்கனார்

**சிறப்பே.......................................என்ப.**

*இச் சூத்திரம் உவமை தோன்றுதற்கு நிலைக்களன் கூறுகின்றது.*

(இ-ள்) சிறப்பும், நலனும், காதலும், வலிமையும் என்னும் அந் நான்கும் உவமம் தோன்றுவதற்கு நிலைக்களன் என்று கூறுவர் என்றவாறு.

வினையுவமம் முதலிய நான்கும் சிறப்பு முதலிய நான்கனுள் ஒன்றை யடிப்படையாகக்கொண்டு வரும் என்பதாம்.

உதாரணம்: 'குயில் போலும் மொழி' என்பது சிறப்பு நிலைக்களனாக வந்தது. இது பயவுவமம். 'புலிபோலப் பாய்ந்தான்'. இது வலிநிலைக்களத்து வினையுவமம். 'பாவை போல்வாள்'. இது காதல் நிலைக்களனாக வந்த மெய்யுவமம். 'மேகம் போலும் கூந்தல்'. இது நலன்(அழகு) நிலைக்களனாக வந்த உருவுவமம்.

**276. கிழக்கிடும் பொருளோ டைந்து மாகும்.** (5)

## இலக்குவனார்

280. Including the inferiority it comes to five.

## பி.இ.நா.

**மாறன்.92** 2ஆம் பக்கம் காண்க.

## இளம்பூரணர்

**276. கிழக்கிடும்.....................மாகும்.**

*என்-னின், எய்தியதன்மேற் சிறப்புவதி வகுத்தல் நுதலிற்று.*

---

1. தன்மேல் வரும் பகைவனைப் பார்த்து ஒருவன் அவனைப் 'புலிபோலும்' என்பானாயின் தன் வினையை உணர்ந்த நிலையின் அவன் வினையை உணர்ந்து கூறலின் உவமம் என்பதில் மாறுபாடில்லையாயினும், மேல்வரும் நிலையில் கூறும்போது ஆண்டு நிலைக்களன் இல்லை. ஏன்னெனின் போர் நோக்கமேயன்றி உவமை கூறும் நோக்கம் இல்லை. ஆதலின் உவமையும் தோன்றுதல் இல்லையாம்.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட சிறப்பு முதலிய நான்கும் ஒழியத் தாழ்ந்த பொருளொடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும் அதனோடுங் கூட ஐந்தாம் என்றவாறு.

என்றது பொருள் உவமமாயும் உவமம் பொருளாயும் நிற்குமிடமும் உள என்றவாறு.

"ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயித
ழூசி போகிய சூழ்செயன் மாலையன்"[1] (அகம்.48)

என்றாற் போல்வன. மேற்சொல்லப்பட்ட நான்கும் உயர்வின் பகுதி யாதலின் இதனொடுங் கூட ஐந்தென்றார். (5)

## பேராசிரியர்

**280. கிழக்கிடு............................மாகும்.**

*இது, மேற்கூறிய நிலைக்களத்திற்கு ஓர் புறனடை.*

(இ-ள்) அந் நிலைக்களம் நான்கேயன்றிக் கிழக்கிடு பொருளோடு ஐந்தெனவும் படும் என்றவாறு.

கிழக்கிடு பொருளென்பது, கீழ்ப்படுக்கப்படும் பொருள்.

"கிளைஇய குரலே கிழக்குவீழ்ந் தனவே"[2] (குறுந்.337)

என்புழி, கீழ்வீழ்ந்தன என்பதனைக் கிழக்குவீழ்ந்தன என்பவாகலின். ஒரு பொருளின் இழிபு கூறுவான் உவமத்தான் இழிபு தோற்றுவித்தலின் அதுவும் நிலைக்களமா மென்றவாறு; அவை,

"உள்ளூ தாவியிற் பைப்பய நுணுகி"[3] (அகம்71)

எனவும்,

"அரவுநுங்கு மதியி னுதலொளி கரப்ப"[4] (அகம்.313)

எனவும் வரும்.

இவை பொருளன்றி உவமையுங் கிழக்கிடப்பட்டனவாலெனின், அங்ஙனமாயினும் அவை பொருளோடு சார்த்தி நோக்க[5] உயர்ந்தன வெனப்படும். (5)

---

1. கழுநீர் போன்றது கண் என்னாது கண்போன்றது கழுநீர் என்றது மாறி நின்றது.
2. கிளையிலுள்ள கதிர் கீழ்வீழ்ந்தன.
3. கண்ணாடியில் ஊதப்பட்ட ஆவி சிறுகச் சிறுகக் குறைதல் போல உடம்பில் உயிர் (காமத்தால்) சுருங்குகிறது.
4. பாம்புவிழுங்கும் பிறைபோல நுதல் பசலையால் ஒளி மழுங்கும்.
5. ஆவியை உயிரொடும் பிறையை நுதலொடும் சார்த்தி நோக்க.

**சிவலிங்கனார்**

**கிழக்கிடு..........................ஆகும்.**

*இச் சூத்திரம் மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.*

(இ-ள்) மேற்கூறிய சிறப்பு முதலிய நான்கும் இழிவுப் பொருளோடு சேர்ந்து நிலைக்களன் ஐந்தாகவும் கூறப்படும் என்றவாறு.

கிழக்கிடு பொருள்: கீழ்ப்படுத்தப்படும் பொருள். இழிவு குறிக்கும் பொருள் எனினும் ஆம். கிழக்கு - கீழ். கீழ்ப்படுத்தலாவது குறைவுபடக் கூறுதல். உதாரணம் 'பூனையைக் கண்ட எலிகள் போல் அவனைக் கண்ட பகைவர் ஓடினர்.' இடியேறுண்ட நாகம் போன்றனர்.

இளம்பூரணர் கிழக்கிடு பொருள் என்பதற்குத் தாழ்ந்தபொருள் எனக் கொண்டு தாழ்வாவது பொருளை உவமமாகவும் உவமையைப் பொருளாகவும் கூறுவது என்றும் அதற்கு உதாரணம்,

"ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செயல் மாலையன்" (அகம்.48)

என்றும் கூறுவர். இவர் கூற்றுப் பின்னர் வரும்.

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்" (௬)

என்னும் சூத்திரத்துக் கூறப்படுவதாகும்.

**277. முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு**
**நுதலிய மரபி னுரியவை யுரிய. (6)**

**இலக்குவனார்**

281. *Muthal* (whole) and *sinai* (part) may be compared with the same and with one another in the traditional way as said (in the grammar).

**பி.இ.நா**

**மாறன். 92**

உவமையின் வகையே......................
முதலொடு சினைகளின் முறைமையில் பிறழ்ந்தும்
முதல்சினை வினைகுணம் இன்றியும்....................
வரன்முறை புணர்க்கும் மாண்பிற் றாகும்.

(இ-ள்) முதற்பொருளுஞ் சினைப்பொருளும் என்னும் அவ் விரண்டு பொருட்குங் குறித்தவகையான் மரபுபட வரின் உரியவை உரியவாம் என்றவாறு.

இதன் கருத்து, முதலொடு முதலும், சினையொடு சினையும், முதலொடு சினையும், சினையொடு முதலும் வேண்டியவாற்றான் உவமஞ்செய்தற்கு உரியவெனவும், அங்ஙனஞ் செய்யுங்கால் மரபு பிறழாமைச் செய்யப்படுமெனவுங் கூறியவாறு.

"வரைபுரையு மழகளிற்றின்மிசை" (புறம்.38)

என்பது, முதற்கு முதலே வந்து[1] உவமையாயிற்று.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந்.கடவுள்)

என்பது, சினைக்குச் சினையே வந்து உவமையாயிற்று.

"நெருப்பி னன்ன சிறுகட் பன்றி"[2] (அகம்.84)

என்பது, முதல் உவமமாகப் பொருள் சினையாகி வந்தது.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ"[3] (கலி.84)

என்பது சினை யுவமமாக உவமிக்கப்படும் பொருண் முதலாயிற்று.

'நுதலிய மரபு' என்றதனான்,

"விசும்பி னன்ன சூழ்ச்சி" (புறம்.2)

என்றக்கால், விசும்பென்பது முதலாதல் கருதியுணர்தல் வேண்டும், முதற்சினைப்பகுதி அதற்கு இன்மையினென்பது. இனி,

"வேயமன் றன்று மலையு மன்று" (கலி.55)

என்றவழியும், மலைநோக்காது மலையுள் வேயெழும் இடம் கருதி அவ்விடமன் றென்றவாறெனக் கொள்க.

"பூவமன் றன்று சுனையு மன்று" (கலி.55)

என்பதற்கும் ஒக்கும்.

உரிய என்னாது 'உரியவை' என்றதனால் திணையும் பாலும் மயங்கிவரும் உவமையுங் கொள்ளப்படும். அவை,

"மாரி யானையின் வந்துநின் றனனே" (குறுந்.161)

என்பது, திணைமயங்கிற்று.[4]

1. மலையும் களிறும் முதற்பொருள்கள்
2. நெருப்பு முதற்பொருள், கண் சினைப்பொருள்
3. தாமரை போலும் குடை என்பதில் தாமரைமலர் சினை, குடை முதற்பொருள்.
4. யானை அஃறிணை நின்றோன் உயர்திணை.

"கூவற், குராலான் படுதுய ரிரவிற் கண்ட
வுயர்திணை யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே" (குறுந்.224)

என்பது, உயர்திணைப்பால் மயங்கிற்று.[1]

"கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்" (பெரும்பாண்.75)

என்பது, ஒருமை பன்மை மயங்கிற்று.[2]

"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று"
(அகம்.கடவுள்)

என்பது, அஃறிணைப்பால் மயங்கிற்று;[3] பிறவுமன்ன.

இக் கருத்து அறியார் இவற்றையும்,

"செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்கு"
(தொல்.சொல்.16)

என்புழி, இலேசு கொண்டு உரைப்ப.[4] (6)

**278. சுட்டிக் கூறா உவம மாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன[5] கொளலே. (7)**

**இலக்குவனார்**

282. If the basis of comparison is not pointed out it can be known on having the objects put together in comparison.

**பி.இ.நா.**

**இ.வி. 64**

---

1. கிணற்றின்கண்ணே வீழ்ந்த குராற்பசுப் படும் துன்பத்தை இராக்காலத்திற் கண்ட ஊமையன் அத் துயரத்தை வெளியிட முடியாமல் துன்புற்றது போல என்பொருட்டுத் தோழிபடும் துயரத்தினால் யான் ஆற்றாதவளாயினேன் எனத் தலைவி கூறினாள். ஊமன் ஆண்பால், தலைவி பெண்பால் - பால் மயக்கம்.
2. நெடுவேள் ஒருமை, வம்பலர் பன்மை.
3. பிறை ஒருமை அஃறிணை, எயிறுகள் அஃறிணைப் பன்மை.
4. முதற்பொருளும் சினைப்பொருளும் முதற்கு முதலே உவமமாகும் சினைக்குச் சினையே உவமமாகும் என்ற வரையறையின்றி வேண்டியவாறே மயங்கியும் வரும் என்று இச் சூத்திரத்துக் கூறிய கருத்தையறியாதவர் சூத்திரத்திலேயே அடக்கவேண்டிய திணைமயக்கம் பால்மயக்கம் ஆகியவற்றைக் கொண்ட உவமையையும் 'செப்பினும் வினாவினும்' என்னும் சூத்திரத்தில் இலேசினால் அடக்குவர்.
5. புணர்ந்தன - பேரா. பாடம்

உற்ற பண்பு................................
தொன்னெறிப் புலவர் தொகுத்ததொகை யுவமம்.

(இதனை எல்லா நூல்களும் தொகையுவமம் என்னும்)

## இளம்பூரணர்

**278. சுட்டிக் கூறா...............கொளலே.**

*என்-னின், இதுவுமோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) சுட்டிக் கூறா வுவமை என்பது - உவமிக்கப்படும் பொருட்கு உவமை இதுவெனச் சுட்டிக் கூறாமை. அவ்வாறு வருமாயின் உவமச் சொல்லொடு பொருந்த உவமிக்கப்படும் பொருளொடு புணர்த்து உவமவாய்பாடு கொள்க என்றவாறு.

இதனாற் சொல்லியது உவமவாய்பாடு தோன்றா உவமம் பொருட்குப் புணராக்கண்ணும் உவமை உள என்றவாறாம்.

"மோப்பப் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."[1] (குறள்.90)

இதன்கண் 'அதுபோல' எனச் சுட்டிக்கூறா வுவமையாயினவாறு கண்டுகொள்க. (7)

## பேராசிரியர்

**282. சுட்டிக் கூறா...............கொளலே.**

*இஃது, எய்தாதது எய்துவித்தது.*

(இ-ள்) உவமத்திற்கும் பொருட்கும் பொதுவாகிய ஒப்புமைக்குணம் நான்கினையும் விதந்து சொல்லி உரையாதவழி அவ் விரண்டனையும் எதிர்பெய்து கூட்டி ஆண்டுப் பொருந்தியதொன்று பொருந்தியதுபற்றி வினை, பயன், மெய், உருவென்னும் நான்கினுள் இன்னதென்று சொல்லப்படும் என்றவாறு.

'பவளம்போற் செந்துவர் வாய்' என்பது, சுட்டிக் கூறியவுவமம்; என்னை? இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக் குணத்தினைச் சொல்லியே உவமஞ் சொல்லினமையின். அது 'பவளவாய்' என்கின்ற வழிச் சுட்டிக் கூறா வுவமமாம். ஆண்டுப் பவளத்தினையும் வாயினையுங் கூட்டிப் பார்த்துச் செம்மைக் குணம்பற்றி உவமஞ் செய்ததென்று அறியப்படும்; அல்லாக்கால்; வல்லென்ற கல்லிற்கும் மெல்லென்ற இதழிற்கும் உள்ளதோர் ஒப்புமை ஆண்டில்லையென்பது; பிறவுமன்ன. (7)

---

1. அனிச்சமலர் மோந்த அளவில் வாடிவிடும் அதுபோல விருந்தினர், முகம் மாறிப் பார்க்கவே வாடிவிடுவர்.

## சிவலிங்கனார்

**சுட்டிக்..........................கொளலே.**

*இச் சூத்திரம் எய்தாதது எய்துவித்தது.*

(இ-ள்) இதனொடு இதனிடை இன்னவாறு உவமம் ஆம் எனச் சுட்டிக் கூறப்படாது வந்த உவமத் தொடராயின் உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் எதிர்நிறுத்தி அவற்றின் பொதுத் தன்மையினைச் சுட்டிப் பொருத்திக் கொள்க என்றவாறு.

'பவளவாய்' என்றால் பவளத்துக்கும் வாய்க்கும் உள்ள பொதுத்தன்மையாகிய செம்மை என்பது சுட்டிக் கூறப்படவில்லை யாயினும் பவளம்போலும் செவ்வாய் எனப் பொருத்திக் காணுதல் வேண்டும். பவளச் செவ்வாய் எனினும் ஆம்.

இளம்பூரணர் சுட்டிக் கூறாமையாவது 'அதுபோல' எனச் சுட்டொடு கூடிய உவமவுருபைக் கூறாமையாம் எனக் கொண்டு,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (குறள்.90)

என்பதை உதாரணமாகக் காட்டுவர். சுட்டிக் கூறுதல் என்பது பொதுத்தன்மையைச் சுட்டிக் கூறுதலாகுமேயன்றி உவம வுருபைக் கூறுதலாகாது. மோப்பக் குழையும் அனிச்சம் போல முகம்திரிந்து நோக்கக் குழையும் விருந்து என்பதே போல மறையக் கூறப்பட்டது. இவ்வாறு கூறுவதைத் தொகையுவமை என்பர் அணிநூலார். 'பவளம் போலும் வாய்' விரியுவமை; 'பவளவாய்' தொகையுவமை எனப்படும். அன்றியும் 'முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து' என்ற பொருளை விளக்குவதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டதாகும் 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்பது. இதனை எடுத்துக்காட்டுவமை என்பர் அணிநூலார்.

### 279. உவமும்[1] பொருளும் ஒத்தல் வேண்டும். (8)

## இலக்குவனார்

283. The object of comparison and the object compared must be similar.

## இளம்பூரணர்

**279. உவமும்........................வேண்டும்.**

---

1. உவமையும் - பேரா. பாடம்

*என்-னின், இஃது, உவமைக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) இரட்டைக் கிளவியாயினும், நிரனிறுத்தமைத்த நிரனிறைச் சுண்ணமாய் வரினும், மிக்குங் குறைந்தும் வருதலன்றி யுவமை யடையடுத்து வரினும், தொழிற்பட்டு வரினும், ஒன்றும் பலவுமாகி வரினும் வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும் என்றவாறு.

அவ்வழி வாராது மிக்குங் குறைந்தும் வருவது குற்றம் என்றவாறாம். (8)

## பேராசிரியர்

**283. உவமையும்...........................வேண்டும்.**

*இதுவும் அது.*

(இ-ள்) உவமானமும் பொருளுந் தம்மின் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும் என்றவாறு.

"மயிற்றோகை போலுங் கூந்தல்"

என்பதன்றி,

"காக்கைச் சிறகன்ன கருமயிர்"

என்று சொல்லின், அஃதொத்ததெனப் படாதென்றவாறு.

"புலிபோலப் பாய்ந்தான்"

என்பதன்றிப் பிழையாமற் பாயும் என்பதேபற்றி,

"பூசைபோலப் பாய்ந்தான்"

எனின், அதுவும் ஒப்பென்று கொள்ளாது உலக மென்றவாறு. ஈண்டு ஒத்தவென்பதனை,

"ஒத்த தறிவான்"[1] (குறள்.214)

என்பதுபோலக் கொள்க. (8)

## சிவலிங்கனார்

**உவமும்...........................வேண்டும்.**

*இச் சூத்திரம் வழுவற்க என்கின்றது.*

(இ-ள்) உவமப்பொருளும் உவமிக்கப்படும் பொருளும் பொதுத் தன்மையில் பொருத்தமுற அமைதலை உலகம் விரும்பும் என்றவாறு.

---

1. பொருந்தியது அறிவான். இடம் காலம் சூழல் முதலியவற்றுக்குப் பொருந்தியது.

ஒத்தல் என்பது பொருத்தமுற அமைதல். மரபாக வழங்குதற்குப் பொருந்துதல் எனினும் ஆம். 'பவளவாய்' என்றோ, 'கொவ்வைக் கனிவாய்' என்றோ வாய்க்குப் பவளமும் கொவ்வைக்கனியும் உவமையாகக் கூறலாம். செம்மை நிறம் கருதி 'மிளகாய்ப்பழவாய்' என்றல் பொருந்தாது. இது மரபாக உலகம் ஏலாது. மிளகாய் என்றவுடன் அதன் உறைப்பே முன்னிற்கும்.

இளம்பூரணர் கூறும் உரை பொருந்தாது. அவர் கூறுவன இலேசினாற் கொள்ளப்படுவன; தள்ளப்படுவன அல்ல. உவமைக் குள்ளன பொருளுக்கும் பொருளுக்குள்ளன உவமைக்கும் பொருத்தமுற அமைத்துக் கொள்ளப்படும்.

**280. பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்**
**மருளறு சிறப்பினஃ துவம மாகும். (9)**

## இலக்குவனார்

284. If the compared object is used as the object of comparison, it becomes an object of comparison with out fault.

## பி.இ.நா.

**தண்டி. 33**
இதரவிதரம்.
**இ.வி. 640**
பொருள் உவமையாகியும் உவமை பொருளாகியும்

**தொன். 329**
இதர விதரம்.

## இளம்பூரணர்

**280. பொருளே யுவமஞ்..............................மாகும்.**

*என்-னின், இதுவும் உவமைக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) உவமிக்கும் பொருடன்னை யுவமமாக்கிக் கூறினும் மயக்கமற்ற சிறப்பு நிலைமையான் எய்தும் உவமையாகுமென்றவாறு.

ஒருசா ராசிரியர் ரூபகம்[1] சொல்லப்பட்டது உவமைபற்றி வருதலின் இஃது உவமையின் பாகுபாடு என்பது இவ் வாசிரியர் கருத்து.

---

1. உருவகம்.
யானை - மேகம், வாள் - மின்னல், முரசம் - இடி, அரசர்கள் - பாம்பு, குதிரை - காற்று, அம்பு - மழை, போர்க்களம் - வயல், தேர் - ஏர் என உருவகம் காண்க.

"இரும்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக
அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுதைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேஎ யெற்றிய பிணம்பிறங்கு பல்போர்க்
கான நரியொடு கழுகுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொருகளந் தழீஇப்
பாடுநர்க் கீந்த பீடுடை யாளன்" (புறம்.369)

என வரும்.

"பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாடும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்."[1]

(மணிமே. 4 : 8-13)

என்பதும் அது. இவ்வாறு வருவனவெல்லாம் இச் சூத்திரத்தாற் கொள்க. (9)

## பேராசிரியர்

**284. பொருளே......................மாகும்.**

*இது, மேற்கூறியவாறன்றி வருவதோர் உவமை விகற்பங் கூறு கின்றது.*

(இ-ள்) "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" (278) என்புழி, உவமம் உயர்ந்துவரல் வேண்டுமென்றான்: இனிப் பொருளினை உவமமாக்கி உவமையை உவமிக்கப்படும் பொருளாக்கி மயங்கக்

---

1. பசிய இலைகளின் பரப்பில் பல மலரின் இடையே உள்ள தாமரையாகிய தவிசில் அன்னமாகிய அரசு வீற்றிருக்கக் கரையில் நின்று ஆடும் ஒரு மயிலுக்குக் கம்புட்சேவலின் குரல் முழவாக ஒலிக்கக் கிளையில் உள்ள கரிய குயில் பாடுவது.

கூறுங்காலும் அஃது உவமம்போல உயர்ந்ததாக்கி வைக்கப்படும் என்றவாறு.

> "வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
> திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை"[1] (சிறுபாண்.72-3)

என்றவழி, வருமுலையுந் திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும் பூவும் பொருளாயின, ஆண்டு முலையும் முகமும் உயர்ந்தவாகச் செய்தமையின் அவையே உவமமாயின.

இவை[2] உவமத்தொகையாங்கால் 'முலைக்கோங்கம்', 'முகத் தாமரை' எனப்படும். இவற்றை வேறு உருவகமென்றும் பிறர்[3] மயங்குப. சிறப்பென்றதனான் ஒப்புமை மாத்திரையன்றித் தான் புனைந்துரைக்கக் கருதிய முலையினையும் முகத்தினையும் உயர்ந்த பொருளாகிய உவமத்தினும் உயர்ந்தவாகச் சிறப்பித்துரைத்தா னென்பது. 'மருளறு சிறப்பின்' என்றதனான் அங்ஙனஞ் சிறப்பிக்குங்கால் மயக்கந்தீரச் சிறப்பித்தல் வேண்டும். அஃது உலகினுள் உயர்ந்ததென்று ஒப்ப முடித்த பொருளினையுஞ் சிறப்பித்தற்கு உவமஞ் செய்பவோவெனிற் செய்யா ரென்பது; என்னை? 'முகமொக்குந் தாமரை' என்றால் முகத்திற்குந் தாமரைக்குஞ் சிறப்புடைமை மயங்கி வாராது, பின்னும் முகத்திற்கே சிறப்பாமென்பது கருத்து[4] அஃதெனப்பட்டது. பொருளாகலான் 'உயர்ந்ததன் மேற்று' (278) என்னும் விதி அப் பொருட்கு எய்துவிக்க. (9)

## சிவலிங்கனார்

**பொருளே......................ஆகும்.**

*இச் சூத்திரம் உவமிக்கப்படும் பொருளும் உவமமாகக் கூறப் படலாம் என்கின்றது.*

---

1. தோன்றிவரும் முலை போன்ற வளமான அரும்பு விரிந்து அழகிய முகம்போல மலர்ந்த தெய்வத் தாமரைமலர்.

2. இவை - உவமையும் பொருளும்

3. பிறர் - அணிநூலார்

4 முகம் என்பது சிறப்பிக்கப்படும்பொருள்; தாமரை என்பது அதைச் சிறப்பிக்க வரும் பொருள்; அதனால் தாமரை உயர்ந்தது - சிறந்ததாகும். இது உலகினரால் ஒப்பமுடிந்தது. சிறந்த பொருளாகிய தாமரையை மேலும் சிறப்பிப்பார்களோ எனின், சிறப்பியார்கள்; தாமரைமுகம் என்பதை முகத்தாமரை என்றால் முகத்தால் தாமரை சிறப்பிக்கப்படும் என்றாலும் அச் சிறப்புத் தாமரைக்கு ஆகாமல் முகத்துக்கே யாகும். அதனால் உவமைப்பொருளை உவமிக்கப்படும் பொருளால் மாற்றிச் சிறப்பித்தல் இல்லை. அதனால் 'முகம் போலும் தாமரை' என்றால் தாமரை என்னும் உவமிக்கப்படும் பொருள் முகம் என்ற உவமையால் சிறப்பிக்கப்பட்டது என்று கொண்டு தாமரையினும் முகம் சிறந்தது - உயர்ந்தது என்றே கொள்ளல் வேண்டும். இதில் சிறந்த பொருள் மேலும் சிறப்பிக்கப்பட்டது என்பதாகாது.

எனவே, வழக்கின்கட் பயின்று வாராத இறப்பவுயர்தலும் இறப்ப விழிதலும் ஆகா வென்றவாறு.

“அவாப்போ லகன்றதன் அல்குன்மேற் சான்றோ
உசாஅப் போல வுண்டே மருங்குல்”[1]

என்றவழி அல்குல் பெரிதென்பான் ஆசையோ டுவமித்தலின் இது தக்கதாயிற்று; மருங்குல் நுண்ணிதென்பான் சான்றோ ருசாவொடு உவமித்தலின் அதுவும் தக்கதாயிற்று. அவை சிறப்புப்பற்றி வந்தன.

இனி, நெறிப்பாடின்றி வருவன இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் என இருவகைப்படும்.

“இந்திரனே போலு மிளஞ்சாத்தான்......................நாறுமிணர்.”

(யா.வி.ஒழி.)

இஃது, இறப்பவுயர்ந்தது. வழக்கிறந்து வருதலின் இவ்வாறு வரும் உவமை கூறப்படாது.

“வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
என்னி யிரிவதுபோ லெங்கெங்கும் - வள்ளற்கு
மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து.”[2] (யா.வி.ஒழி.)

இஃது இறப்ப இழிதலின் இதுவு மாகாது.

அஃதேல் “நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்” (நாலடி.213) என வருமால் எனின், அது நாயின்கட் கிடந்ததோர் நற்குணம் பற்றி வருதலின் இறப்ப இழிதல் ஆகாது. (10)

## பேராசிரியர்

**285. பெருமையுஞ்.................டுடைய.**

*இஃது, உவமத்திற்கு ஆவதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) இறப்ப உயர்வும் இறப்ப இழிவும் உவமிக்குங்கால் இன்னாவாகச் செய்யாது சிறப்புடைமையில் தீராவாகிக் கேட்டார் மனங் கொள்ளுமாற்றான் வருதலை வழக்கு வலியாகவுடைய என்றவாறு.

---

1. பொருள்: ஒருவனின் ஆசைப் பெருக்கம்போல் அகன்றுள்ள அல்குலுக்கு மேலே சான்றோரது நுண்ணிய வினாப்போலச் சுருங்கிய இடையுண்டு.

2. பொருள்: வளமான பல்லும் பிளந்த வாயும் உடைய நாய்க்கு மான்கூட்டம் ஓடுவதுபோல எல்லாவிடங்களிலும் உள்ள பெரிய கடல்போல் நிலத்திற் பரந்து வந்த வாள் உடைய சேனையொடு வந்த மேன்மையுள்ள அரசர்களும் நம் அரசவள்ளலுக்கு உடைந்து விரைவாக மேலுலகத்தார் ஆயினர்.

"அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றோ
ருசாஅப்போ லுண்டே நுசுப்பு"

என்றவழி, உலகத்தார் அவாப்போலப் பெரிதாகிய அல்குலெனக் கழிபெரும் பரப்பிற்றாகக் கூறினும் அது சிறப்பிற் றீராக் குறிப்பிற்றாதல் வழக்குண்டாகலின் உடம்படப்படும் என்றவாறு.

"மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்"[1] (குறுந்.129)

என்றவழி, கடல்போன்றது கூந்தலெனவும், கடனடு எழுந்த எண்ணாட் பக்கத்து மதிபோன்றது நுதலெனவுங் கூறினான். அதனாற் கடல்போலும் மயிரென்றதும், பலகாவதப் பரப்புடைய மதிபோன்றது நுதலென்றதுங் கழியப் பெரியவாயினும், அது வழக்காதலிற் சிறப்பிற் றீராது மனங்கொள வந்ததெனவே படும்.

"சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" (முருகு.43)

என்பதும் அது.[2]

"சான்றோ, ருசாஅப்போ லுண்டே நுசுப்பு"

என்றவழியும், நுண்ணுணர்வின் ஆராய்ச்சி ஒருவர்க்கும் புலனாகாததனை ஒக்கும் இடையென்றமையின் அதுவுங் கழியச் சிறிதாக உவமித்தார்.

"யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்' (நாலடி.213)

என்பதும் அது. இவையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற்றீராக் குறிப்பின் வந்த வழக்காதல் அமைந்தன வென்பது. பிறவுமன்ன.

இவ்வாறன்றி 'மேருமால்வரை காம்பொத்து விண்முகடு குடையொத்து விண்மீன்கணம் முத்துப் போன்றன' என வடிவுபற்றி உவமங் கூறுதல் தமிழ் வழக்காகின்ற தென்பது.

இனி,

"வள்ளத்தி னீர்கொண் டுமிழ்ந்த முலைச்சாந்து மறுகிற்பரந்
தள்ளல் யானை யெல்லா மடிவழுக் கினவே"[3]

---

1. பொருள்: கருங்கடல் நடுவில் எட்டு நாள் நிறைந்த நல்ல வெண்பிறை தோன்றியது போலக் கருங்கூந்தலின் பக்கம் விளங்கும் சிறிய நுதல்.

2. வண்டு மொய்க்காத ஒளியுடைய மெல்லிய காந்தள். சுரும்பு மூசாக் காந்தள் இல்லை. அதனால் இவ்வாறு கூறியது வழக்குக்கு மாறுபட்டது; எனினும் ஏற்புடையதாயிற்று.

3. பொருள்: கிண்ணத்தில் நீர்கொண்டு அதனால் போக்கிய முலைமேல் பூசிய சந்தனம் தெருவிற் பரந்து சென்று சேறாகி அங்கு வரும் யானை யெல்லாம் அடிசறுக்குமாறு ஆயது.

என்பதோவெனின், அவ்வாற்றானும் இன்பங் கொள்வார்க்கு அவையும் இழுக்கில் என்பது.

"சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி"[4] (பட்டினப்.44-5)

என்பதோவெனின் யாறென்ற துணையானே பேர்யாறெனக் கொண்டு உலகிறந்தனவாகாமைக் கன்றே,

"ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி"[5] (பட்டினப்.46-7)

என்பதாயிற் றென்பது. (10)

## சிவலிங்கனார்

**பெருமையும்...................உடைய.**

*இச் சூத்திரம் உவமையை உயர்வும் இழிவுமாக நவிலுமாறு கூறுகின்றது.*

(இ-ள்) அளவுக்குமிகப் பெருமைப்படுத்திக் கூறுவதும், அவ்வாறு சிறுமைப்படுத்திக் கூறுவதும் உவமச் சிறப்பினின்று வழுவாத குறிப்பில் வரும் நெறிமுறையை யுடையவாகும் என்றவாறு.

(உ-ம்) "அவாப்போ லகன்ற அல்குல்; சான்றோர்
உசாப்போல உண்டே மருங்குல்"

உவமைக்குக் கூறப்பட்ட பெருமையும் சிறுமையும் உவமையல்லாப் பிற நிகழ்ச்சிக்கும் கொள்க.

சோறுவடித்த கஞ்சி ஆறாகப் பரவியது என்பது உயர்வு பெருமை; அந்த ஆறு பகடு துவைக்கச் சேறாயிற்று என்பது இழிவு சிறுமை. இவ்வாறு கூறுவது செய்யுட்குரியதாகும். உலகவழக்குக் குரியதன்று என்பார் 'குறிப்பின் வரூஉம் நெறிப்பா டுடைய' என்றார்.

**282. அவைதாம்,**
**அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப**
**என்ன மான என்றவை யெனாஅ**
**ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க**
**வென்ற வியப்ப வென்றவை யெனாஅ**

---

4,5 பொருள்: சோறுவடித்த கொழுவிய கஞ்சியானது ஆறுபோலப் பரந்து சென்று அவ்வழி வந்த ஏறுகள் துவைக்கச் சேறு ஆகி அவ்வழித் தேரோட அச் சேறு துகள்களாக ஆயின என்க.
கஞ்சி ஆறாயிற்று என்ற அளவில் பேரியாறாகக் கொள்ளலாகாது என்பதற்காகப் பின்னர் ஏறு துவைக்கச் சேறாயின என்று கூறப்பட்டது என்பதாம்.

**எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்**
**கள்ளக் கடுப்ப வாங்கவை யெனாஅக்**
**காய்ப்ப மதிப்பத் தகைய மருள**
**மாற்ற மறுப்ப வாங்கவை யெனாஅப்**
**புல்லப் பொருவப் பொற்பப் போல**
**வெல்ல வீழ வாங்கவை யெனாஅ**
**நாட நளிய நடுங்க நந்த**
**ஓடப் புரைய என்றவை யெனாஅ**
**ஆறா றுவமையும்[1] அன்னவை பிறவுங்**
**கூறுங் காலைப் பல்குறிப் பினவே.** **(11)**

## இலக்குவனார்

286. The words of comparison as *anna, ēyppa, urala, oppa, enna, māna, onra, odunga, otta, ānga, enra, viyappa, ella, vilaiya, irappa, nikarppa, kalla, kaduppa, kāyppa, mathippa, thakaiya, marula, mārra, maruppa, pulla, poruva, porpa, pōla, vella, vīla, nāda, naliya, nadunga, nantha, ōda* and *puraiya* these thirty six and such others serve as various words of comparison with different connotations.

## பி.இ.நா.

**தண்டி. 35**

போல மானப் புரைய.........................உவமைச் சொல்லே.

**மாறன். 113**

அன்ன போல அனைய.........................நாற்பானெட்டும் பிறவும்

## இளம்பூரணர்

**282. அவைதாம்**
**அன்ன ...............................பினவே.**

*என்-னின், இஃது உவமையுணர்த்துஞ் சொற்களை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.*

---

1. ஆறாறவையும் - பாடம்

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமைகள்தாம் அன்ன என்பது முதலாகப் புரைய என்பதீறாக வந்தனவும் அன்னவை பிறவுமாகிச் சொல்லுங் காலத்துப் பல குறிப்பினையுடைய என்றவாறு.

சொல்லுங்காலத்து என்றமையிற் சொல்'லென்பது கொள்க.

அன்னபிறவாற் கொள்ளப்படுவன: நோக்க, நேர, அனை, அற்று, இன், ஏந்து, சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்றித்தொடக்கத்தன கொள்க.

'பல்குறிப்பின' என்றதனான் இச் சொற்கள் பெயரெச்ச நீர்மையவாய் வருவனவும் வினையெச்ச நீர்மையவாய் வருவனவும் முற்று நீர்மையவாய் வருவனவும் இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும் எனக் கொள்க. 'புலிபோன்ற சாத்தன்', 'புலிபோலுஞ் சாத்தன்' என்பன பெயரெச்சம். 'புலிபோன்று வந்தான்', 'புலிபோலப் பாய்ந்தான்' என்பன வினையெச்சம். 'புலிபோலும்', 'புலி போன்றனன்' என்பன முற்று. அன்ன, இன்ன இடைச்சொல்.[2]

ஈண்டு எடுத்தோதப்பட்ட முப்பத்தாறினும் ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட, நடுங்க என்பனவொழித்து நின்ற முப்பதும், அன்ன பிறவாற் கொள்ளப்பட்டவற்றுள் நோக்க என்பதும் நேர என்பதுஞ் சிறப்பு விதியுடைத்தாதலின் அதற்கு உதாரணம் ஆண்டுக் காட்டுதும். ஏனைய ஈண்டுக் காட்டுதும்.

'வேலொன்று கண்'

'கயலென்ற கண்'

"மணிநிற மாற்றிய மாமேனி"

"மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்"

"வேயொடு நாடிய தோள்"

"படங்கெழு நாகம் நடுங்கு மல்குல்"

"குன்றி னனையாருங் குன்றுவர்" (குறள்.965)

"இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று." (குறள்.22)

"மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி" (கலி.15)

"துணைமல ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்" (கலி.14)

---

1. அன்ன முதலியவற்றைச் சொல்லுங்காலத்து என்றதனால் அன்ன முதலியன சொல் என்பது பெறப்படும். அதாவது அன்ன எனும் சொல் இன்ன எனும் சொல் என்பதாம்.

2. அன்ன, இன்ன என்பன பெயரெச்சமாகவோ வினையெச்சமாகவோ திரிக்கப்படாமையின் இடைச்சொல்

"முத்தேர் முறுவலாய்" (கலி.93)

"எச்சிற் கிமையாது பார்த்திருக்கு மச்சீர்" (நாலடி.345)

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்" (அகம்.கடவுள் வாழ்த்து)

"கிளைசெத்து மொய்த்த தும்பி" (நற்.35)

என வரும்[1]. பிறவுமன்ன.

## பேராசிரியர்

**286. அவைதாம்,**
**அன்ன..............பினவே.**

*இஃது, உவமத்தினையும் பொருளினையும் ஒப்பிக்குங்கால் இடைவருஞ்சொல் இனைத்தென்கின்றது. 'அவைதாம்' என்பது, வினை, பயன், மெய், உரு வென்னும் நான்குவமையு மென்றவாறு.*

(இ-ள்) இவை எண்ணப்பட்ட முப்பத்தாறு சொல்லும் இவையே போல்வன பிறவும் வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் வேறுபடு குறிப்பினவாகி வரும் என்றவாறு.

'ஆறா றவையும்' என்பது அவை முப்பத்தாறு மென்றவாறு. 'பல்குறிப்பின' என்பது, அவை இடைச்சொல்லாகித் தொக்கு வருவனவுந் தொகாதே நிற்பனவும் வினைச்சொல்லாகி வேறுபட நிற்பனவுமெனப் பலவா மென்றவாறு.

இவ் வோதிய வாய்பாடெல்லாம் நான்கு உவமத்திற்கும் பொது வென்பது ஈண்டுக் கூறி, இனி அவை சிறப்புவகையான் உரியவாறு இதுவென்பது மேற்கூறுகின்றான்.

'பிறவும்' என்பதனான் எடுத்தோதினவே யன்றி நேர, நோக்க, துணைப்ப, மலைய, ஆர, அமர, அனைய, ஏர, ஏர்ப்ப, செத்து, அற்று, கெழுவ என்றற்றொடக்கத்தன பலவும், ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றி வருவனவும்,[2] எனவென் னெச்சங்கள்பற்றி வருவனவும், பிறவுமெல்லாங் கொள்க. ஈண்டு எடுத்தோதியவற்றுள் வரையறை வகையவென மேற்கூறப்படுவன பொதுவகையான் வருமாற்றுக்கும் உதாரணம். அவற்றை உரிமை வகையான்[3] உதாரணங் காட்டும்வழிக்

---

1. இக் காட்டப்பட்ட உவம உருபுகளுக்குப் 'போல' என்னும் பொருளே கொள்க. வேலொன்று கண் - வேல் போலும் கண்; கயலென்ற கண் - கயல்போலும் கண் இப்படியே பிறவும் கொள்க.

2. ஐந்தாம் வேற்றுமை உருபாகிய 'இன்' சேர்ந்து வருவன. காக்கையிற் கரிது களம்பழம் எனக் காண்க.

3. **உரிமை வகை** - வினையுவமம் முதலியவற்றுக்கு இன்னின்ன உவமச் சொற்கள் உரிய எனப் பின்னர்க் கூறப்படும் வகை.

காட்டுதும். ஆண்டு[1] எடுத்தோதாதன ஆறெனப்படும்; அவை: ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட, நடுங்க என்பன. அஃதேல் ஆண்டு வரையறை கூறப்பட்டன எண்ணான்கு முப்பத்திரண்டாயினவா றென்னை, முப்பதேயாகல் வேண்டுமால் அவையெனின், அவற்றோடு புறனடையாற் கொண்டவற்றுள்ளும் நேர, நோக்க என்னும் இரண்டு கூட்டி ஓதினான்[2] ஆண்டென்பது.

அவை பொதுவகையான் வருமாறு:

"வேலொன்று கண்ணார்மேல் வேட்கைநோய் தீராமோ
கோலொன்று கண்ணொன்று கொண்டு"

என்பது வினையுவமம்.

"மழையொன்று வண்டடக்கை வள்ளியோற் பாடி"

என்பது பயனுவமம்.

"வேயொன்று தோளொருபால் வெற்பொன்று தோளொருபால்"

என்பது மெய்யுவமம்.

"குன்றியுங் கோபமு மொன்றிய வுடுக்கை"

என்பது உருவுவமம்.

ஒழிந்தனவும் இவ்வாறே நான்கு பகுதியும்பற்றி வருமாறு கண்டுகொள்க.

'வாயென்ற பவளம்'

என்றது பண்புவமைபற்றி வந்தது. இது 'வாயாகிய பவளம்' என்ற ஆக்கச் சொல்லானும் வரும்.

"மணிநிற மாற்றிய மாமேனி"

என்பது உருவுவமம்.

"மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்"

என்பது மெய்யுவமம்.

---

1. ஆண்டு - பின்வரும் 11, 12, 13, 14 ஆம் சூத்திரங்களில்

2. இச் சூத்திரத்தில் முப்பத்தாறு சொற்கள் கூறினார். அவற்றை வினையுவமம் முதலிய நான்கற்கும் பகுத்த சூத்திரங்களில் நந்நான்காக முப்பத்திரண்டு கூறினார். இச் சூத்திரத்திற் கூறப்பட்ட ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நடுங்க, நாட என்ற ஆறும் வினையுவம முதலிய நான்கற்கும் பகுத்த இடங்களில் கூறப்படவில்லை. எனவே முப்பத்தாறில் ஆறு கூறப்படாமையின் அந் நான்கு சூத்திரங்களில் முப்பது சொற்களே கூறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் முப்பத்திரண்டு சொற்கள் கூறப்பட்டன எவ்வாறு என்பது வினா. 'அவைதாம் அன்ன' என்னும் இச் சூத்திரத்திற் கூறப்படாத புறனடையாற் கொள்ளப்பட்டவற்றுள் நேர என்பதை உருவுவமச் சொற்களுள் சேர்த்தும் நோக்க என்பதை வினையுவமச் சொற்களுடன் சேர்த்தும் முப்பத்திரண்டாகக் கூறினார் ஆசிரியர் என்பது விடை.

"வேயொடு நாடிய தோள்"

என்பது நாட வென்பது வந்த மெய்யுவமம்.

"படங்கெழு நாக நடுங்கு மல்குல்"

என்புழி, நடுங்கவென்பது மெய்யுவமம்பற்றி வந்தவாறு. இவ் வோதிய வாய்பாட்டோடு பொருந்த வருஞ் சொல்லெல்லாம் 'பல்குறிப்பின' என்பதனாற் கொள்ளப்படும். இப் பகுதியெல்லாம் புறனடையாற் கொள்வனவற்றிற்கும் ஒக்கும். இச் சொற்பரப்பெல்லாம் நோக்கி,

"உவமச் சொல்லே வரம்பிகந் தனவே"

என்று ஓதி உரைப்ப; அவை அவ்வச் சொல்லுள் அடங்குமாற்றான் வரம்பிகந்தனவாகா (414) வென்பது.

இனிப் 'பிறவும்' என்றதனால் ஓதப்பட்டன வருமாறு:

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று"[1] (குறள்.22)

என்பதனுள், துணைப்பவென்பதூஉம் அற்றென்பதூஉம் வந்தன.

"குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்" (குறள்.965)

என்று அனையவென்பது வந்தது. பிறவுமன்ன.

"கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" (குறுந்.9)

என, இன் வேற்றுமையும் உவமவுருபோடு வந்தது.[2]

"குளித்துப் பொருகயலிற்[3] கண்பனி மல்க" (அகம்.313)

என்பது, உவமவுருபின்றி இன்னுருபு தன் பொருட்கண்ணும் வந்தது.

"தூதுணம் புறவெனத்[4] துதைந்தநின் னெழினலம்" (கலி.56)

என்பது, எனவெனெச்சத்தால் உவமம் வந்தது. பிறவுமன்ன.

இவை எல்லாம் வரைவின்றி நான்குவமமும்பற்றி வருமாறு கண்டுகொள்க. ஐந்தாம் வேற்றுமைப் பொருள் வந்த உவமங்களும் பிறவும் உவமத்தொகை யெனப்படா, தொகைப்படாமையினென்பது.[5]

---

1. பொருள்: துறந்தார் பெருமைக்கு ஒப்புமை (உவமை) கூறவேண்டின் உலகத்தில் இதுவரை இறந்தாரை எண்ணி அளவு கூறுவது போலாகும்.
2. கண்மானும் என்பது போல்வதே கண்ணின் மானும் என்பது. இன்னும் மானும் தனித்தனி பொருளனவல்ல.
3. கயலின் - கயல்போல இன் உருபு உவமப் பொருளில் வந்தது.
4. புறவென - புறவுபோல
5. கயற்கண் என்பது உவமச்சொல் இன்மையின் உவமத்தொகை. கயலிற்கண் என்பதில் உவமச்சொல் இல்லையாயினும் ஐந்தாம் வேற்றுமையுருபு விரிந்திருத்தலின் உவமத்தொகையாகாது.

அங்ஙனந் தொகைப்பட்டவழியும் மற்று மேலுரிமை கூறுகின்றதாமென் பது.

"மதியொத்தது மாசற்ற திருமுகம்"

என்றவழி, உவமமாயினும் உவமத்தொகை யெனப்படாது, தொகைப்பா டின்மையினென்பது. (11)

**283. அன்ன வாங்கு[1] மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம். (12)**

## இலக்குவனார்

287. *Anna, āṅga, māna, irappa, enna, urala, thakaiya* and *nōkku* are the eight which serve as words of comparison when denoting action.

## பி.இ.நா.

சூ.287-ல் காண்க.

## இளம்பூரணர்

**283. அன்ன வாங்கு..............................லுவமம்.**

*என்-னின், மேற்சொல்லப்பட்டவற்றுள் சிறப்பு விதியுடையன உணர்த்துவான் எடுத்துக்கொண்டார். அவற்றுள் வினைவுவமத்திற்குரிய சொல் வரையறை யுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) அன்ன முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் வினை வுவமத்திற் குரிய சொல்லாம் என்றவாறு.

"கொன்றன்ன வின்னா செயினும்" (குறள்.109)

"பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு" (முருகு.2)

"புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்." [2]
(பெரும்பாண்.269, 270)

"புலியிறப்ப வொலிதோற்றலின்"

"புலியென்னக் கலிசிறந் துராஅய்"

---

1. வாங்க - பாடம்

2. பகழிபோல் செவ்வரிக் கயலும் வில்லைப் போலப் பசிய இறால்மீனும் பிறழும்.

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை" (முருகு.5)

"பொருகளிற் றெருத்தின் புலிதகையப் பாய்ந்து"

"மானோக்கு நோக்கு மடநடை யாயத்தார்"

என வரும்.[1] (12)

## பேராசிரியர்

**287. அன்ன வாங்க.......................லுவமம்.**

*இது, மேற் பொதுவகையாற் கூறியவாறன்றி வினையுவமைக்கட் சிறந்து வருவன இவையென வரைந்துகூறுகின்றது.*

(இ-ள்) இவ் வெட்டும் வினையுவமம் என்றவாறு.

"எரியகைந் தன்ன தாமரைப் பழனத்து" (அகம்.106)

"கயநா டியானையின் முகனமர்ந் தாங்கு" (அகம்.6)

"கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்" (குறுந்.9)

"புலியிறப்ப வொலிதோற்றலின்"

"புலியென்னக் கலிசிறந் துராஅய்"

"மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப" (முருகு.85)

"பொருகளிற் றெருத்திற் புலித்தகைப் பாய்த்துள்"

"மானோக்கு நோக்கு மடநடை யாயத்தார்"

இனி,

"கார்மழை முழக்கிசை கடுக்கும்" (அகம்.14)

"யாழ்கெழு மணிமிடற் றந்தணன்" (அகம்.கடவுள்)

"ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல" (அகம்.22)

"ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ" (அகம்.30)

"குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்" (பெரும்பாண்.13)

எனப் பிறவாய்பாட்டாற்[2] சிறுபான்மை வரும் வினையுவமம் பொதுவிதி யாற் கொள்ளப்படும். பிறவுமன்ன. (12)

---

1. மேற்காட்டிய உதாரணங்களில் உவம உருபுகள் எல்லாம் வினையொடு வந்தவாறறிக. இப்படியே பின்வரும் இடங்களிலும் கொள்க.

2. கடுக்கும், கெழு, போல, ஒப்ப, ஏய்க்கும் என்பன பிற வாய்பாடுகள்.

## 284. அன்னஎன் கிளவி பிறவொடுஞ் சிவணும். (13)

## இலக்குவனார்

288. The word *anna* denotes others also.

## பி.இ.நூ.

சூ. 287-ல் காண்க.

## இளம்பூரணர்

**284. அன்னஎன்........................சிவணும்.**

*என்-னின், எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.*

(இ-ள்) மேற்சொல்லப்பட்டவற்றுள் அன்ன என்னுஞ் சொல் ஒழிந்த பொருளொடுஞ் செல்லும் என்றவாறு.

"மாரி யன்ன வண்கை" (புறம்.133)

இது பயன்.

"பரியரைக் கமுகின் பாளையம் பசுங்காய்
கருவிருந் தன்ன கண்கூடு சிறுதுளை."[1] (பெரும்பாண்.7,8)

இது மெய்.

"செவ்வா னன்ன மேனி" (அகம். கடவுள் வாழ்த்து)

'பாலன்ன மென்மொழி'

இவை உரு. பிறவுமன்ன. (13)

## பேராசிரியர்

**288. அன்னவென்..............................சிவணும்.**

*இஃது, எய்தியது இகந்துபடாமற் காத்தது.*

(இ-ள்) வினைக்கே உரிமை யெய்தியதாகக் கூறிய அன்னவென்பது நான்குவமைக்கும் உரிமையொக்க வரும் என்றவாறு.

அவை:

"மாரி யன்ன வண்கை" (புறம்.133)

"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று" (அகம்.)

---

1. பருத்த அடியை உடைய பாக்குமரத்தின் பாளையில் அழகிய பசிய காயின் கரு இருந்தது போலும் இடம் கூடிய சிறிய துளை.

"செவ்வா னன்ன மேனி" (அகம்.கடவுள்)

எனவும் ஒழிந்த மூன்றற்கும் பெருவரவினான் வந்தவாறு வழக்குநோக்கி உணர்க. (13)

**285. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றாங் கெட்டே பயனிலை யுவமம். (14)**

## இலக்குவனார்

289. *Eḷḷa, viḻaiya, pulla, poruva, kaḷḷa, mathippa, vella* and *viḻa* are the eight which serve as words of comparison when denoting result.

## பி.இ.நா.

சூ-287-ல் காண்க.

## இளம்பூரணர்

**285. எள்ள விழையப்.......................யுவமம்.**

*என்-னின், பயனிலை யுவமைக்குரிய சொல் வரையறுத்துணர்த் துதல் நுதலிற்று.*

(இ-ள்) எள்ள என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் பயனிலை யுவமைக்குச் சொல்லாம் என்றவாறு.

"எழிலி வானம் எள்ளினன் தரூஉங்[1]
கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்"

"மழைவிழை தடக்கை[2] வாய்வா ளெவ்வி"

"புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல"[3]

"விண்பொருபுகழ்[4] விறல்வஞ்சி" (புறம்.11)

"கார்கள்ள[5] வுற்ற பேரிசை யுதவி"

---

1. வானம் போலத் தரும்.
2. மழை போலும் தடக்கை
3. பொன்மரம் போல
4. விண்ணைப் போலும் (பரந்த) புகழ்
5. கார்போல வுற்ற

"இருநிதி மதிக்கும்[1] பெருவள ளீகை"

"வீங்குசுரை நல்லான் வென்ற வீகை"[2]

"விரிபுனற் பேர்யாறு வீழ[3] யாவதும்
வரையாது சுரக்கும் உரைசால் தோன்றல்" (14)

என வரும்.

## பேராசிரியர்

**289. எள்ள விழையப்.........................யுவமம்.**

*இது, முறையானே பயனிலையுவமைக்குச் சிறந்த வாய்பாடு இவையென்ப துணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) இவை எட்டும் பயனிலையுவமம் என்றவாறு.

"எழிலி வான மெள்ளினன் றரூஉங்
கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்"

"மழைவிழை தடக்கை வாய்வா ளெவ்வி"

"புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல"

"விண்பொருபுகழ் விறல்வஞ்சி" (புறம்.11)

"கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி"

"இருநிதி மதிக்கும் பெருவள் ளீகை"

"வீங்குசுரை நல்லான் வென்ற வீகை"

"விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்
வரையாது சுரக்கு முரைசா றோன்றல்"

என இவை ஓதிய முறையானே பயவுவமைபற்றி வந்தன.

இவை எட்டும் 'பெருவரவின' எனவே சிறுவரவினான்,[4]

"அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்"[5] (அகம்.1)

"மகன்றா யாதல் புரைவதா லெனவே"[6] (அகம்.16)

---

1. இருநிதி போலும்
2. நல்லான் போலும் ஈகை
3. மிக்க புனலையுடைய பேரியாறு போல
4. போல், புரை, ஏய்க்கும், நிகர்ப்ப, கொண்ட, என, செத்து, உறழ, கடுப்ப எனும் சொற்கள் பயவுவமத்தில் வந்தன.
5. நெருப்புப்போல் வெய்ய கதிர் பசுமைகெடக் காய்தலின்
6. மகனுக்குத் தாயாதல் ஒக்கும்.

"ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்" (கலி.20)

"பல்லேர் நிகர்ப்ப வந்த வுவகை[1]
யெல்லா மென்னுட் பெய்தந் தற்றே"

"யாழ்கொண்ட விமிழிசை[3] யியன்மாலை யலைத்தரூஉம்"
(கலி.29)

"உருமெனச் சிலைக்கு[3] மூக்கமொடு" (அகம்.61)

"யாழ்செத் திருங்கல் விடரளை யசுண மோர்க்கும்[4] (அகம்.88)

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை"[5] (முருகு.5)

"விண்ணதி ரிமிழிசை கடுப்பப்[6] பண்ணமைத்து"
(மலைபடு.2)

என வரும். பிறவுமன்ன.

மேலைச் சூத்திரத்திற் சொல்லியவாறே இதற்கும் வேண்டுவன உரைத்துக் கொள்க. (14)

**286. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய**
**ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்பவென்**
**றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம். (15)**

## இலக்குவனார்

290. *Kaduppa, ĕyppa, marula, puraiya, otta, odunga, ōda* and *nikarppa* - these are the eight which serves as words of comparison when denoting body. (physical nature).

## பி.இ.நூ.

சூ.287-ல் காண்க.

## இளம்பூரணர்

**286. கடுப்ப ஏய்ப்ப.......................லுவமம்.**

---

1. பல அழகும் ஒப்ப வந்த மகிழ்ச்சி.
2. யாழ்போல் ஒலிக்கும் இசை.
3. இடி போல ஒலிக்கும்.
4. பெரிய பக்கமலையுடைய மலைமுழைகளில் அசுணமானது யாழ்போல ஆராயும்.
5 பகைவரை யழித்த மேகம் போலும் பெரிய கை
6. விண்ணிடத்து அதிர்ந்தொலிக்கும் ஒலிபோல

*என்-னின், மெய்யுவமத்திற்குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்யுவமத்திற்குரிய சொல்லாம் என்றவாறு.

"விண்ணதிர் இமிழிசை கடுப்ப" (மலைபடு.2)

"அகலிரு விசும்பிற் குறைவில் ஏய்ப்ப"[1]

"வேய்மருள் பணைத்தோள் நெகிழ" (அகம்.1)

"வேய்புரை மென்றோள்" (கலி .39

"முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை[2]வியப்பன தழீஇ"

"பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்"[3]

"செந்தீ யோட்டிய வஞ்சுடர்ப் பருதி"[4]

"கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை"[5] (15)

என வரும்.

## பேராசிரியர்

**290. கடுப்ப வேய்ப்ப..............................லுவமம்.**

*இது, முறையானே. மெய்யுவமத்திற்குரிய வாய்பாடு கூறுகின்றது.*

(இ-ள்) இவ் வெட்டும் மெய்யுவமம் என்றவாறு.

"நீர்வார் நிகர்மலர் கடுப்ப"[6] (அகம்.11)

"மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப"[7] (அகம்.5)

"வேய்மருள் பணைத்தோள் (வில்லிழை) ஞெகிழ" (ஐங்குறு.318)

"உரல்புரை பாவடி[8] (கலி.21)

"முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை"

---

1. வில்போல
2. முத்துடைய சிறந்த யானைக்கோடு போலும் முலைமேல்
3. பாம்பின் வடிவம் போல வளைந்த இடை
4. செந்தீப் போன்ற அம்சுடர் ஞாயிறு
5. கண்ணை யொக்கும் குவளை
6. நீர் ஒழுகும் சிறந்த மலர்போல
7. உயர்ந்த கரிய பாறையில் சேர்ந்த வட்டுப்போல
8. உரல்போலும் பரந்த அடி.

"பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்"

"செந்தீ யோட்டிய வெஞ்சுடர்ப் பரிதி"

"கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை"

என இவை ஓதிய முறையானே மெய்யுவமத்துக்கண் வந்தவாறு.

இவற்றை உரிமைகூறிப் பெருவரவின வெனவே ஒழிந்தனவுஞ் சிறுபான்மை வருமென்பதூஉம் அவை பொதுச் சூத்திரத்தான் (286) அடங்கு மென்பதூஉங் கொள்க; அவை:

"கடல்போ றோன்றல காடிறந் தோரே" (அகம்.1)

"அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி"[1] (அகம்.11)

"புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்"[2] (அகம்.12)

"சேயித ழனைய வாகி" (அகம்.19)

"மாணெழில் வேய்வென்ற தோளாய்[3] நீவரிற் றாங்கும்" (கலி.20)

"கண்போன் மலர்ந்த சுனையும்."

"நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த"[4] (கலி.22)

"முழவுறழ் தடக்கையி[5] னியல வேந்தி" (முருகு.215)

என வரும். இவை[6] புறனடையாற் கொண்டனவும் எடுத்தோதியனவும் பொதுவிதியான் வந்தவாறு. (15)

**287. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றொத்துவரு கிளவி உருவி னுவமம். (16)**

**இலக்குவனார்**

291. *Pōla*, *maruppa*, *oppa*, *kāyththa*, *nēra*, *viyappa*, *naḷiya* and *nantha* - these (eight) serve when denoting colour.

---

1. அழகிய சுடரின் கொடிபோலத் தோன்றி
2. புலிபோல (நினைந்து) அஞ்சிய புள்ளியுடைய முகத்து யானை
3. வேய்போலும் தோளாய்
4. நறுநாற்றமுள்ள முல்லையின் ஒழுங்கான அரும்பைப் போல நிரைந்து
5. முழவுபோலும் தடக்கை
6. இவை என்பன: போல, பொற்ப, செத்து, அனைய, வென்ற, ஒப்ப, உறழ

## பி.இ.நூ.

இ.வி. 642

போல மறுப்ப ஒப்பக் காய்ப்ப
நேர வியப்ப நளிய நந்த
கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப
அன்ன ஆங்கு மான விறப்ப
எண்ண உறழ தகைய நோக்க
எள்ள விழைய புல்ல பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழஎன்று
ஈரெட்டும் எட்டும் இருநான்கும் முறையே
தத்த மரபின சாற்று மூன்றற்கும்
ஒத்த உருபாம்; உரைத்தமுத் திறத்தினும்
ஒன்ற நடுங்க ஏர ஏற்ப
வென்ற நாட மாற்றப் பொற்ப
ஆர அமர அனைய அவற்றொடு
எதிர ஏய இகல இயையத்
துணைப்ப மலைய தூக்கே செத்தொடு
கெழுதேர் நகைமிகு சிவண்நிகர் இன்னவும்
இன்னன பிறவும் எய்துதல் உரிய.

## இளம்பூரணர்

**287. போல மறுப்ப.........................னுவமம்.**

*என்-னின், உருவத்திற்குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) போல என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் உருவுவமத்திற் குரிய சொல்லாம் என்றவாறு.

"தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே"[1] (ஐங்குறு.41)

"மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா"[2]

"ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்"

"கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம்"[3]

---

1. தன் குளுறவுச் சொல்லைத் தெளிந்த தலைவியின் உடம்பைப் பொன்போலச் செய்யும் ஊர்கிழவன்.
2. நீலமணியின் நிறம் போலும் மலருடைய காயா.
3. கணைக்காலுடைய நெய்தற்பூப் போலும் கண்.

'கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்'[1]
**(அகம்.கடவுள் வாழ்த்து)**

"தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி"[2]

என வரும்.

நளிய, நந்த என்பன வந்தவழிக் கண்டுகொள்க. (16)

## பேராசிரியர்

**291. போல மறுப்ப..............................னுவமம்.**

*இது, நான்காம் எண்ணுமுறைக்கண் நின்ற உருவுவமத்திற்குரிய வாய்பாடு கூறுகின்றது.*

(இ-ள்) இவ் வெட்டும் உருவுவமம் என்றவாறு; அவை:

"தன்சொல் லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே." **(ஐங்குறு.41)**

"மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா"

"ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்" **(பரிபா.)**

"வெயிலொளி காய்த்த விளங்குமணி யழுத்தின"[3]

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்" **(அகம்.கடவுள்)**

"தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி"

என வரும்.

நளிய, நந்த என்பன இக்காலத்து அரியபோலும்; அவை வந்தவழிக் கண்டுகொள்க.

இனி, இவைபோல உரியவன்றி உருவுவமத்தின்கண்ணும் பொதுச் சூத்திரத்தான் (286) வருமெனப்பட்ட வாய்பாடு சிறுவரவின வருமாறு:

"துளித்தலைத் தலைஇய மழையே ரைம்பால்"[4] **(அகம்.8)**

"நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்"[5] **(அகம்.31)**

"செயலையந் தளிரேய்க்கு மெழினல மந்நலம்"[6] **(கலி.15)**

---

1. கார்காலத்து விரியும் பொன்போலும் கொன்றைப் புதுமலர்.
2. தண்டளிர் போலும் அழகுபெறும் மேனி.
3. வெயிலின் ஒளிபோல விளங்கும் மணி அழுத்தப்பட்டன.
4. மழையேர் ஐம்பால் - மேகம்போலும் கூந்தல்
5. நெருப்புப் போலச் சிவந்த வெப்பம் விளங்கும் ஞாயிறு.
6. அசோகந்தளிர் போலும் அழகுநலம்

"மாவிதழ் புரையு மலிர்கொ ளீரிமை"[1] (அகம்.19)

"பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி"[2] (கலி.21)

"எரியுரு வுறழ விலவ மலர"[3] (கலி.33)

"பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"[4] (முருகு.2)

"பொன்னுரை கடுக்குந் திதலையர்"[5] (முருகு.145)

"தீயி னன்ன வொண்செங் காந்தட்
டூவற் கலித்த புதுமுகை யூன்செத்து"[6] (மலைபடு.145-6)

என வரும். பிறவுமன்ன.[7] (16)

## 288. தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே. (17)

### இலக்குவனார்

292. They appear traditionally in denoting the comparison as detailed.

### இளம்பூரணர்

**288. தத்த மரபில்..................................பொருளே.**

*என்-னின், மேலனவற்றிற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) மேற்பாகுபடுத் துணர்த்தப்பட்ட சொற்கள் கூறிய வாற்றானன்றித் தத்த மரபில் தோன்றும் பொருளும் உளவாமென்றவாறு.

மன் ஆக்கங்குறித்து வந்தது.[8] ஈண்டு மரபென்றது. பயிற்சியை. இதனானே நூல் செய்கின்ற காலத்து வினைமுதலாகிய பொருள்கள் ஓதிய வாய்பாட்டான்[9] வருதல் பெருவழக்கிற்றென்று கொள்ளப்படும்.

"முழவுறழ் தடக்கையி னியல வேந்தி" (முருகு.215)

---

1. கரிய இதழ்போலும் நீர்கொண்ட இரண்டு இமைகள்
2. பால்போலும் மருப்பும் உரல்போலும் பரந்த அடியும்
3. நெருப்புப் போல இலவமலர் மலர
4. கடற்கண்டாங்கு - கடலில் தோன்றியது போல
5. பொன்தூள்களைப்போலும் மாமைநிற முடையர்.
6. தீப்போலும் செங்காந்தளின் மழைத்தூவலால் தழைத்த புதிய அரும்பை ஊன்போலக் கருதி
7. இங்கு வந்த உருவுவமத்திற்குரிய வல்லாச் சொற்கள்: ஏர், என, ஏய், புரை, மருள, உறழ, ஆங்க, கடுப்ப, அன்ன, செத்து
8. தத்த மரபில் தோன்றுதலாகிய ஆக்கம் குறித்தது.
9. ஓதிய வாய்பாடு - தத்தமக்குரியவாக ஓதப்பட்ட உருபு வாய்பாடுகள்

"மாவென்ற மடநோக்கின்"[1] (கலி.57)

"வேய்வென்ற தோள்" (கலி-138)

"மாரிவீ ழிருங்கூந்தல்"[2] (கலி.14)

"பொன்னுரை கடுக்குந் திதலையர்" (முருகு.145)

"குறுந்தொடி ஏய்க்கு மெலிந்து வீங்கு திவவின்"
(பெரும்பாண்.13)

"செயலையந் தளிரேய்க்கு எழினலம்" (கலி.15)

"பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி" (கலி.21)

"வலம்புரி[3] புரையும் வால்நரை முடியினர்" (முருகு.127)

"ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல" (அகம்.22)

"தாமரைபோல் வாள்முகம்" (திணைமாலை நூற்.1)

"காரவர்போ னோக்கினு நோக்கும்
ஒழுகு நோன்பக டொப்பக் குழீஇ"[4] (அகம்.35)

எனவும்[5] பிறவுமன்ன. (17)

## பேராசிரியர்

**292. தத்த மரபிற்........................பொருளே.**

*இது, நான்கு உவமைக்கும் ஒரோவொன்று எட்டாகக் கூறிய வாய்பாட்டிற்கெல்லாம் புறனடை.*

(இ-ள்) இன்னதற்கு இன்ன வாய்பாடு உரியவென்றற்குக் காரணம் என்னையென்றார்க்கு, அவை தத்தம் வரலாற்று முறைமையானே அவ்வவ் பொருடோன்ற நிற்கும் என்றவாறு.

'புலிபாய்ந்தாங்குப் பாய்ந்தான்' என வினையுவமத்திற்கு வந்த ஆங்கென் கிளவி 'தளிராங்குச் சிவந்த மேனி' என்னிற் பொருந்தாது.

இனி, எள்ளவென்பது பயவுவமைக்கு ஏற்குமென்றான்; அது, 'புலியெள்ளும் பாய்த்துள்' எனலாகாது; என்னை? புலிக்கு வலிகூறி னன்றி அதனோடு உவமிக்கப்பட்ட சாத்தற்குப் புகழாகாதாகலானென்பது.

---

1. மாவடுப்போலும் இளம்கண்கள்
2. மேகம் போலும் கரிய கூந்தல்
3. வலம்புரிச்சங்கு போலும் வெண்மையான நரைத்த முடியினர்
4. செல்லும் வலிய பகடு போலக் கூடி
5. என வரும் என்றிருத்தல் வேண்டும்.

ஒருவனை வென்றி கூறுங்கால் அவனோடு ஒப்பிக்கின்ற புலியேற்றினை அவனைக் கண்டு எதிர்நிற்கலாற்றாது புறங்கொடுத்ததெனலும், நடுங்கிற்றெனலும், கண்சிம்புளித்த தெனலும், அவற்குப் புகழாமென்பது கருதிக் கூறின் கூறின உவமை வெளிப்பாடுமின்றி[1] அவற்கது புகழுமாகாதென்பது கருத்து.

இனி, மழையினைக் கொடைக்கு இழித்துச் சொல்லவும் பெறுப வன்றே அவ்வாறு சொல்லினும் அதனை அவனின் இழித்து நோக்காது உலகமாதலின்.[2]

விழைய, வீழ, புல்ல, மதிப்ப, வெல்ல என்பனவும் உவமைதான் பொருளை யொத்தற் கவாவின வென்று பொருள்தோன்ற நிற்கு மென்றவாறு. கள்ளவென்பதூஉம் அதன் குணம்[3] அதன்கண் இல்லாமற் கதுவிற்றென்னும் பொருட்டு. பொருவ வென்பதூஉம் மழையினையும் ஒருவனையும் உறழுந்துணைச் சிறந்தானெனச் சொல்லுதல். இவ்வாற்றான் இவை உரிமை கூறப்பட்டன.

இனி, மெய்யுவமத்திற்கு உரியவெனப்பட்டனவும் அவ்வாறே ஒரு காரணமுடைய போலும். கடுப்ப என்றக்கால் வினைக்கும் பயத்திற்கும் ஏலாது; என்னை? கடுத்தலென்பது ஐயுறுதல். புலியோடு மறவனை ஐயுறவேண்டுவதோர் காரணமின்மையானும், மழையின் விளைத்த பயத்தோடு உவமித்தலின் மழையோடு ஒருவனை ஐயஞ்செய்தல் வேண்டுவதின்மையானும், வடிவு கண்டவழி ஐயம் பிறக்குமாகலானும், உருவென்பது குணமாகலாற் பொருள் வேற்றுமை அறிந்தவழி ஐயஞ்செல்லாதாகலானும், மெய்க்குரிமை கூறினானென்பது, ஏய்த்த லென்பதூஉம் பொருந்துதலாகலின் வடிவிற்கேற்கும். மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க என்பனவுங் கடுத்தல்போலும் பொருண்மைய; என்னை? மருட்சியும் புரையுணர்வுங் கவர்த்தலைக் காட்டுதலானும், ஒட்ட, ஒடுங்க என்பனவும் இரண்டனை ஒன்றென்னும் பொருண்மைய வாகலானு மென்பது. நிகர்த்தலும் அவ்வினைப் பொருளென்பதனைக் காட்டுதலின் வடிவிற்கேற்றது. ஓடவென்பதும் ஓடுதற்றொழில் வடிவிற்கல்ல தின்மையின் அவ் வடிவிற்கேற்றது பண்பாயிற் பண்பு நிறப்பண்பு ஓடிற்றென லாகாமையின்.

இனி, உருவுவம வாய்பாட்டிற்குங் காரணங் கூறுங்கால், போலுமென்பது இடைச்சொல்லாகலானும், மாீஇவந்த வினைப்பாற் பட்டதாகலானும் அதற்குக் காரணங் கூறப்படாதென்பது; அஃதேல், அதனை இவ் வெட்டற்கும் முன்பு கூறியதென்னை, பொருளுடையவற் றைப் பிற்கூறி யெனின், அதுவும் அன்ன வென்பதுபோல மற்றை மூன்று உவமத்தும் பயின்று வருமென்பது எய்துவித்தற்கென்பது. மறுப்ப, ஒப்ப

1. வெளிப்படையாக அறிய வருதலின்றியும்

2. ஆதலின் இழித்துச் சொல்லவும் பெறும் என முடிக்க.

3. அதன் குணம் திருடுதல்

என்பன முதலாயினவும் ஒரு காரணமுடைய வென்பது ஆசிரியன் பெரு வரவினவாக உரிமைப்படுத்துக் கூறினமையின் அறிந்தாம். அல்லதூஉம் 'மரபிற் றோன்றும்' என்றதனான் இவை யெல்லாம் மரபுபற்றி அறியல் வேண்டும். எனவே தலைச்சங்கத்தார் முதலாயினார் செய்யுள்களுள் அவ்வாறு பயின்று வருமென்பது அறிந்தாமன்றே இவ்வாறு சூத்திரஞ் செய்தலா னென்பது (17)

**289. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே. (18)**

## இலக்குவனார்

293. They may come under eight also.

## இளம்பூரணர்

**289. நாலிரண்.......................ருண்டே.**

*என்-னின், எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.*

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட உவமை நான்கு வகையாதலேயன்றி எட்டாம் பக்கமும் உண்டு என்றவாறு.

அவையாவன: வினையும் வினைக்குறிப்புமென இருவகையாம். பயன் என்பது, நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இருவகையாம். மெய்யென்பது, வடிவும் அளவும் என இருவகையாம்; உருவென்பது, நிறமுங் குணமுமென இருவகையாம். இவ்வகையினா லெட்டாயின.

"பொன்னன்ன செல்வத்தன்"

இது வினைக்குறிப்பு.

"ஞாயி றனையைநின் பகைவர்க்கு" (புறம்.59)

இது தீப்பயன்.

"நெடுவரை மிசையிற் பாம்பென விழிதருங்
கடுவரற் கலுழி"

என்பது அளவு.

"பாலன்ன மொழி"

இது குணம்.

ஏனைய மேற்காட்டப்பட்டன. (18)

---

1. மாரீஇவந்த வினைப்பாற் படுதலாவது வழிவழியாக வினையிற் சொல்லப்பட்டு வருதல்

## பேராசிரியர்

**293. நாலிரண்.........................ருண்டே.**

*இதுவும், மேலனவற்றையே பகுக்கின்றது.*

(இ-ள்) வினை, பயன், மெய், உரு எனப்பட்ட நான்கும் எட்டாம் பகுதியும் உண்டு என்றவாறு.

அவை: உவமத்தொகை நான்கும் உவமவிரி நான்குமென எட்டாதலும் உடைய வென்றவாறு. அவை: புலியன்ன பாய்த்துள் 'புலிப்பாய்த்துள்' எனவும், மழையன்ன வண்கை 'மழைவண்கை' எனவும், வேயன்னதோள் 'வேய்த்தோள்' எனவும், பவளத்தன்னவாய் 'பவளவாய்' எனவுந் தொகை விரியற்றி நான்கும் எட்டாயினவாறு. சொல்லோத்தினுள் இவ் வாய்பாடு விரிந்துவருமாறு கூறாது ஆண்டுத் தொகையாராய்ச்சிப்பட்ட மாத்திரையானே கூறினான். அவ் வுவமத்தான்[1] ஈண்டுக் கூறப்படுதல் பொருளினவாகலானும்[2] இடைச்சொல்லே யன்றிப் பொருள் பயப்பனவும் அவ் வுருபாகலானும்[3], அதன் விரிவினை[4] ஈண்டுப் பெயர்தந்து[5] கூறி அதன் தொகையொடு[6] படுப்ப இத்துணைப் பகுதியவாம்[7] அந் நால்வகையுவமும் என்றானென்பது.

இதுவுமொரு கருத்து: முன்னர் எவ்வெட்டாகக் கூறியவை ஒவ்வொன்றும் இரண்டு கூறாகி எட்டாம் பகுதியுடைய வென்றவாறு. யாங்ஙனமெனின், அன்ன என்னுஞ் சொன் முதலாகிய எட்டனுள் அன்ன, ஆங்க, மான, என்ன எனப்பட்ட நான்கும் வேறொரு பொருளை உணர்த்தாமையின் ஓரினமாகி ஒன்றாகவும், விறப்ப, உறழ, தகைய, நோக்க என்னும் நான்கும் ஒருபொருளுடைமையின் ஒரு பொருளாகவும், இவ்வாறே இருநோக்குதற் குறிப்பினவாயிற்று; இவ்வாற்றான் இரண்டெனவும் படும் எட்டுமென்றவாறு. இதனது பயன் இவ்விரண்டு கூற்றான் அடக்கப்படும் வினையுவமச் சொல் எட்டும்(287) என்றவாறு. விறத்தல், இனமாகச் செறியுமென்னும் பொருட்டு. உறழ்ச்சியுந் தன் இனமாகக் கொண்டு மாறுதற் பொருட்டேயாம். தகுதி அதுவெனப்படுவது என்னும் பொருண்மைத்தாகலின் அவற்றோடொக்கும். நோக்கென்

1. அவ் வுவம உருபால்
2. பொருளுடையன
3. எள்ள என்பது உருபாகவும் இகழ எனத் தனிப் பொருளாகவும் வரும் பிறவும் இப்படியே.
4. உவம உருபின் விரிவு
5. பெயர்தந்து - அன்ன, ஆங்க, உறழ எனப் பெயர்தந்து
6. தொகை முப்பத்திரண்டு என்பது.
7. இத்துணைப் பகுதி என்றது நாலிரண்டு என்பதை.

பதூஉம் அவ்வாறே இனமாக்கி நோக்குதற்பொருட்டு. இவ்வாற்றான்[1] இரண்டெனவும் படும் எட்டுமென்றவாறு.

இதனது பயன்: ஓதிய வாய்பாடு எண்ணான்கற்கும் இன்ன வாய்பாடும் இன்ன வாய்பாடும் ஒருபொருளவென்று அறிதலுந் தத்தம் மரபிற் பொருள்தோன்ற வருமென்பதும் இடைச்சொல் லென்றலும், ஒப்பில் வழியாற் பொருள் செய்யினும் இடைச்சொல்லாகா, தெரிநிலை வினை உருபாயினும் என்பதறிவித்தலு[2] மெனக் கொள்க. மேல் வருகின்றனவற்றிற்கும் இஃதொக்குமென்பது.

இனிப் பயவுவமை வாய்பாடு எட்டனுள்ளும் எள்ள, பொருவ, கள்ள, வெல்ல என்னும் நான்கும் உவமத்தினை யிழிதற் பொருளவாகி ஒன்றா யடங்கும்; என்னை? மழையைப் பொரீஇச் சொல்லுதலும், அதனது தன்மைக்குணங் கொள்ளப்படுதலும் அதனை வெல்கையும் எள்ளுதலும் போல்வன இழிவினையே காட்டுதலின். இனி, விழைய, புல்ல, மதிப்ப, வீழ என்னும் நான்கும் உவமிக்கப்படும் பொருளினை உயர்த்தாமையானும் உவமத்தினை இழித்துக் கூறாமையானும் அவை நான்கும் ஒருபொருளெனப்பட்டன. இவ்வாற்றாற் பயவுவமை யெட்டும் (289) இரண்டாயின வென்பது.

மெய்யுவமை இரண்டாங்கால் - ஐயப்பொருட்கண் நான்கும் துணிபொருட்கண் நான்குமென இரண்டாம். கடுப்ப, மருள, புரைய, ஓட என்னும் நான்கும் ஐயப்பொருளவாகி ஒன்றாம். ஓடவென்பது உவமத்தின்கண்ணும் பொருளின்கண்ணும் உணர்வு கவர்ந்தோடிற்று என்னும் பொருள்தோன்றச் சொல்லினும் அதுவும் ஐயமெனப்பட்டது போலும். இனி ஏய்ப்ப, ஓட்ட, ஒடுங்க, நிகர்ப்ப என்னும் நான்கும் ஐயமின்றி உவமையும் பொருளும் ஒன்றெ‌ன உணர்வு தோன்றும் வாய்பாடாகலின் இவை நான்கும் ஒன்றெனப்பட்டு இவை யெட்டும் (290) இரண்டாயின.

இனி, உருவின்(291) கண்ணும் போல, ஒப்ப, நேர, நளிய என்னும் நான்கும் மறுதலையின்றிச் சேர்ந்தனவென்று கோடற்கு வாய்பாடாகி வருதலின் அவையும் ஒன்றெனப் பட்டன.

"நளியென் கிளவி செறிவு மாகும்" (தொல்.சொல்.232)

என்றதனால், அதனொடு சேர்ந்ததென்னும் பொருட்டேயாயிற்று. இனி மறுப்ப, காய்த்த, வியப்ப, நந்த என்னும் நான்கும் உவமையோடு மறுதலை

---

1. வேறுபொருள் உணர்த்தாதனவும் உணர்த்துவனவும் என்னும் இவ்வகையால்.

2. "ஒப்பில் வழியால் ---- அறிவித்தலும்": எள்ள என்பது உவம உருபு. "மழையெள்ளும் கை" என வருமிடத்து "மழைபோலும் கை" எனப் பொருள்படின் உவம உருபு இடைச்சொல்லாம். 'மழையையும் இகழ்ந்து மிகக் கொடுக்கும் கை' எனின் இடைச்சொல் ஆகாது வினைத்தன்மை பெறுகிறது. எனவே எள்ள என்பது உருபாயினும் ஒரு பொருள்தரின் இடைச்சொல் ஆகாது.

தோன்றி நிற்கும் பொருளவாகலின் நான்கும் ஒன்றெனப்பட்டு இவையும் இரண்டாயின. நந்துதலென்பது கேடு. வியத்த லென்பது, உவமையான் வியக்கத் தக்கது, பொருளெனவே அதன்கண் அக் குணமின்றென மறுத்தவாறாம். காய்த்தலென்பதூஉம் உவமையைக் காய்ப்பித்தலாகலின் அதுவும் மறுத்தலென்பதன் பொருளெனப்பட்டது.

இவ்வாறு இவையெல்லாந் தொகுப்ப எட்டாதலும் உண்டென்பது இதன் கருத்து. இவற்றுட் பலவற்றையுஞ் செயவெனெச்ச வாய்பாட்டால் ஓதியது என்னையெனின், அஃது 'உடம்பொடு புணர்த்தல்' (665) என்பதனான் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொற் போல நிற்குமெனவும், அதனானே பெயரெச்சமும் வினையெச்சமும் முற்றுமாகி நிற்குமெனவும், அவையுந் தெரிநிலைவினையுவமையாய் வருமெனவும் அறிவித்தற்கென்க. இவற்றை இவ்வாறு எட்டாகச் சொல்லுதல் பெரிதும் நுண்ணுணர்விற்றென வுணர்க. (18)

**சிவலிங்கனார்**

**நாலிரண்.......................உண்டே.**

*இச் சூத்திரம் ஒருகூற்றுவமை கூறுகின்றது.*

(இ-ள்) மேற்கூறப்பட்ட உவமைகள் யாவும் எட்டாகும் பகுதியும் உடைய என்றவாறு.

மேற்கூறப்பட்ட முப்பத்திரண்டு சொற்களும் எட்டுவகையாம் பகுதியும் உண்டு. அவை வாளா உவம உருபு இடைச்சொற்களாகவும் பொருள்வேறுபாடுள்ள சொற்களாகவும் இருவகைப்பட்டு வினை, பயன், மெய், உரு எனும் நான்கனொடும் இயைய நாலிரண்டு எட்டாம்.

பேராசிரியர் கூறிய இதுவும் ஓர் கருத்து என்பதே இச் சூத்திரப் பொருளாக அமையும்.

வினையுவமம் முதலிய நான்கும் விரியுவமும் தொகையுவமமும் என இருவகையாய் எட்டாம் என ஓர் உரை கூறினர் பேராசிரியர். உவமத்தொகை கூறிய இடத்தே (சொல்லதிகாரத்து) விரியும் அடங்கு மாதலின் அவ் வுரை சிறவாது.

இளம்பூரணர் தெரிநிலைவினை குறிப்புவினை, நன்மைப்பயன் தீமைப்பயன், மெய்யின்வடிவம் அளவு, நிறப்பண்பு குணப்பண்பு என வினைமுதலிய நான்கும் இவ்விரண்டாம் எனக்கொண்டு எட்டு என்றார். வினை முதலிய நான்கற்கும் ஒத்தநிலையில் இருவகை கூறுதலே சிறப்பு; தனித்தனி வகை கூறுதல் சிறப்பில்லை; ஆதலின் அவர் உரை ஏலாது.

**290. பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்**
**வழிமருங் கறியத் தோன்று மென்ப. (19)**

## இலக்குவனார்

294. They say that they may appear in denoting the eight *meyppādu* on account of bigness and smallness.

## பி.இ.நா.

**மாறன். 92**

உவமையின் வகையே......................
பெருமையும் சிறுமையும் பெற்றியிற் சிறந்து
எண்மெய்ப் பாட்டி னுள் எழில்பெற மரீஇ...............
வரன்முறை புணர்க்கும் வரம்பிற் றாகும்.

## இளம்பூரணர்

**290. பெருமையுஞ்........................மென்ப.**

*என்-னின், இதுவுமோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) பெருக்கவுஞ் சிறுக்கவுங் கூறுதல் மெய்ப்பாட்டின்வழிப் பக்கம் புலப்படத் தோன்றும் என்றவாறு.

எனவே, மெய்ப்பாடு தோற்றாதவழி இப் புணர்ப்பினாற் பயனின்றாம்.

"அவாப்போல் அகன்றதன் அல்குன்மேற் சான்றோர்
உசாஅப் போல உண்டே மருங்குல்"

என்பது பெருமையுஞ் சிறுமையும்பற்றி உவகை நிகழ்ந்தது.

"கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றி"[1]

(யா.வி.ப.318)

என்பது துன்பப்பெருக்கம் சொல்லி யவலம் வந்தது.

"பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேரும்என் நெஞ்சு."[2] (முத்தொள்.88)

இது பெருக்கம்பற்றி இழிவரல் வந்தது. பிறவுமன்ன. (19)

---

1. கப்பல் கவிழக் கடலில் வீழ்ந்த மீகாமன் தன்னைக் கரையேற்றுவாரின்றித் துயருறுதல் போல் யான் என் துயர் களைவார் பிறர் இன்றி(யுள்ளேன்).

2. பெரிய செல்வரிடத்து நல்கூர்ந்தார் பொருள் பெற நினைந்து தருவர் எனச் செல்வதும் தாராரோ என மீள்வதுமாக இருத்தல்போல என் நெஞ்சம் தலைவர் இருக்குமிடம் செல்வதும் வருவதுமாக உள்ளது. இதன் விளக்கம் பேராசிரியர் உரையிற் காண்க.

## பேராசிரியர்

**294. பெருமையுஞ்.........................மென்ப.**

*இது, மேற்கூறிய உவமை இன்னு மொருவாற்றான் எட்டெனப் படுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) பெருமைபற்றியுஞ் சிறுமைபற்றியும் ஒப்புமை கொள்ளப் படும் உவமை மேற்கூறிய மெய்ப்பாடெட்டன்வழித் தோன்றுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

மெய்ப்பாடு எட்டென்பன,

"நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை" (251)

என மெய்ப்பாட்டியலுண் மேற்கூறப்பட்டன.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா" (அகம்.16)

என்பது, நகையுவமம்; என்னை? தலைமகனைக் கண்டறியாதாள் போலக் கரந்தொழுகுகின்ற பரத்தை அவனோடு ஒப்புமை கண்டு தனிநின்று விளையாடும் புதல்வனைக் கொண்டு மகிழ்கின்றாளை, வாயிற் கதவம் மறைந்து நின்ற தலைமகள் நீயும் அம் மகவிற்குத் தாயேகாண் என்றவழிக் களவுகண்ட பொருளோடு கையகப்பட்ட கள்வர்போலச் செய்வதறியாது தடுமாறி முகம் வேறுபட்ட நிலைமையை உவமித்துச் சிரித்தமையின் நகையுவமமாயிற்று.

"கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்"
(யா.வி.ப.318)

என்பது, அவலவுவமை; கலங்கவிழ்ந்த நீகாமன் போலப் புலம்பினா ளென்றமையின் அப் பெயர்த்தாயிற்று.

"பெருஞ்செல்வ ரில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு" (முத்தொள்.88)

என்பது, இளிவரலுவமம்; என்னை? தலைமகன்மாட்டு இன்பவிளையாட் டெய்துவார் பலரையுங் கண்டு நெஞ்சு தீரப் புன்கணெய்தித் தனிநின்று புகப்பெறாது இளிவந்தமையின் அப் பெயர்த்தாயிற்று.

"ஈரத்து ளின்னவை தோன்றி னிழற்கயத்து
நீருட் குவளைவெந் தற்று"[1] (கலி.41)

---

1. தலைமகனின் இரக்க குணத்தில் இப்படிப்பட்ட கொடுமை தோன்றின் அது நீரிலிருந்தும் குவளை வெந்தது போலாம்.

என்பது, மருட்கையுவமம்; என்னை? நிழற்கயத்தின் குவளை வேவன வின்மையின் இஃது அற்புதமாயிற்று.

"சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து"[1] (நாலடி.126)

என்பது, அச்சமாகலின் அச்சவுவமை.

"மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பட்
கல்லுயர் நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள்"[2] (கலி.52)

என்பது, பெருமிதவுவமை.

"கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே"[3] (புறம்.42)

என்பது, வெகுளியுவமம்.

"பாடிச் சென்ற பரிசிலர் போல
வுவவினி வாழி தோழி" (அகம்.65)

என்பது, உவகையுவமை; பிறவுமன்ன.

இவற்றான் எண்வகை மெய்ப்பாடும்பற்றி உவமை எட்டெனப் படுமென்று அறிந்து கூறினான்.

"பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீரா" (285)

என்புழி, பெற்றாமாகலின்[4] மெய்ப்பாடெட்டன்வழித் தோன்றுமென்னாது 'மருங்கறிய' என்றதனாற் பெருமையுஞ் சிறுமையும்பற்றி வருதல் வழிமருங்கெனவும் அவை பற்றாது[5] மெய்ப்பாடெட்டும்பற்றி வாளாதே உவமை வருதல் செவ்விதெனவுங் கொள்ளப்படும்.[6]

"நீருட் குவளைவெந் தற்று" (கலி.41)

என்பது, பெருமைபற்றியது; என்னை? உலகநடை யிறந்ததோர் உவமை கூறி அதனோடு தலைமகன் ஈரத்தினை ஒப்பித்தமையின்.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா" (அகம்.16)

---

1. உள்ளே சந்தனச்சாந்து உண்டு என்றெண்ணி ஒருவன் செப்பினைத் திறக்க உள்ளே பாம்பிருக்கக் கண்டது போலும்.
2. பகைவீரரை அவர் வீரம் கெடுத்த திருமால் போலத் தன் கிளைஞரிடையே கூடி மலையுயர்ந்த சாரலிற் செல்லும் நாடனே கேள்.
3. கூற்றம் சினந்தாற்போன்ற சினத்தோடு பகைமன்னர் இருவரின் மண்ணை நோக்கினாய்
4. பெருமையும் சிறுமையும்பற்றி உவமை வரும் என்பது பெற்றாமாதலின்
5. பெருமையும் சிறுமையும் பற்றாது
6. பெருமையும் சிறுமையும்பற்றி மெய்ப்பாடு எட்டுடன் உவமை வருதல் மெய்ப்பாட்டின் வழிவரும் உவமை என அத்துணைச் சிறப்பில்லை எனவும், அவை பற்றாது வாளா மெய்ப்பாடுபற்றி வரும் உவமையே சிறந்தது எனவும் கொள்க.

என்பது, களவுடையான் தனக்குநிகரா இழித்துரைத்தமையிற் சிறுமை பற்றி வந்ததாம்.

உவமையும் மெய்ப்பாடும் பொருள்களை அறிவிப்பனவாகி அவை வேறுவேறு பொருள் அறிவித்தலின் வேறுபாடுடையனவாயினுஞ் சிறு பான்மை மயங்கியும்[1] ஒத்து வருமென்றற்கு இது கூறவேண்டியதென்பது. (19)

**சிவலிங்கனார்**

**பெருமையும்.........................தோன்றும் என்ப.**

*இச் சூத்திரம் பெருமையும் சிறுமையும் ஆக உவமம் கூறும் இடம் கூறுகின்றது.*

(இ-ள்) உவமையைப் பொருளினும் பெருமையாகவும் சிறுமை யாகவும் கூறுதலானது மெய்ப்பாடு எட்டன்வழியிடத்து அறியத் தோன்றும் என்பர் என்றவாறு.

அரவுபோலும் அல்குல் - இது வாளா உவமை கூறியது.

அவாப்போல் அகன்ற அல்குல் - இது பெருமையாகக் கூறியது. முன்னதில் மெய்ப்பாடில்லை. பின்னதில் மருட்கை மெய்ப்பாடுண்டு.

துடியிடை - இது வாளா உவமம் கூறியது.

சான்றோர் உசாப்போல் உண்டு மருங்குல்.

இது சிறுமையாகக் கூறியது. முன்னதில் ஒப்புமையன்றி மெய்ப் பாடில்லை பின்னதில் மருட்கை மெய்ப்பாடுண்டு.

இவ்வாறே பிறவும் கண்டுகொள்க.

**291. உவமப் பொருளின் உற்ற துணருந்**
**தெளிமருங் குளவே திறத்திய லான. (20)**

**இலக்குவனார்**

295. There is the clear way of knowing the nature of the compared object by means of the object of comparison.

**இளம்பூரணர்**

**291. உவமப் பொருளின்............................லான.**

---

1. கலந்தும் - மெய்ப்பாடும் உவமையும் ஒரு பொருளையே அறிவிக்க மயங்கியே வரும் என்றற்கு.

*என்-னின், இதுவும் உவமைக்குரிய வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) உவமப்பொருளாலே சொல்லுவான் குறிக்கப்பட்ட பொருளை யுணருந் தெளியும் பக்கமும் உள கூறுபாட்டியலான் என்றவாறு.

தெளிமருங்காவது துணிவுபக்கம். எனவே துணியாமை உவமத்தின்கண்ணே வந்தது. அவ்வாறு வரினும் இதுவேயெனத் துணிதலின் துணிபக்கமாவது.

"ஐதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலும் மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று" (கலி.55)

என்றவழித் துணியாது நின்றன[1] நுதலும் முகனும் தோளுங் கண்ணும் சாயலும் மொழியுமெனத் துணிந்தவாறு கண்டுகொள்க. இன்னும் இதனானே,

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்"
(சிலப்.கானவரி-11)

என்றவழிக் கண் புருவங் கூந்தலை யுவமப் பெயரான் வழங்குதலுங் கொள்க.[2] (20)

## பேராசிரியர்

**295. உவமப் பொருளி..........................லான.**

*இஃது, எய்தாத தெய்துவித்த னுதலிற்று; உவமையோடு பொருள் ஒவ்வாதென ஒப்புமை சார்த்திக் கொள்ளுமா றுணர்த்தினமையின்.*

(இ-ள்) உவமப்பொருளின் - உவமையெனப்பட்ட பொருளான்; இன் உருபு, ஆன் உருபின்கண் வந்தது: உற்றதுணருந் தெளிமருங்குள - உவமிக்க வரும் பொருட் குற்றதெல்லாம் அறிந்து துணியும் பகுதியுமுள; திறத்தியலான - அங்ஙனந் துணியப்படும் பொருட்டிறம் பலவாகி வரும் இலக்கணவகையான் என்றவாறு.

---

1. துணியாது நின்றன பிறை, மதி, மலை, சுனை, மயில், கிளி என்பன.

2. கயல் எழுதி - கண் எழுதி. வில் எழுதி - புருவம் எழுதி, கார் எழுதி - கூந்தல் எழுதி; கண் கயல் எனவும், புருவம் வில் எனவும், கூந்தல் கார் எனவும், உவமப் பெயரானே வழங்கப்பட்டன.

அப் பகுதி பலவும் உற்றுணராமற் சொல்லியவழியும், அஃது உணர வருமென்பது கருத்து. 'திறத்திய லான' எனப்பட்ட பகுதியாவன: மேற்கூறப்பட்ட மெய்ப்பாடெட்டும்பற்றி உவமங் கொள்ளுங்கால் உற்றதுணருந் தெளிமருங்கென உவமானவடைக்கு உவமேயவடை குறைந்துவருவனவும், யாதும் அடையின்றி வருவனவுமென்று இவ் விரண்டும் உற்றுணராமற் சொல்லியவழி, அவற்றுக்கும் உவமப் பொருளே தெளிமருங்காமெனவும் வாளாதே உவமஞ்செய்து உற்றுணர்த்தாதவழியும் அதுவே தெளிமருங்கா மெனவும் இன்னோரன்ன கொள்க.

(உ-ம்)"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா" (அகம்.16)

என்றவழி, கண்டோர்க்கெல்லாம் பெருநகையாகக் களவுண்டாகப்படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையாவென உற்றதுணரக் கூறியதிலனாயினுங் கையொடுபட்ட களவுடையார்போல நின்றாளென்னும் உவமப் பொருளானே எள்ளுதற்பொருள் தோன்றி நகை புலப்படுவதாயிற்று.

"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றென" (புறம்.82)

என்னும் பாட்டினுள் உவமப்பொருளாகிய 'போழ்தூண் டூசி'க்குப் பல அடை கூறி அதனோடு உவமிக்கப்படும் போர்த்தொழிலினை யாதுமோர் அடையின்றி வாளாது கூறினானாயினும் உவமப்பொருளானே போர்த்தொழிற் குற்றதும் உணரக் கூறினானாம்; என்னை? உண்டாட்டுங் கொடையும் உரனொடு நோக்கி மறுத்தலும் முதலாகிய உள்ளக் கருத்தினான் ஒரு கணத்துள்ளே பல வேந்தரை ஒருங்கு வேறற்கு விரைகின்றது போர்த்தொழிலென்பது தெளியப்பட்டமையின்.

"உழுத நோன்பக டழிதின் றாங்கு"[1] (புறம்.125)

"மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி"[2] (புறம்.180)

என்றாற் போல்வனவும் அவை.

இனி, வாளாதே உவமஞ்செய்து உற்றதுணர்த்தாதவழித் தெளியு மாறு:

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து"[3] (குறள்.667)

என்பதனுள், அவன் செய்கைவன்மை கூறாராயினும் அச்சாணியென்று உவமப் பொருள் தானே அச் செய்கை வன்மை கூறிற்று.

---

1. உழுத வலிய பகடு நல்ல நெல்லைத் தின்னாமல் வைக்கோலைத் தின்றாற் போல
2. மருந்துக்காகப் பட்டை செதுக்கப்பட்டு வடுக்கள் நிறைந்த மரம்போலப் பகைவர் வாள் கிழித்த வடுக்கள் கலந்து
3. ஒருவரின் உடலின் சிறுமை கண்டு அவரை இகழாதே; இவ் வுலகம் உருளும் பெரிய தேர்க்கு அதை நடத்தும் சிறிய அச்சாணி போல்வாரையும் உடையதாகும்.

"வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்"[1] (கலி.84)

என்பதும் அது. ஒழிந்தனவு மன்ன.

இனி, உவமத்தின் உற்றதுணர்க வென்னாது 'பொருள்' என்ற தனாற் பொருட்கு அடுத்த அடையும் உவமவடைக் கேற்றது உணரப் படாதன களையப்படுமென்பது. அது,

"பாசடை நிவந்த கணைக்கா லெய்த
லினமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்"[2] (குறுந்.9)

என்றவழி, பாசடை நிவந்த கணைக்காலென நெய்தலாகிய பொருட்கு வந்த அடையிரண்டுங் கண்ணெனப்பட்ட உவமத்திற்கேற்ப வாராமையான் அவை தெளிமருங்கிலவென்று களைந்து கொள்க.[3] ஒழிந்தனவு மன்ன.

மற்று,

"புறமதி யன்ன திருமுக மிறைஞ்சி"

என்றவழி, அகத்துத் தோன்றும் மறுப்போலப் புறத்துமறு மதிக்கில்லை யென்பதூஉம், புறமதிபோலக் கறைதீர்ந்த முகமென்பதூஉம் உவமப்பொருளின் உற்றதுணருந் தெளிமருங் கென்றதனாற் கோடுமோவெனின் அங்ஙனம் கொள்ளாமைக் கன்றே வருகின்ற சூத்திரமென்பது.[4] (20)

## சிவலிங்கனார்

**உவமப் பொருளின்............................லான.**

*இச் சூத்திரம் செய்யுட்கண் வருவதோர் திறம் உணர்த்துகின்றது.*

(இ-ள்) உவமப்பொருளால் உவமிக்கப்படும் பொருட்கு உற்றதை உணரும் தெளிவான பக்கம் உண்டு உணரும் திறத்தியல்பால் என்றவாறு.

செய்யுளில் உவமையும் பொருளும் முழுமைபெறல் இன்றி ஒன்றின் ஒன்று மிக்கும் குறைந்தும் வரும். வருமாயினும் உணர்ந்து

---

1. வேனிற்காலத்துப் புனல்போல உதவும் நுந்தையை நோவோர் யார்?
2. பசிய இலையுயர்ந்த கணைக்காலுடைய நெய்தல் மலரானது கூட்டமான மீன்கள் உள்ள உப்பங்கழியில் நீரலை மிகுந்தோறும் மூழ்கியெழுவதானது குளத்தில் மூழ்கும் மகளிர் கண்களை ஒக்கும்.
3. பாசடை, கணைக்கால் என்பன நெய்தற்கு வந்த அடைகள். பொருளாகிய கண்களுக்கு அவைபோன்ற அடைகள் இல்லை. அதனால் அவ் விரண்டு அடைகளையும் சிறப்பில்லை என்று கண்களுக்கு விட்டுவிடுக.
4. புறமதி அகமதி என்பன இல்லை. அவ்வாறு வழக்கும் இல்லை. ஆதலின் கோடல் இல்லை.

முழுமைபெறப் பொருத்துதல் வேண்டும். பொருத்த இயலாதனவற்றை விட்டுவிடல் வேண்டும்.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி."[1] (குறள்.118)

இதில் உள்ள பொருள் சான்றோரின் நடுநிலைமை. உவமை நிறைகோலின் நடுநிலைமை. நிறைகோலுக்குச் சமன்செய்தலும் சீர் தூக்கலும் அடைகள்; இவை பொருளில் இல்லை. சான்றோர்க்கு அமைதலும் ஒருபாற் கோடாமையும் அடைகள். இவை உவமையில் இல்லை. என்றாலும் உவமை அடைகளைப் பொருளிலும் பொருளடைகளை உவமையிலும் கூட்டிப் பொருளுணர்தல்வேண்டும். அமைந்து சமன் செய்து ஒருபாற் கோடாமை சீர்தூக்கும் கோல்போல் அமைந்து சமன்செய்து ஒருபாற் கோடாமை சீர்தூக்கல் சான்றோர்க்கு அணி எனக் கொள்ளல் வேண்டும்.

"கூர்வெண் பிறையைப் போலும் எயிறு"

என்பதில் எயிறு பொருள்; பிறை உவமம். உவமத்துக்குக் கூர்மையும் வெண்மையும் அடைகள். அவற்றை எயிற்றுடன் சேர்த்திக் கூரிய வெண்மையான எயிறு எனக் கூறுக.

"பிறைபோற் கூரிய வெள்ளெயிறு"

என்பதில் பொருளில் வந்த கூரிய வெள் என்னும் அடைகளை உவமையிற் சார்த்திக் கூரிய வெண்பிறை எனக் கூறுக.

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்"

என்பதில் உவமையாகிய நெய்தலுக்குப் பாசடை நிவந்த என்பதும் கணைக்கால் என்பதுமாகிய அடைகள் போலப் பொருளாகிய கண்ணுக் கில்லை. அவற்றைக் கொண்டுவந்து கண்ணுக்குச் சார்த்திக் கூறிப் பொருத்தவும் இயலாது. அதனால் அவ் வடைகளை உவமத்தளவில் நிறுத்திப் பொருளளவில் களைதல் வேண்டும்.

இவ்வாறு உவமப் பொருளை உணர்வது திறத்தின் (அறிவின்) இயலான் தெளியும் பகுதியாம் என்க. உரையாளர்கள் கூறிய விளக்கங் களும் கொள்க.

## 292. உவமப் பொருளை உணருங் காலை
## மருவிய மரபின் வழக்கொடு வருமே.[1] (21)

---

1. பொருள்: தனக்குரிய இலக்கணங்களால் அமைந்து தன்கண் உள்ள பொருள்களைச் சமமாக்கி ஒருபக்கமாகச் சாயாமல் அவற்றின் எடைகளைக் காட்டும் நிறைகோல் போலச் சான்றோரும் அறிவான் நிறைந்து தம்பால் வரும் வழக்கைச் சமமாகக்கொண்டு ஒருபக்கமாகச் சாராமல் அதன் முறையை வழங்குதல் அவர்க்கு நடுநிலைமை என்னும் அழகாகும்.

2. படுமே - பாடம்

## இலக்குவனார்

296. When knowing by means of the object of comparison it goes with the usage.

## இளம்பூரணர்

**292. உவமப் பொருளை...................வருமே.**

*என்-னின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) உவமப்பொருளை உவமிக்கப்படும் பொருளாக உணருங்காலை மருவிய மரபினானாய வழக்கொடு வரும் என்றவாறு.

எனவே, மருவாதன அவ்வாறு கயல்சிலை என்றாற்போலக் கூறப்படாவென்றவாறு. (21)

## பேராசிரியர்

**296. உவமப் பொருளை....................படுமே.**

*இது, மேலதற்கோர் புறனடை; மேல் உவமப் பொருளானே உற்றதுணரச் செயல்வேண்டு மென்றான், இனி அங்ஙனம் உணருமாறு இது கூறினானாதலின்.*

(இ-ள்) உவமப்பொருளான் உற்றதுணருங் காலை மரீஇவந்த வழக்கொடுபடுத்து அறியப்படும் என்றவாறு.

அது வருமாறு:

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா" (அகம்.16)

என்பது, களவுடம்படுநர்க்குள்ள வேறுபாடு உலகத்து அடிப்படவந்த வழக்காதலான் அஃது ஏதுவாக[1] அதனையும்[2] அறிந்து கொள்ளப் படுமென்றவாறு. எனவே, உலகத்து வழக்கினுள் அடிப்படத் தோன்றும் உவமையாயிற்றாயினும் உவமப்பொருள் புலப்பாடு செய்யாது, 'புறமதி போலு முகம்' என்றது போல வென்பது இதன் கருத்து.[3] (21)

## சிவலிங்கனார்

**உவமப் பொருளை...........................வருமே.**

*இச் சூத்திரம் உவமையை உணருமாறு கூறுகின்றது.*

---

1. அஃது ஏதுவாக - அவ் வுலக வழக்கு ஏதுவாக

2. அதனையும் - களவுடம்பட்டார் முகவேறுபாடும்

3. மதிபோலும் முகம் என்பது நன்று. புறமதி போலும் முகம் எனின் அகமதி புறமதி என்பதில்லையாதலின் பொருள் புலப்பாடு செய்யாது.

(இ-ள்) உவமப்பொருளை உவமிக்கப்படும் பொருளொடு சார்த்தி உணருங்காலத்து தொன்றுதொட்டு மருவிவரும் வழக்குடன் பொருந்த வரும் எனறவாறு.

(உ-ம்) "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்." (குறள்.410)

இதில் ஏனையவர் விலங்கொடு அனையர், கற்றார் மக்களொடு அனையர் எனக் கொள்ளின் பொருட்சிறப்பில்லை; கல்லாதவரை விலங்கொடு ஒப்பிடலாம்; கற்றாரை மக்களொடு ஒப்பிடற்கு உரிய சிறப்பு யாதும் இல்லை. அதனால் அது மருவிய மரபாகாது. "விலங்கொடு மக்கள் எவ்வளவு உயர்ந்தவர் அவ்வளவு தாழ்ந்தவர் கற்றவரோடு கல்லாதவர்" என்று உவம விளக்கம் காண்பதே மருவிய மரபாகும்.

## 293. இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே. (22)

### இலக்குவனார்

297. The two words will follow the two (if the objects of comparison appear with adjuncts the compared objects also follow suit).

### பி.இ.நூ.

**மாறன் 103**

அடையொடு பொருட்குஅடை புணர்ப்பது இரட்டை.

### இளம்பூரணர்

**293. இரட்டைக்..............................வழித்தே.**

*என்-னின், இதுவுமோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) இரட்டைக் கிளவியாவது உவமையிரண்டு சொல்லோடு அடுத்து வருவதனோடு உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல்வேண்டும் என்றவாறு.

அவ்வழி இரண்டு சொல்லும் ஒருசொன் னீர்மைப்பட்டு வருதல் வேண்டுமென்று கொள்க.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்." (குறள்.410)

இதனை வேறுபாடு அறிக.[1] (22)

---

1. விலங்கொடு மக்கள், கற்றாரோடு ஏனையவர் என இரண்டிரண்டு பொருள்கள் சேர்த்துக் கூறப்பட்டன. விலங்கொடு மக்கள் ஒருசொல் நீர்மையது. கற்றாரோடு ஏனையவர் ஒருசொல் நீர்மையது. இப்படி வருவது இரட்டைக் கிளவி.

## பேராசிரியர்

**297. இரட்டைக்.........................வழித்தே.**

*இஃது, எய்தாததெய்துவித்தது, அடையொடு வந்த பொருளொடு புணர்க்குமாறு கூறினமையின்.*

(இ-ள்) இரட்டைக்கிளவியும் - அடையும் அடையடுத்த பொருளுமென இரண்டாகச் சொல்லப்படுங் கிளவி, இரட்டை வழித்தே - அடையும் அடையடுத்த பொருளுமென இரண்டாக்கி நிறுத்தப்படும் உவமையின் வழித்து என்றவாறு; அது,

"பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்" (பெரும்பாண்.220)

என வரும். தன் பைம்பூண் புடைத்த செஞ்சுவட்டினையும் மார்பினையும் பொன்னுரையோடுங் கல்லோடும் உவமித்தமையின் இரட்டைக்கிளவி இரட்டைவழித் தாயிற்று. இரட்டைக் கிளவியெனப் பொருளினை முற்கூறியவதனான் இரண்டு பொருளினை ஒன்றாகக் கூட்டி உவமிக்கக் கருதினான். உவமையினையும் இரண்டு ஒன்றாக்கியே உவமிக்கு மென்பது கருத்து. உம்மையான் ஒற்றைக்கிளவியும் இரட்டைவழித்தாகி வருவன கொள்க; அது,

"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை"[1] (குறுந்.47)

என வரும். இரும்புலிக் குருளை யென்றதனையே துறுகல்லோடும் வேங்கை வீயோடும் ஒப்பித்தமையின் இப் பெயர்த்தாயிற்று. (22)

## சிவலிங்கனார்

**இரட்டைக்.........................வழித்தே.**

*இச் சூத்திரம் மேலதற்குப் புறனடை கூறுகின்றது.*

(இ-ள்) இரட்டைக் கிளவியாகிய பொருளுக்கு உவமை கூறுங்கால் இரட்டைக்கிளவியிலேயே கூறப்படும் உவமையைத் தனக்கு வழியாக வுடையதாம் என்றவாறு.

இரட்டைக்கிளவி என்பது ஒரு சொல்லே பிரிக்கமுடியாதபடி இரட்டித்துவரும் கலகல, பளபள, மடமட, சலசல போலும் சொற்களன்றிப் பாலொடுதேன், விலங்கொடு மக்கள், வேலொடு நின்றான் என்பனபோல இரண்டு சொல் இணைந்து வருவதாகும்.

---

1. கரிய அடிமரத்தையுடைய வேங்கைமரத்தின் பூக்கள் உதிர்ந்துகிடக்கும் அடர்ந்த பாறைக்கல்லானது புலிக்குட்டி போலத் தோன்றும். இது சிறுத்தைப்புலி. பாறைக்கல் புலிக்கும் வேங்கை மலர்கள் சிதறிக் கிடத்தல் அதன் உடலிற் கிடக்கும் கரும்புள்ளி கட்கும் உவமை. உவமையில் வேங்கைமலரும் பாறையும் என இரண்டாக அமையப் பொருளில் புலி என ஒன்றாக அமைந்தது.

(உ-ம்) "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்." (குறள்.410)

இதில் கற்றாரோடு ஏனையவர் என்பது இரட்டைக்கிளவி. இவ் விருவர்க்கும் உள்ள வேறுபாட்டை உவமைமுகத்தான் விளக்கக் கருதுவார். விலங்கொடு மக்களுக்குள்ள வேறுபாட்டை உவமையாக்கி னார். விலங்கொடு நோக்க மக்கள் எவ்வளவு உயர்ந்தவரோ அவ்வளவு தாழ்ந்தவர் கற்றாரோடு கல்லாதவர் என்பது கருத்து. உவமையில் விலங் கொடு மக்கள் என்பது இரட்டைக்கிளவி. இரட்டைக் கிளவிப் பொருளுக்கு இரட்டைக் கிளவி உவமையே வருக என்பது.

"வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" (குறள்.552)

என்பதில் 'வேலொடு நின்றான்' இரட்டைக்கிளவியுவமம் 'கோலொடு நின்றான்' இரட்டைக்கிளவிப் பொருள்.

'இரட்டைக் கிளவி இரட்டைய தாகும்' என்னாது 'வழித்தே' என்றதனால் பொருள், இரட்டைக்கிளவியாகாது உவம இரட்டைக் கிளவிவழியும் வரும் எனக் கொள்க.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்." (குறள்.1121)

இதில் எயிறூறிய நீராகிய பொருளுக்குப் பாலொடு தேன்கலப்பு உவமையாகியது. பாலொடு தேன் என்பது உவம இரட்டை.

பேராசிரியர் இரட்டைக்கிளவி என்பதற்கு அடையும் பொருளு மாகி வரும் கிளவி எனக் கொள்வர். செந்தாமரை என்பது செம்மை யடையும் தாமரைப் பொருளும் சேர்ந்தது. இது இரட்டைக்கிளவி எனப் படாது. பிரிக்க இயலாது சேர்த்துக் கூறப்படுவதே இரட்டைக் கிளவி யாகும். 'இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா' என்பர். விலங்கொடு மக்கள், கற்றாரோ டேனையவர், வேலொடு நின்றான், கோலொடு நின்றான் என்பனவற்றை விலங்கு மக்கள் முதலியவாகப் பிரிக்க இயலாமை காண்க. எயிறு ஊறிய நீருக்குப் பாலோ தேனோ தனித்துக் கூறப்படாது பாலொடு தேன்கலந்த கலப்புக் கூறப்படுதலும் காண்க.

**294. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி**
**முன்ன[1] மரபிற் கூறுங் காலைத்**
**துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே. (23)**

---

1. முன்னை - பாடம்

## இலக்குவனார்

298. Without having any other sense, when interpreted by means of the sources in accordance with the ancient usage, it can be understood by those who have the capacity of understanding such use of comparison.

## இளம்பூரணர்

**294. பிறிதொடு..........................கொளினே.**

*என்-னின், இதுவும் ஒருவமை வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) பிறிதென்பது - உவமைப்பொருள் தானன்மையான் உவமைப்பொருளொடு படாது பொருள் தோற்றிய இடத்தொடு நோக்கி முன்னமரபினாற் சொல்லுங் காலத்துத் துணிவுடையோர் கொளின் அவர் துணிந்த துணிவின்கண்ணே வரும் உவமை என்றவாறு.

முன்னமாவது,

"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்"[1] (தொல்.செய்.199)

என்பதாகலின், இடத்தொடு பார்த்து ஏற்கும் பொருட்கட் கூறுவது.

மேலைச் சூத்திரத்தளவும் பிறிது பொருளொடு உவமை கூறிப் போந்தார். இனிப் பொருள்தன்னோடே யுவமை கூறுகின்றார் என்று கொள்க.

"நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர" (கலி.119)

என்றவழிக் காணப் பிறிதாகிய பொருளொடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று. மதியினது எழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடு நோக்கிற்று. அவ்விடத்திற் கேற்பக் கூறுதலின் முன்னமாயிற்று. அம் மதியினது தோற்றம் இத் தன்மைத்தெனத் துணிதலின் அதன்கண் உவமைச்சொல் வந்தது.

"வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழிப்
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப"[2] (கலி.121)

என்பதும் அது. (23)

---

1. இந்த இடத்தில் இந்தக் கூற்றானது இன்னினார்க்கு உரியதாகும். கேட்போர் பிறர்க்கு அறிய வாராததாகும் என்று அவ்விடத்து அவரவர்க்குப் புலப்படும்படி கூறுவது குறிப்பெனப்படும் என்றவாறு.

2. பொருள்: வளவிய இதழ்கள் கூம்பியுள்ள நீலமணிபோலும் பெரிய கழியிடமானது துயில்கொள்வது போலத் தோன்றும்படியான பரந்த கடற்கரைத் தலைவனே!

இதில் உப்பங்கழியிடம் ஒலியவிந்து அமைதியாகத் தோன்றுவது துயில் கொள்வதுபோல உளது என்றதால், போல என்பதற்கேற்பத் துயில்கொள்ளும வேறுபொருள் இன்மையும் கழியே துயில் கொள்வதுபோல் இருப்பதும், கழியிடமே துயில் கொள்வதற்குப் பிறப்பிடமாவதும் காண்க.

## பேராசிரியர்

**298. பிறிதொடு..............................கொளினே.**

இது, மேலெல்லாம் ஏனையுவமங் கூறி, உள்ளுறையுவமம் உணர்த்துதல் நுதலிற்று. மேல் 'இசைதிரிந் திசைக்கும்' (195) எனப்பட்ட வற்றின் பகுதியாயினும் இதனை ஆண்டுக்(196) கூறாது ஈண்டுக் கூறினான் உள்ளுறையுவமமாகலானும் இவ் வோத்து உவமவியலாகலானு மென்பது.

(இ-ள்) பிறிதொடு படாது - உவமையோடு உவமிக்கப்படும் பொருள் பிறிதொன்று தாராது, பிறப்பொடு நோக்கி - உவமநிலங்களுட் பிறந்த பிறவிகளோடு சார்த்தி நோக்கி, முன்னை மரபிற் கூறுங்காலை - கருத்தினான் இதற்கு இஃது உவமையென்று சொன்ன மரபினாற் கூறுங்காலை, துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே - இன்ன பொருட்கு இஃது உவமமாயிற்றென்பது துணிந்துகொள்ளத் தோன்றும், அவ்வாறு துணிந்துகொள்ளும் உணர்வுடையோர் கொள்ளின் என்றவாறு.

எனவே, அஃது எல்லார்க்கும் புலனன்று நல்லுணர்வுடை யோர்க்கே புலனென்பதூஉம், அவர் கொள்ளச் செய்ய வேண்டு மென்பதூஉங் கூறியவாறு. இதனானே செய்யுளுட் பயின்றுவருமென்பது கூறினானாம். அவற்றிற்கு உதாரணம் மேற்காட்டுதும். மற்றிதனை உவமையென்றதென்னை? உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாக நிறீஇக் கூறானாயினெனின் அங்ஙனங் கூறானாயினும் உவமம் போன்று பொருள் கொள்ளப்படுதலின் அதனை உவமையென்றான். அஃது ஓப்பினாகிய பெயரென்பது; என்னை? இவற்றை உவமப்போலி யென்பது கூறுமாகலின்.[1] (23)

## சிவலிங்கனார்

**பிறிதொடு.........................கொளினே.**

*இச் சூத்திரம் உவமமும் பொருளுமாக வருதலின்றி உவமம் மட்டும்வந்து அதனுள்ளே பொருளும் அமையுமாறு கூறுகின்றது.*

(இ-ள்) துணிந்த அறிவினோர் கொள்ளுவதாயிருந்தால், குறிப்புமுறையில் உவமம் கூறுவதானால் உவமத்தால் விளக்கப்படும் பொருள் வெளிப்படையில் கூறப்படாமல் அவ் வுவமம் தோன்று மிடத்தேயே நோக்கிக் கொள்ளுமாறு துணிவொடு வரும் என்றவாறு.

**உதாரணம்:** தன் கதிரைத் தானே காண்பதுபோலத் திங்கள் தோன்றியது என்பது. திங்கள் உவமம். அதனால் விளக்கப்படும் பொருள் இதில் இல்லை. அதன் தோற்றம் போல்வது ஒன்றும் இல்லை. அதனால்

1. உள்ளுறையுவமம் நேரே உவமையும் பொருளுமாக வரவில்லையாயினும் உவமையும் பொருளுமாக வைத்துப் பொருள்கொள்ளக் கிடத்தலின் உவமம்போல இருப்பதால் உள்ளுறையானது உவமம் எனப் பெயர் பெற்றது. அதனால் போல இருத்தலின் உவமப் போலி எனப்பட்டது.

அத் திங்களே பொருளாகவும் அமைகிறது. ஒருவன் நிலவுக்கதிரைக் காண்பதுபோலத் திங்களே தன் கதிரைக் காணுதல் பிறப்பிடத்தே பொருள் தோன்றுதலாகும். பிறப்பிடத்தே தோன்றுதலாது அதுவேயாதல்.

இச் சூத்திரம் உள்ளுறையுவமம்பற்றிக் கூறுவதாகக் கொண்டார் பேராசிரியர்.

"உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதே யுள்ளுறை யுவமம்"

(அகத்திணையியல்,5)

என உள்ளுறையுவம இலக்கணம் அகத்திணை யியனுட் கூறிவிட் டமையின் இங்கும் கூறினார் என்றல் பொருந்தாமையின் அஃது உரை யன்று என்க. அடுத்து வரும் 'உவமப்போலி' என்னும் சூத்திரமே உள்ளுறையுவமம் பற்றியதாகும்.

## 295. உவமப் போலி ஐந்தென மொழிப. (24)

## இலக்குவனார்

299. They say that the *uvamappōli* (comparison in imitation) is of five kinds.

## இளம்பூரணர்

**295. உவமப் போலி................................மொழிப.**

*என்-னின், இதுவுமோர் உவமைவிகற்பங் கூறுதல் நுதலிற்று.*

(இ-ள்) உவமையைப் போன்று வருவன ஐந்தென்று சொல்லுவர் என்றவாறு.

அவையாவன: இதற்குவமை யில்லை எனவும், இதற்கிதுதானே யுவமை எனவும், பலபொருளினு முளதாகிய வுறுப்புகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு சேர்த்தின் இதற்குவமையாம் எனவும், பல பொருளினுமுளதாகிய கவின் ஓரிடத்துவரின் இதற்குவமையாம் எனவும், கூடாப் பொருளொடு உவமித்து வருவனவும்.

(உ-ம்) "நின்னோர் அன்னோர் பிறரிவண் இன்மையின்
மன்னெயில் முகவைக்கு வந்திசிற் பெரும" (புறம்.373)

என்றும்,[1]

"மன்னுயிர் முதல்வனை யாதலின்
நின்னோர் அனையைநின் புகழொடு பொலிந்தே" (பரிபா.1)

என்றும்,[2]

---

1. நின்னை ஒத்தார் பிறர் இல்லை.
2. நினக்கு நீயே ஒப்பாய்.

"நல்லார்கள் நல்ல வுறுப்பாயின தாங்கள் நாங்கள்
எல்லா முடனாதுமென் றன்ன வியைந்த வீட்டாற்
சொல்வாய் முகங்கண் முலைதோளிடை யல்குல் கைகால்
பல்வார் குழலென் றிவற்றாற்படிச் சந்த மானாள்"

என்றும்,[1]

"நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
வந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை" (பதிற்.14)

என்றும்,[2]

"வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவன் அல்லன் மலைநாடன்
ஈரத்து ளின்னவை தோன்றின் நிழற்கயத்து
நீருட் குவளைவெந் தற்று" (கலி.41)

என்றும்[3] வரும். (24)

## பேராசிரியர்

**299. உவமப் போலி.........................மொழிப.**

*இது, மேற்கூறிய உள்ளுறையுவமை ஐவகைப்படுமென்கின்றது.*

(இ-ள்) உள்ளுறையுவமை ஐந்துவகையெனக் கூறுவர் புலவர் என்றவாறு.

அவையைந்து மாமாறு முன்னர்ச்(300) சொல்லுதும். இதனது பயம் ஏனையுவமத்திற்கு நிலைக்களம் ஐந்து ஓதினான் அவ்வாறே இதற்கு நிலைக்களம் ஓதாது(305) அவை போறலின்; அவையே நிலைக் களமாமென்றலும் ஏனையுவமத்துள் ஒரு சாதியோடு ஒரு சாதியினை உவமித்தல் வழக்கன்றாயினும் உள்ளுறையுவமத்திற்கு அமையுமென்றலு மென்பது. (24)

## சிவலிங்கனார்

**உவமப்போலி...........................மொழிப.**

*இச் சூத்திரம் உவமப்போலிவகை கூறுகின்றது.*

---

1. நல்ல மகளிரின் உறுப்புகள் எல்லாம், நாங்கள் எல்லாம் ஒன்றுசேர்வேம் என்று சொல்லி அவை ஒன்றுகூடிய கூட்டம் போலச் சொல், வாய், குழல் வரையுள்ளவற்றால் அமைந்த உருவுடையாள்.

2. நாள், கோள், திங்கள், ஞாயிறு, நெருப்பு ஆகிய ஒளிப்பொருள்கள் எல்லாம் வந்து ஒன்றுசேர்ந்து விளக்கும் ஒளியைப் போன்றனை.

3. மலைநாடன் வாராது சென்ற இடத்திலேயே தங்கிவிடமாட்டான். அப்படித் தங்கு வானாயின் அவன் அருளில் இப்படிப்பட்ட குற்றமான செயல் தோன்றுமாயின் அது நீரிலேயே குவளை வெந்தது போலாம். நீரில் குவளை வேதல் கூடாதது.

(இ-ள்) உவமப்போலி என்பது ஐந்து வகைப்படும் என்று கூறுவர் என்றவாறு.

உவமம் இல்லை யாயினும் உவமம்போலக் காணப்படுதலின் உவமப்போலி யாயிற்று.

உள்ளுறையுவமம் உவமப்போலி யாகாது; ஏன்எனின் அது உவமம் என்ற பெயரிலேயே கூறப்படுதலின்.

உடனுறையுள்ளுறை, சுட்டு உள்ளுறை, நகையுள்ளுறை, சிறப்பு உள்ளுறை எனப் பெயர் பெற்றாற் போல உவமஉள்ளுறை என்னும் பெயர் காண்க. உவமவுள்ளுறையே உள்ளுறையுவமம் எனப்படும்.

அடுத்த சூத்திரத்தில் ஐந்து கூறப்படும்.

இளம்பூரணர் கூறிய ஐந்தும் வேறுபட வந்த வுவமத் தோற்றத்தில் அடங்கும்.

**296. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்**
**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**
**பிறப்பினும் வரூஉந் திறத்த[1] வென்ப. (25)**

## இலக்குவனார்

300. If we examine the nature of its faultless excellence they say, it is in the nature of appearing with the action, result, form, colour and birth.

## இளம்பூரணர்

**296. தவலருஞ்.........................வென்ப.**

*என்-னின், மேலதற்கோர் புறனடை.*

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட ஐந்தும் உரைத்த வாய்பாட்டாற் கூறும்வழிச் சொல்லப்பட்ட ஐந்தினும் ஏதுவாகச் சொல்லிப் பின்னர்க் கூறவேண்டும் என்றவாறு.

நினக்குவமையில்லை என்னும்வழிச் செயலானாதல், பயனானாதல், உறுப்பானாதல், உருவானாதல், பிறப்பானாதல் ஒப்பாரில்லையெனல் வேண்டும் என்பது கருத்து. பிறவுமன்ன. (25)

## பேராசிரியர்

**300. தவலருஞ் சிறப்பினத்......................வென்ப.**

---

1. திறத்தியல் - பாடம்

*இது, மேற்கூறிய ஐந்தும் இவையென்கின்றது.*

(இ-ள்) வினை, பயன், மெய், உரு வென்ற நான்கினானும் பிறப்பினானும் வரும் மேற்கூறிய ஐந்தும் என்றவாறு.

உறுப்பென்றது மெய்யினை; உடம்பினை உறுப்பென்பவாகலானும் மெய்யுவமமெல்லாம் உறுப்பினையேபற்றி வருதல் பெரும்பான்மைய வென்றற்கும் அவ்வாறு கூறினானென்பது. 'தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்' என்றதனான், ஏனையுவமத்தினும் உள்ளுறை யுவமமே செய்யுட்கும் பொருளிலக்கணத்திற்குஞ் சிறந்ததென்பது. அவை வருமாறு:

"கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வ னீன்றவெம் முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே"[1] (ஐங்குறு.65)

என்பது வினையுவமப் போலி; என்னை? தாமரையினை விளைப் பதற்கன்றிக் கரும்புநடுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை சுரும்பின் பசிதீர்க்கு மூரனென்றாள். இதன் கருத்து:

காதற் பரத்தையர்க்கும், இற்பரத்தையர்க்கு மென்றமைக்கப்பட்ட கோயிலுள் யாமுமுளமாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம். அதுபோல வென்பதாகலான் உவமைக்கும் பிறிதொரு பொருள் எதிர்ந்து உவமஞ்செய்யாது ஆண்டுப் பிறந்தனவற்றொடு நோக்கிக் கருத்தினாற் கொள்ளவைத்தலின் இஃது உள்ளுறையுவமமாயிற்று. அவற்றுள்ளும் இது சுரும்புபசி களையுந் தொழிலோடு விருந்தோம்புதற்றொழில் உவமங்கொள்ள நின்றமையின் வினையுவமப் போலியாயிற்று. இங்ஙனங் கூறவே இதனை இப் பொருண்மைத் தென்பதெல்லாம் உணருமா றென்னையெனின் முன்னர்,

"துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே" (298)

எனல் வேண்டியது இதன் அருமை நோக்கியன்றே யென்பது. அல்லாக் காற் 'கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை சுரும்புபசி களையும் பெரும்புன லூர' என்பது பயமிலவென்பது கூறலா மென்பது.

"கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந்
துறைகே ழூரன் கொடுமை நாணி

---

1. கரும்பு நடப்பட்ட பாத்தியில் நடாமல் தானே முளைத்துத் தழைத்த தாமரையானது தன்பால் வந்த வண்டுக்குத் தேன்தந்து பசியைக் களையும்படியான மிக்க நீர் சூழ்ந்த ஊரனே! புதன்வனைப் பெற்ற எம்மை முயங்கல் வேண்டுவதில்லை; ஏனெனில் அம் முயக்கம் முலைப்பால் படுதலான் நின் மார்பின் அழகைச் சிதைப்பதாகும். இப் பாடலில் முதல் இரண்டு வரிகளால் உள்ளுறைப்பொருள் பெறப்படும். உரைவிளக்கத்திற் காண்க.

நல்ல னென்றும் யாமே
யல்ல னென்னுமென் றடமென் றோளே"[1] (ஐங்குறு.12)

என்பது, பயவுவமப்போலி. இதனுள் தலைமகன் கொடுமை கூறியதல்லது அக் கொடுமைக் கேதுவாகியதொன்று விளங்கக் கூறியதிலளாயினும் இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்குமெனவே அவற்றிற்கும் இழிபு உயர்வா மென்பதொன்றில்லை. எல்லாரும் இன்பங் கோடற்குரியர் தலைமகற் கென்றமையின் யாமும் பரத்தையரும் அவற்கு ஒத்தன மென்றமையின் அவை கூறினாளென்பது.

"நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே"[2] (ஐங்குறு.51)

என்பதும் அது. நீருறை கோழி நீலச்சேவலை அதன் கூருகிர்ப்பேடை நினைந்து கடுஞ்சூலான் வந்த வயாத் தீர்தற் பயத்தவாறும், அதுபோல நின்மார்பு நினைந்து தன் வயவுநோய் தீரும் இவளுமென்றவாறு, புளிங்காய் வேட்கைத்தென்பது. நின்மார்புதான் இவளை நயவாதாயினும் இவடானே நின்மார்பை நயந்து பயம் பெற்றாள் போலச் சுவைகொண்டு சிறிது வேட்கை தணிதற் பயத்தளாகும், 'புளியங்காய் நினைய வாய்நீர் ஊறுமாறுபோல' என்பது.

"ஒன்றே னல்லெ னொன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன் றோழி யொன்றி னானே"[3] (குறுந்.208)

என்பது, மெய்யுவமப் போலி; என்னை? மிதியுண்டு வீழ்ந்த வேங்கை குறையுயிரோடு மலர்ந்தாற்போல யானும் உளேனாயினே னென்றமையின்.

---

1. கரையில் உள்ள கொருக்கந்தட்டையானது உயர்ந்த கரும்புபோலப் பூக்கும் நீர்த்துறை யுடைய ஊரனின் கொடுமைக்கு நாணிக் குறைகாட்டக் கூடாது என்று அவனை நல்லவன் என்போம் நாம்; ஆனால் என் தோளோ அவன் பிரிவால் மெலிந்து அவனை நல்லவன் அல்லன் என்று காட்டிவிடும்.

2. நீர்க்கோழிச் சேவலை நினைந்து பெட்டைக்கோழியானது தன் கருவுற்ற வயாவைத் தீர்த்துக்கொள்வதுபோலத் தலைவிக்கு நின் மலர்ந்த மார்பு அவள் உற்ற லயா நோய்க்குப் புளியங்காயை நினைத்த மாத்திரத்தில் வாயில் நீர் ஊறி இன்பம் செய்தல் போல நினைத்த மாத்திரத்தில் தீர்க்கும் இனிய மருந்தாகும். இப் பாடலில் உள்ளுறை காணப்படவில்லை.

2. யான் தலைவனோடு பொருந்தா இயல்பினளல்லேன்; பொருந்துமியல்பினேன் ஆயினும் நொதுமலர் வரைவாகிய ஒரு காரணத்தால் அவனொடு பொருந்தேன் - ஈண்டு நாடன் போர்க்களிறுகளால் மிதிக்கப்பெற்ற நெரிந்த அடிமரத்தையுடைய வேங்கை குறமகளிர் எளிதில் நின்று கொய்யும்படி மலரும் நாட்டினையுடையவன் என்ற பகுதி மெய்யுவம மாகியுள்ளது.

"வண்ண வொண்டழை நுடங்க வாலிழை
யொண்ணுத லரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணறுங் குவளை நாறித்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே."[1] (ஐங்குறு.73)

இஃது, உருவுவமப்போலி. நீ புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந்தாடிய புனலெல்லாந் தண்ணென்றதெனக் கூறியவழி, அத் தடம் போல இவள் உறக் கலங்கித் தெளிந்து தண்ணென்றா ளென்பது கருதியுணரப்பட்டது. அவளொடு புனல் பாய்ந்தாடிய இன்பச் சிறப்புக் கேட்டு நிலையாற்றாளென்பது கருத்து. இது நிறமன்றாலெனின் நிறமும் பண்பாகலின் அந் நிறத்தோடு நிறமல்லாத பண்புங் கொள்ளப்படுமென் பது,

"வகைபெற வந்த உவமத் தோற்றம்" (276)

என்புழிக் கூறினானென்பது.

"பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர
வெந்நலந் தொலைவ தாயினுந்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே"[2] (ஐங்குறு.63)

என்பது, பிறப்புவமப் போலி. நல்ல குலத்திற் பிறந்தும் இழிந்தாரைத் தோய்ந்தமையான் அவர் நாற்றமே நாறியது, அவரையே பாதுகாவாய், மேற்குலத்துப் பிறந்த எம்மைத் தீண்டலென்பாள். அவையெல்லாம் விளங்கக் கூறாது பொய்கைப் பள்ளிப் பிறந்த நீர்நாய் முன்னாள் தின்ற வாளைமீன் புலவு நாற்றத்தோடு பின்னாளும் அதனையே வேண்டும் ஊரன் என்றமையின், பரத்தையர் பிறப்பு இழிந்தமையுந் தலைவி பிறப்பு உயர்ந்தமையுங் கூறி, அவன் பிறப்பின் உயர்வுங் கூறினமையின் இது பிறப்புவமப் போலியாயிற்று.

இவையெல்லாங் கருதிக் கூறிற் செய்யுட்குச் சிறப்பா மெனவும், வாளாது நீர்நாய் வாளை பெறூஉ மூரனென்றதனான் ஒருபய மின்றெனவுங் கொள்க. 'பிறப்பொடு வரூஉந் திறத்த' என்றது, தலைமகனால் இவ்வாறு திறப்பாடு வேறுமுளவென்பதூஉங் கொள்க; அவை,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப

---

1. வெள்ளிய அணிகளையும் ஒள்ளிய நுதலினையும் உடைய அரிவை, அழகிய தழை யுடை யிடையிற் கிடந்து அசையப் பண்டு களவின்கண் பெருந்துறைப் புனலில் விளை யாட்டயர்தற்குப் புகுந்தாளாக அப் புனல் தேனுடைய நறிய குவளையின் மணம் கமழ்ந்து தண்ணிதாயிற்று அதனால் இப்போதும் அதனை விரும்புவேன் ஆயினேன்.- தலைவன் கூற்று.

2. பொய்கையையே பள்ளியிடமாகக் கொள்ளும் நீர்நாயானது நாளும் வாளைமீனை இரையாகப் பெறும் ஊரனே! எம் அழகே தொலைவதாய் இருந்தாலும் பிற பரத்தை யரைத் தோய்ந்த நின் மார்பைச் சேரமாட்டோம்.

அதனாற், றன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே"[1] (ஐங்குறு.41)

என்றவழி, தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலையென்பது, இன்னுந் தலைமகனது கொடுமைக்கு உவமையாயிற்று. வெண்பூம் பொய்கைத்து அவனூரென்பது தலைமகள் பசப்புநிறம்பற்றி உவமையாயிற்று. ஆதலான் வினையுவமமும், உருவுவமமும் ஒரு செய்யுளுள்ளே தொடர்ந்து ஒருங்கு வருதலும் உடைய வென்பது; அவை,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப
அதனாற், றன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே" (ஐங்குறு.41)

என்றவழி, இன்ன திறத்த[2] னென்றதனானே இத்தன்மைத்தாகிய ஊரனையாளெனச் சொல்லுதலும், தலைவனூரின்கணுள்ளன சொல்லத் தலைவற்கேயன்றித் தலைவிக்கேற்ற உவமைதோன்றச் செய்தலுமென உவமங்[3] கூறியவழி உள்ளுறையுவமங் கோடலும், பிறவாறு வருவன வுளவாயினும் எல்லாங் கொள்க.

"தேர்வண் கோமான் றேனூ ரன்னவிவள்" (ஐங்குறு.55)

என்பது அவனூரனையாளென வந்தது.

"வெண்பூம் பொய்கைத் தவனூர்" (ஐங்குறு.41)

என, தலைவனூரின் உள்ளதொன்றனால் தலைவிக்குவமையே பிறப்பித்தவாறாயிற்று. அல்லாக்கால், 'வெள்ளை யாம்ப லடைகரை' என்றதனாற் பயனின்றென்பது. (25)

## சிவலிங்கனார்

**தவலருஞ் சிறப்பின்............................என்ப.**

*இச் சூத்திரம் உவமப்போலி ஐந்தாமாறு கூறுகின்றது.*

(இ-ள்) கெடலரிய சிறப்புடைய அவ் வுவமப்போலியின் தோற்ற இயல்பை ஆராயின் வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்பனவற்றால் வரும் இயல்புடையதாகும் என்பர் என்றவாறு.

---

1. தன் குட்டியையே தின்னும் அன்பில்லாத முதலையொடு வெள்ளிய பூம்பொய்கையும் உடையது, அத் தலைவன் ஊர் என்று சொல்லுவர்; அதனால் அவ் வூர்க்குரியனாகிய தலைவன் தன் சொல்லை மெய்யென்று தெளிந்த நம் மேனியை இன்னும் வாராமல் பொன்போல் மாமையுண்டாகச் செய்யும்.
2. இன்னும் 'திறத்தன்' என்றதனானே என்றிருத்தல் வேண்டும்.
3. ஏனை உவமம் என்றிருத்தல் வேண்டும்.

**வினையுவமப்போலி**

"நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர" (கலி.119)

மதியே தன் நிலவைக் காண்பதுபோல் தோன்றுகிறது என்பதில் உவமையோ பொருளோ இல்லை. ஆனால் காண்பதுபோல ஏர்தர என உவமை வாய்பாட்டால் தற்குறிப்பேற்றம் கூறப்பட்டது. அதனால் வினையுவமம் போலியாயிற்று.

**பயனுவமப்போலி**

"அன்னை யறியினும் அறிக" என்னும் அகப்பாட்டினுள்(110) "நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி நின்றோன் போலும் இன்னும்என் கட்கே" என்பதில், ஒருகால் யாம் ஆடும் இடத்தில் வந்து பலவாறு நடந்தவன் யான் இவ்விடம் விட்டுப் பெயர்க என்னத் தான் என்னை நோக்கித் தன் தேர்பற்றி நின்ற அன்றைய நிலைபோல இன்றும் என் கண்ணில் நின்றான் என வருவது பயனுவமைப் போலியாம். இதில் உவமையும் பொருளுமாக நிறுத்திக் காண இயலாமை காண்க. இது கூறியதன் பயன் அறத்தொடு நிலையாம்.

**மெய்யுவமப்போலி**

"தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்." (குறள்.1033)

"தலைவன் என்னை மணந்த நாளில் பருத்த தோள்கள் இன்று மெலிந்து காணப்படலால் அவன் பிரிந்தமையைப் பிறர்க்கு அறிவிப்பன போல ஆயின" என்பதில் தலைவன் பிரிவால் மெலிந்த தோள்கள் பிரிவை அறிவியாதிருக்கவும் அறிவிப்பதுபோல் காணப்பட்டன என்றது வடிவுவமப்போலியாம். இதிலும் உவமையும் பொருளும் இன்மை காண்க.

**உருவுவமப்போலி**

உரு என்றது பண்பை.

"வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்த்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே." (குறுந்.196)

இதில் அன்பின் கூறுபாடு வேம்பின் காயைக் களவுக்காலத்தில் தந்தபோது கரும்புக்கட்டி என்றதும், கற்புக்காலத்தில் பறம்புச்சுனை நீரைத் தைமாதத்தில் தண்ணிதாகக் கொண்டுவந்து தந்தபோது சூடாகவும்

உவர்ப்பாகவும் உள்ளது என்றதுமாகிய அவ் விரண்டு தன்மை போலமைந்தது நின் அன்புப் பகுதி எனக் கூறுமுகத்தால் தலைவனின் பரத்தமை கூறப்பட்டது. அன்பின்பால் அவ் விரண்டு தன்மை போலும் என உவமைபோலக் கூறப்பட்டது; ஆனால் உவமையும் பொருளும் இன்மை காண்க.

**பிறப்புவமப்போலி**

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்." (குறள்.410)

இதில் "விலங்குடன் மக்கள் எத்துணை யுயர்வுடையவர் அத்துணை யிழிவுடையவர் கற்றாரோடு கல்லாதவர்" என்பதால் உவமையும் பொருளும் உள்ளன போலக் காணப்படினும் அவ்வாறு கொள்ள இயலாமல் உயர்ந்த அளவு இழிந்தவர் என மாறாகக் காணப்படுதலினால் போலியாயிற்று. பிறப்பு மக்கட்பிறப்பும் விலங்குப் பிறப்பும் கூறப்பட்டன.

## 297. கிழவி சொல்லின் அவளறி கிளவி. (26)

### இலக்குவனார்

301. If the lady - love uses this (*uvamappōli*) what she knows about the fauna and flora will be the theme.

### இளம்பூரணர்

297. கிழவி............................கிளவி.

*என்-னின், மேற்சொல்லப்பட்ட உவமை கூறுவார் பலருள்ளுந் தலைமகட்குரியதோர் பொருள் வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) உவமைப்பொருளைத் தலைமகள் கூறில் அவளறிந்த பொருட்கண்ணே உவமை கூறப்படும் என்றவாறு.

எனவே, தானறியாத பொருட்கண் கூறினாளாகச் செய்யுட் செய்தல் பெறாது என்றவாறு.

உதாரணம் தலைமகள் கூற்றுட் கண்டுகொள்க. (26)

## 298. தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது. (27)

### இலக்குவனார்

301. If maid - companion (*thō̱li*) uses it, it will not be outside the land (she habitates).

## இளம்பூரணர்

**298. தோழிக் காயின் .................. துரையாது.**

*என்-னின், இது தோழி உவமை கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தோழி உவமை சொல்லின் அந் நிலத்தின் உள்ளனவன்றிப் புறநிலத்திலுள்ளன கூறப்பெறாள் என்றவாறு.

உரையாது உவமம் என ஒருசொல் வருவிக்க. உதாரணம் தோழி கூற்றுட் காண்க. (27)

## பேராசிரியர்

**301. கிழவி சொல்லி......................துரையாது.**

*இது மேற்கூறிய உள்ளுறையுவமைக்கு ஆவதோர் இலக்கணம்.*

(இ-ள்) ஐந்து வகைப்பட்ட உவமப்போலியும் பிறிதொடுபடாது பிறப்புநோக்கி உணரக் கூறியவழி அக் கூற்றுத் தலைமகட்குந் தோழிக்கும் உரித்தாங்கால், தலைவிக்காயின் அவளறியுங் கருப்பொருளானே செய்யல் வேண்டும்; தோழிக்காயின் அந் நிலத்துள்ளன அறிந்து சொல்லினளாகச் செய்யுள் செயப்பெறாரென்றவாறு.

இதன் பயம்: தலைமகள், இந் நிலத்திதுள்ளனவெல்லாம் அறியுந் துணைப் பயிற்சியிலளெனவும் அவளாயத்தா[1]ராயின் இந் நிலத்திதுள்ளன அறியச் சிதைந்ததின்றெனவுங் கூறியவாறு.

"ஒன்றே னல்லே னொன்றுவென்" (குறுந்.208)

என்னும் பாட்டினுட் பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கைமரம் படப்பை[2]யிலுள்ள தாகலானுந் தன்னாற் பூக்கொய்யப்படு மாகலானும் அஃது அவளறி கிளவி யெனப்பட்டது.

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை" (ஐங்குறு.41)

என்பது, தோழிகூற்று; என்னை? அவற்றின் செய்கையெல்லாம் அறியாளன்றே தலைமகள் பெரும் பேதையாதலினென்பது. அதிகாரத் தானின்ற உள்ளுறையுவமை யென்பதனை அவளறி கிளவி யென்ற தற்குப் பெயர்ப் பயனிலையாகவும் நிலம்பெயர்ந் துரையாதென்னும் முற்றுவினைக்குப் பெயராகவும் வேறுவேறு சொல்லிக்கொள்க.[3] (26)

---

1. ஆயத்தார் - தோழியர்
2. படப்பை - தோட்டம்
3. அவளறி கிளவி எழுவாய், உள்ளுறையுவமம் பெயர்ப்பயனிலை; உள்ளுறையுவமம் எழுவாய், பெயர்ந்துரையாது பயனிலை.

**299. கிழவோற் காயின் உரனொடு கிளக்கும். (28)**

**இலக்குவனார்**

302. If it is for the lover he will utter with the fortitude of having known the things.

**இளம்பூரணர்**

**299. கிழவோற்........................கிளக்கும்.**

*என்-னின்,. இது தலைமகன் உவமை கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தலைவன் உவமை கூறுவானாயின் அறிவொடு கிளக்கப் படும்[1] என்றவாறு.

அன்றியும், உரனொடு கிளக்கு முவமையெனப் பெயரெச்ச மாக்கிப் பெயர் வருவித்தலுமாம்.[2] உதாரணம் தலைவன் கூற்றுட் காணப்படும். (28)

**300. ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே. (29)**

**இலக்குவனார்**

302. And for others, the place it not limited.

**இளம்பூரணர்**

**300. ஏனோர்க் கெல்லாம் ....................... வின்றே.**

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட மூவருமல்லாத நற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமை கூறுமிடம் வரையறுக்கப் படாதென்றவாறு. (29)

**பேராசிரியர்**

**302. கிழவோற்........................வின்றே.**

*இதுவும் அது.*

---

1. கிளக்கும் என்பதற்குக் கிளக்கப்படும் எனச் செயப்பாட்டு வினைப் பொருள் கூறப்பட்டது. உவமை தலைமகனாற் கூறப்படுதற் குரியதாயின் அவன் அறிவொடு பொருந்தக் கூறப்படும் என்பது பொருள்.

2. கிளக்கும் என்பதைப் பெயரெச்சமாக்கி உவமை எனும் பெயரை வருவித்தால் அதற்கு முடிவு இல்லையாதலின் இக் கூற்றுப் பொருந்தாது. அன்றியும் பெயரெச்சத்துக்குப் பெயர் முடிபு கூறாது விடுதல் இலக்கணத்துக்கு மாறுபட்டதாகும்.

.(இ-ள்) கிழவோன் சொல்லும் உள்ளுறைவுவமந் தன்னுடைமை தோன்றச் சொல்லப்படும். ஏனோரெனப்பட்ட பாங்கனும் பாணனு முதலாயினார் சொல்லுங்காலை, மேற்கூறிய வகையானே இடம் வரையப்படாது தாந்தாம் அறிந்த கிளவியானும் நிலம்பெயர்ந்துரையாத பொருளானும் அந் நிலத்துள்ள பொருளானும் உள்ளுறையுவமை சொல்லப் பெறுப என்றவாறு.

"கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றாக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருது
மொண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே"[1] (ஐங்குறு.92)

என்றவழி, தாய்போன்று நும்மைத் தலையளிப்பலெனத் தலைமகன் தலைமைதோன்ற உரனொடு கிளந்தவாறு காண்க. ஒழிந்தோராயின் வரையறையின்மையிற் காட்டாமாயினாம். அவை வந்துழிக் (கலி.69) காண்க. (27)

**301. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்**
**உவம மருங்கில் தோன்றும் என்ப. (30)**

## இலக்குவனார்

303. They say that the expression of pleasure and the expression of sorrow may appear in this sort of *uvamam*.

## இளம்பூரணர்

**301. இனிதுறு கிளவியும்..........................என்ப.**

*என்-னின், இது தலைவற்குந் தலைவிக்குந் தோழிக்கு முரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) மகிழ்ச்சி பயக்குங் கூற்றும் புலவி பயக்குங் கூற்றும் உவமப் பக்கத்தால் தோன்றும் என்றவாறு.

"மாரி யாம்பல் அன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு

---

1. பொருள்: தலைமகன் கூறியது. மடந்தையே நின்னை யாம் மணக்கப்பெறின் கரிய கொம்புடைய எருமைப் புனிற்றுப் பசுவானது தன் கன்றுக்குப் பாலூறும் முலையைக் கொடுக்கும் நும் தந்தையர் ஊர்க்கு யாம் வருவேம். புனிற்றுப் பசு குழவிக்கு முலை மடுப்பதுபோல் யான் நின்னைப் போற்றிப் புரப்பேன் என்பது உள்ளுறை.

கண்டல் வேரளைச் செலீஇய ரண்டர்
கயிறிரி யெருத்திற் கதழ்பூந் துறைவ"[1] (குறுந்.117)

என்றது தலைமகள் உவமை கூறியவழி நின்ற பெண்டிர் தடுப்பக் கயிறிரி யெருதுபோலப் போந்தனை யெனத் துனியுறு கிளவி[2] வந்தது.

"..............................................................வானத்
தணங்கருங் கடவு ளன்னோள்நின்
மகன்தா யாதல் புரைவதால் எனவே" (அகம்.16)

என மகிழ்ச்சிபற்றி வந்தது. பிறவுமன்ன. (30)

## பேராசிரியர்

**303. இனிதுறு கிளவியுந்...............................மென்ப.**

*இதுவும், மேலதற்கே யாவதோர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) மேற்கூறப்பட்ட உள்ளுறையுவமம் இன்ப துன்பங்கள் தோன்றச் சொல்லவும்படும் என்றவாறு.

"கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்" (குறுந்.8)

என்பது, பலவகை யின்பமும் வருந்தாது பெறுவரென்பதற்கு உவமையாகி வருதலின் இனிதுறு கிளவி யெனப்பட்டது.[3]

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத்து" (ஐங்குறு.24)

என்பது, தலைமகன் கொடுமை கூறினமையின் துனியுறு கிளவியாயிற்று.[4]

இவ்விரு பகுதியும் படச் செய்யப்படும் மேற்கூறிய உள்ளுறை யுவமமென்பது இதன் கருத்து.

'மருங்கு' என்னும் மிகையானே ஏனையுவமத்தின்கண்ணும் இப் பகுதி கொள்ளப்படும்; அவை,

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே" (குறுந்.71)

என்பது, இனிதுறு கிளவி.

---

1. பொருள்: மாரிக்காலத்து ஆம்பல் போலும் வெள்ளிய கொக்கினது பார்வைக்கு அஞ்சிக் குளிர்ந்த நண்டானது தாழையின் வேர்ப்பொந்தின் உள்ளே காவலாகச் செல்லுமாறு இடையர் கயிற்றையும் அறுத்து ஓடும் எருத்தினையுடைய பூந்துறைவனே.

2. துனியுறு கிளவி - ஊடலுள்ள சொல்

3. விளைந்து முதிர்ந்து தானே உதிர்ந்த மாம்பழத்தைப் பழனவாளை எளிதில் கதுவும் ஊரன் என்றமையால் தலைவனும் பலவகை இன்பங்களை எளிதில் நுகர்வன் என்பது உள்ளுறை யாகும்.

4. தாய்நண்டு சாமாறு பிறக்கும் நண்டினையும், குட்டியைத் தின்னும் முதலையையும் உடையது தலைவன் ஊர் என்றது தலைவன் கொடுமையைக் குறித்தது. அதாவது அவைபோல் அவனும் பிறர்க்கு (தமக்கு)த் துன்பம் செய்வன் என்பது உள்ளுறை.

"கராத்தின் வெய்யவோ தோள்" (ஐந்.ஐம்.24)

என்பது துனியுறு கிளவி. (28)

## 302. கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே. (31)

## இலக்குவனார்

304. The lady-love may use this in two places only.

## இளம்பூரணர்

**302. கிழவோட்..................துரித்தே.**

*என்-னின், தலைமகள் உவமை கூறுமிடன் உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தலைமகள் உவமை கூறுங்கால் மேற்சொல்லப்பட்ட இரண்டிடத்தும்[1] உரித்து என்றவாறு.

எனவே, இரண்டும் அல்வழி உவமை கூறப்பெறாள் என்றவாறாம். (31)

## பேராசிரியர்

**304. கிழவோட்.........................துரித்தே.**

*இஃது, அவ் வுள்ளுறையுவமையை வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தலைமகள் இரண்டிடத்தல்லது உள்ளுறையுவமை **சொல்லப்பெறாள்** என்றவாறு.

இரண்டிட மென்பன: மருதமும் நெய்தலும்; அந் நிலத்துப் பிறந்த பொருள்பற்றியல்லது உள்ளுறையுவமஞ் சொல்லுதல் கிழத்திக்குரித்தன் றென்பது கருத்து. இவ்விடத்து உரிமையுடைத் தெனவே குறிஞ்சிக்கண் அத்துணை யுரித்தன் றென்றவாறு.

"தாமரை வண்டூது பனிமல ராருமூர
யாரை யோநிற் புலக்கேம்" (அகம்.46)

என்றவழி, வண்டூது பனிமலரெனப் பிறர்க்குரிய மகளிரெனவும் அவரை நயப்பாயெனவு உள்ளுறையுவமம் மருதத்துக்கண் வந்தது.

"அன்னை வாழிவேண் டன்னை கழிய
முண்டக மலருந் தண்கடற் சேர்ப்ப

1. இரண்டிடம் - இனிதுறும் இடம் துனியுறும் இடம்.

னென்றோ டுறந்தன னாயி
னென்னாங் கொல்லவ னயந்தோ டோளே"[1] (ஐங்குறு.108)

என்பது நெய்தல். இதனுட் 'கழிய முண்டக மலரும்' என முள்ளுடையதனைப் பூமலருமென்று உள்ளுறுத்ததனான் இருவர் காமத்துறைக்கண்ணும் ஒருதலை இன்னா, ஒருதலை இனிதென்றாளென்பது. 'என்றோ டுறந்தனன்' என்பது முள்ளுடைமையோ டொக்க, 'என்னாங் கொல்லவ னயந்தோ டோள்' என்றவழி அவன் அன்பிற் றிரியாமை கூறினமையின் முண்டகமலர்ச்சியோ டொப்பிக்கப்படும். பிறவும் அன்ன.

"குன்றக் குறவன் புல்வேய் குரம்பை
மன்றா டிளமழை மறைக்கு நாடன்
புரையோன் வாழி தோழி விரைபெய
லரும்பனி யளைஇய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே"[2] (ஐங்குறு.252)

என்னுங் குறிஞ்சிப்பாட்டினுள் வறுமைகூர்ந்த புல்வேய் குரம்பையை மழை புறமறைத்தாற்போல வாடைசெய்யும் நோய்தீர்க்க வந்தானென்று உள்ளுறையுவமஞ் செய்தவாறு கண்டுகொள்க.

இனி, 'கிழவோட் குவமம் பிரிவிடத் துரித்து' என்பது பாடமாக உரைப்பாருமுளர். யாதானுமொரு நிலத்தாயினும் பிரிந்திருந்தவிடத்து உள்ளுறையுவமங் கூறப்பெறுங் கிழத்தியென்பது இதன் கருத்து. பெருந்தண் வாடையின் முந்துவந்தோனென்பது பிரிவன்றாகலின் ஈரிடமென்றலே வலிதென்பது. (29)

## 303. கிழவோற் காயின் இடம்வரை வின்றே. (32)

## இலக்குவனார்

305. The lover has no place of restriction.

## இளம்பூரணர்

**303. கிழவோற்............................வின்றே.**

*என்-னின், தலைமகற்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தலைமகன் உவமை கூறுதல் எப்பொருட்கண்ணுமாம் என்றவாறு. (32)

---

1. பொருள்: தோழியே! வாழி. உப்பங்கழியில் முள்ளிச்செடி மலரும்படியான தண்ணிய கடற்றுறைத் தலைவன் என் தோளைத் துறந்து சென்றானாயின் அவனால் விரும்பப்பட்டவள் தோள் என்னாகும்?

2. பொருள்: தோழீ! குன்றத்துள்ள குறவனது புல்லால் வேயப்பட்ட கூரையானது ஊர் மன்றத்துப் பெய்யும் மெல்லிய மழையை மறைக்கும்படியான நாடனாகிய தலைவன் உயர்ந்தவனே யாவான். ஏன்எனின் விரைந்து பெய்யும் மழையோடு மிக்க பனிகலந்த கூதிர்காலத்தில் பெரிய தண்ணிய வாடைக் காலத்து நம்மிடம் வந்து சேர்ந்தான்.

## பேராசிரியர்

**305. கிழவோற்.........................வின்றே.**

*மேல் 'உரனொடு கிளக்கும்' (302) என்றதல்லது இன்னவழிச் சொல்லப்பெறுந் தலைமக னென்றிலன். அதனான் அவற்கு எல்லா நிலனும் உரியவா மென்கின்றானென்பது.*

(இ-ள்) தலைமகற்கு இடவரையறை இல்லை என்றவாறு.

வரையறை யில்லனவற்றுக்கு வரையறை கூறாமே முடியாவோ வெனின், அங்ஙனமாயினுங் கிழத்திக்குந் தோழிக்கும் இடம் வரையறுத்ததனைக் கண்ட மாணாக்கன் இவ்வாறே தலைமகற்கும் இடவரையறை யுண்டுகொலென்று கருதிற் கருதற்கவென்றற்கு இது கூறினானென்பது. (30)

**304. தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான. (33)**

## இலக்குவனார்

306. The maid-friend(*thōḻi*) and foster-mother are at liberty to use knowing the context where to use.

## இளம்பூரணர்

**304. தோழியும் செவிலியும்...................................யான.**

(இ-ள்) என்-னின், தோழியுஞ் செவிலியும் உவமை கூறுங்காற் பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியர் கேட்டோர் கொள்ளுநெறியான் என்றவாறு.

"பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்"[1]

என வரும். பிறவுமன்ன. மேற்காட்டினவற்றுள் கண்டுகொள்க. (33)

## பேராசிரியர்

**306. தோழியுஞ் செவிலியும்........................யான.**

*இது, தோழியுஞ் செவிலியும் உள்ளுறையுவமங் கூறுமிட முணர்த்துதல் நுதலிற்று.*

---

1. சூரியனின் கதிராகிய சேனையை இருளானது வளைத்துக்கொண்டது போலத் தோன்றும் மயக்கம் தரும் அழகிய பொழில். இதில் பொழிலில் உள்ள நிழலை - இருளைச் சிறப்பிப்பது நோக்கம். சூரியன் அரசனாகவும் கதிர் சேனையாகவும் உருவக உவமையாகக் கூறப்பட்டன. இவ் வரிகள் இருக்குமிடம் அறியப்படவில்லை. தோழி அல்லது செவிலி கூறியதாகக் கொள்ளுதல் வேண்டும்.

(இ-ள்) காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்துமாற்றான் உள்ளுறை யுவமங் கூறற்குரியர் தோழியுஞ் செவிலியும் என்றவாறு.

காலமுமிடனும் பொருந்துதலென்பது வெளிப்படக் கிளவாது முன்னத்தான் மறைத்துச் சொல்லவேண்டியவழி அவ்வாறு சொல்லப் பெறுப அவரு மென்றவாறு. இங்ஙனங் கூறவே,

"ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே" (302)

என்றவழி, எல்லாரும் உள்ளுறையுவமஞ் சொல்லப்பெறுவரென்பது பட்டது. அதனை நற்றாயும் ஆயத்தாருந் தந்தையுந் தன்னையரும் உள்ளுறையுவமை கூறப்பெறா ரெனவும், தோழி கூறின் நிலம்பெயர்ந் துரையாத பொருளான் ஒருவழிக் கூறுமெனவும், செவிலிக்காயின் இடம் வரைவின்றெனப்பட்ட வகையாற் பொருந்தும் வழிக் கூறுதற்குரியளெ னவுங் கூறினானாம் இச் சூத்திரத்தானென்பது. 'கொள்வழி' என்றதனால் தோழிக்குப் போல நிலம் பெயர்ந் துரையாத பொருளான் உள்ளுறை யுவமங் கூறுதலே செவிலிக்குமுரித்தென்பது கொள்க. மற்றிவையெல்லாம் அகப்பொருட்கே யுரியவாக விதந்தோதிய தென்னை? புறப்பொருட்கு வாராதனபோலவெனின், ஆண்டுவருதல்[1] அரிதாகலின் இவ்வாறு அகத்திற்கே கூறினானென்பது.

"வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரு
மென்பல வைப்பி னன்னாட்டுப் பொருந" (புறம்.42)

என்றக்கால், பகைவேந்தரை வென்றி கொள்ளுங்கால் அவர்தாமே தத்தம் பொருள் பிறர்க்களிப்பா ரென்னும் பொருள் தோன்றினுந் தோன்று மென்பதல்லது, ஒருதலையாக உள்ளுறையுவமங் கோடல்வேண்டுவ தன்று;[2] என்னை?

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர்"[3] (ஐங்குறு.24)

---

1. ஆண்டு - புறப்பொருளில்

2. "வளமில்லாத வன்னிலத்து வாழும் உறவினர்க்கு அவர்வரின் விருந்தளிக்கும் வளமான மென்னில ஊர்களையுடைய நல்ல நாட்டை வென்று கொண்ட வீரனே" என்பது இரண்டு வரிகளின் பொருள். இதிலிருந்து அந் நாட்டு மக்கள் வருவோர்க்குத் தத்தம் பொருள்களை அளிப்பர் என்பது பெறப்படும். இது உள்ளுறை - புறப்பாடலில் வந்த உள்ளுறை. இவ் வுள்ளுறை பெற்றே யாதல் வேண்டும் என்பதில்லை. ஏன் எனின் கூறப்பட்ட பொருளிலேயே அது புலப்படும். அதையே "அந் நாட்டு மக்கள் முதலாயினார்......................வளமை கூறினமையின் என்பது" என்றார் பேராசிரியர்.

3. நண்டு கருவுயிர்க்கின் அது உடனே சாம். அதனால் தாய் சாவப் பிறக்கும் நண்டு என்றார். முதலை தன் பிள்ளையைத் தான் ஈன்றஉடனே தின்னும். இவ் விரண்டும் உள்ள ஊர் தலைவனது என்பதால் தன்னைச் சார்ந்த நமக்கு அவன் துயர் விளைக்கின்றான் என்னும் உள்ளுறை பெறப்படும். இதுபோல் 'வன்புலக் கேளிர்க்கு' என்பதில் உள்ளுறையமையவில்லை.

என்றாற்போலக் கூறாது அந் நாட்டுக் கருங்களமர் முதலாயினார் வருந்தாமற் பெறும் பொருள் பிற நாட்டார்க்கு விருந்து செய்யத் தகுமென்று அந் நாட்டினது வளமை கூறினமையினென்பது. தோழி பொருந்தியவழிக் கூறுமாறு முன் காட்டப்பட்டன. செவிலி பொருந்து வழிக் கூறுவனவுங் கண்டுகொள்க. இலக்கணமுண்மையின் அவையும் உளவென்பது கருத்து. (31)

**305. வேறுபட வந்த உவமைத் தோற்றம்**
**கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல். (34)**

## இலக்குவனார்

307. The appearance of simile in different ways is allowed if it is suitable to the context.

## இளம்பூரணர்

**305. வேறுபட வந்த.........................கொளாஅல்.**

*என்-னின், மேலனவற்றிற் கெல்லாம் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) ஈண்டு எடுத்தோதப்பட்ட இலக்கணத்தின் வேறுபட்டுவந்த உவமைத்தோற்றம் எடுத்தோதிய நெறியிற் கொள்ளும்வழிக் கொளுவுக என்றவாறு.

"பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
இருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்"

என வரும்[1]. பிறவுமன்ன. (34)

## பேராசிரியர்

**307. வேறுபட வந்த....................................கொளாஅல்.**

*இது, மேலெல்லாம் இருவகையுவமுங் கூறி இன்னும் ஏனையுவமப் பகுதியே கூறுவான் எய்தாத தெய்துவித்தது.*

(இ-ள்) வேறுபட வந்த உவமத்தோற்றம் - வேறுபாடு தோன்ற வந்த உவமைச்சாதி; தோற்றமெனினும் பிறப்பெனினுஞ் சாதியெனினும் ஒக்கும்; கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல் - அங்ஙனம் வேறுபட வந்தனவாயினும் மேற்கூறிய பகுதியானே கொள்ளுமிடனறிந்து கொளுத்துக என்றவாறு.

---

1. சூரியனை அரசன் என்றதும் கதிரைச் சேனை என்றதும் உருவகநிலையில் அமைந்த உவமைகள்.

"கொளுவுதலென்பது 'கொளாஅல்' என்பதாயிற்று.[1]

வேறுபட வருதலென்பது உவமைக்கும் பொருட்கும் ஒப்புமை மாறுபடக் கூறுதலும், ஒப்புமை கூறாது பெயர் போல்வனவற்று மாத்திரையானே மறுத்துக் கூறுதலும், ஒப்புமை மறுத்துப் பொருளை நாட்டிக் கூறுதலும், ஒப்புமை மறுத்தவழிப் பிறிதோருவமை நாட்டுதலும், உவமையும் பொருளும் முற்கூறி நிறீஇப் பின்னர் மற்றைய ஒவ்வா வென்றலும், உவமைக்கு இருகுணங் கொடுத்துப் பொருளினை வாளாது கூறுங்கால் உவமையினை இரண்டாக்கி ஒன்றற்குக் கூறிய அடை ஒன்றற்குக் கூறாது கூறுதலும், ஒப்புமை குறைவுபட உவமித்து மற்றொரு குணங்கொடுத்து நிரப்புதலும், ஒவ்வாக் கருத்தினான் ஒப்புமை கோடலும், உவமத்திற்கன்றி உவமத்திற்கு ஏதுவாகிய பொருட்குச் சில அடை கூறி அவ் வடையானே உவமிக்கப்படும் பொருளினைச் சிறப்பித்தலும், உவமானத்தினை உவமேயமாக்கியும் அது விலக்கியுங் கூறுதலும், இரண்டு பொருளானே வெவ்வெறு கூறியவழி ஒன்று ஒன்றற்கு உவமையென்பது கொள்ளவைத்தலும் இன்னோரன்னவெல் லாம் (வேறுபட வந்த உவமத் தோற்றம் எனப்படும்).

இவற்றைக் 'கூறிய மருங்கிற் கொள்ளுதல்' என்பது, முற்கூறிய ஏனையுவமத்தின்பாலும் பிற்கூறிய உள்ளுறையுவமத்தின்பாலும் படுத்து உணரப்படுமென்பது. ஏனையுவமத்தின்பாற் படுத்தலென்பது: வினை, பயன், மெய், உரு என்ற நான்கும்பற்றி (276) வருதலும் அவற்றுக்கு ஓதிய ஐவகை நிலைக்களனும்பற்றி (279 - 280) வருதலுமெனக் கொள்க. உள்ளுறையுவமத்தின்பாற் படுத்தலென்பது. இவ் வேனையுவமம் போல உவமையும் பொருளுமாகி வேறுவேறு விளங்க வாராது குறிப்பினாற் கொள்ளவருதலின் இக் கருத்தினானே இதனை ஈண்டு வைப்பானாயிற்று. வரலாறு:

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்[1]
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ[2]
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப[3]
வொடுங்கா வுள்ளத்[4] தோம்பா வீகைக்[5]
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி[6] புறக்கொடுத் திறத்தி[7]
மாறி வருதி[8] மலைமறைந் தொளித்தி[9]
யகலிரு விசும்பி னானும்
பகல்விளங் கலையாற்[10] பல்கதிர் விரித்தே"* (புறம்.8)

என்னும் பாட்டினுள்,

---

1. கொள்ளுதல் - தன்வினை, கொளுவுதல் - பிறவினை. கொளுவுக என்னும் பிறவினை கொளாஅல் என வந்தது.

* இதில் 1 முதல் 5 வரையுள்ளவனவற்றை ஞாயிற்றுடன் சேர்த்து அவற்றிற்கு மாறுபட்ட எதிர்மறைப் பொருள்கொள்ளுதலும், 6 முதல் 10 வரை யுள்ளவற்றைச் சேரலாதனுடன் சேர்த்து எதிர்மறுத்துப் பொருள் கொள்ளுதலும் வேண்டும். உரையாளர் நுட்பமாக விளக்கிச் செல்லுதலைக் காண்க.

"கடந்தடு தானைச் சேர லாதனை"

என்னுந்துணை, உவமத்திற்கு வந்த அடையினைப் பொருட்கு மறுத்துக் கொள்ள வைத்தானென்பது; என்னை? 'வெஞ்சுடர் வழி' என்னுந்துணை உவமத்திற்குரிய அடையினைப் பொருட்கு மறுத்துக் கொள்ள வைத்தானென்பது. இனிப் 'பொழுதென வரைதி' என்பது தொடங்கிப் பாட்டு முடிகாறும் பொருட்குரிய அடையினை உவமத்திற்கு மறுத்துக் கொள்ள வைத்தானென்பது; என்னை? வெஞ்சுடர்வழித் தோன்றிய அரசனைத் தண்சுடரோடு பழிப்பான் 'பொருளே உவமஞ்' செய்தானென்பது.

'பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்' (284)

என்றதனாற் பொருளினை உவமையாகக் கூறாது உள்ளுறையுவமம் போலக் கொள்ள வைத்துப் பின்னர் உவமத்திற்கு அடையாயவற்றுள்,

"வையங் காவலர் வழிமொழிந் தொழுக"

என்றான்.

வழிமொழிதலென்பது, வேற்றரசர்க்குத் தம் தன்மையென வேறின்றித் தன்னகப்படுத்தல்; ஆகலான், தத்தம் ஒளியொடு படுத்து ஒழிந்த கோளுஞ் செல்லத் தானுஞ் செல்லும் மதியமென்று எதிர் மறுத்துக் குற்றங்கூறும் குறிப்புப்பட வைத்தானென்பது.

"போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது"

எனவே, இன்பநுகர்வு முற்றுச் சிறப்பில்லாக் கட்டுரையெய்தானெனவும், அவனோடு உவமிக்கின்ற மதியமாயின் இருபத்தெழுவர் மகளிரொடு போகந்துய்த்துச் சிறப்பில்லாத கட்டுரை புனையு மென்றும் எதிர்மறுத்துக் கொள்ளவைத்தான். சிறப்பின்மையென்பது எல்லார்க்கும் ஒத்தவாற்றான் அறஞ் செய்யாது உரோகிணிமேற் கழிபெருங் காதலனெனப் படுதல் போல்வன.

"இடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப"

எனவே, எஞ்ஞான்றுந் தன்னெல்லைக்கண்ணே வரும் மதிமண்டில மென்று எதிர்மறுத்துக் கொள்ளப்படும். 'ஒடுங்கா வுள்ளம்' எனவே அம் மதியந் தேய்ந்தொடுங்குமென்பது கொள்ளப்படும். 'ஓம்பா வீகை' எனவே, நாடோறும் ஒரோவோர் கலையாகப் பல்லுயிர்க்கும் இன்பம் பயக்குமாற்றால் தருவதல்லாது தானுடையதெல்லாம் ஒருகாலே கொடாத மதிய மெனப்படும். 'கடந்தடு தானை' எனவே, மதிக்குந் தானையாகிய தாரகையெல்லாம் பகைக்கதிராகிய பருதிமண்டிலத்துக்குத் தோற்கு மென்றானாம். இவ்வாற்றான் உவமான அடையெல்லாம் எதிர்மறுத்துக் கொள்ளப்பட்டன.

இனி, பொருட்குரிய அடையும் அவ்வாறே எதிர்மறுத்துக் கொள்ளப்படுமென்றவாறு. 'வீங்குசெலன் மண்டிலம்' எனவே,

கடையாயினார் கதியிற்செல்லு மதியமென்று பாட்டுடைத் தலைவன் தலையாயினார் கதியிற் செல்லுமென்றான். 'பொழுதென வரைதி' எனவே, நாடோறும் நாழிகை வேறுபட்டு எறித்தியென்றதனான் இவன் பொழுது செய்யானெனவும், 'புறக்கொடுத் திறத்தி' எனவே, தோற்றோர் போன்று ஒளிமழுங்கிச் செறிகின்றா யெனவும், 'விளங்கித் தோன்ற' வெ)ன்பதனால் (தொடர்கின்ற) சுடர்போல விளங்கிப் பிறர் தோற்றோடக் காயும் இவனெனவும், 'மாறி வருதி' எனவே, திங்கடோறும் மாறிப் பிறத்தி யென்பதனான் இவன் நிலைபெற்றா னெனவும், 'மலைமறைந் தொளித்தி' எனவே மலைசார்ந்தவழித் தோன்றா யென்பதனான் இவன் தன்னாட்டு மலை மீக்கூறுமெனவும், 'அகலிரு விசும்பினானும்' எனவே இவன் இவ் வுலகத்து நிலைபேறுடைய னெனவும், 'பகல் விளங்காய்' எனவே, இவன் இருபொழுதும் விளங்குமெனவுங் கொள்ளப்படும். முற்பகுதியும் பிற்பகுதியும் வேறுபடுதலின் வேறுபட வந்ததாயிற்று, மற்றையவும் அன்ன.

இக் கூறிய அடையெல்லாம், வினை, பயன், மெய், உருவெனக் "கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளுவுவ"தாகக் காட்டுவனவற்றிற்கும் இஃதொக்கும்.

> "கண்ண னவனிவன் மாறன் கமழ்துழாய்க்
> கண்ணி யவற்கிவற்கு வேம்புதார் - வண்ணமு
> மாய னவனிவன் சேயன் மரபொன்றே
> யாய னவனிவன் கோ"[1]

என்பது பெயருந் தாரு முதலாயினபற்றி மாயனொடு உவமங் கருதி மறுத்துரைத்தவாறு. பெயரென்பது பொருளுணர்த்துதலின் அதனை வடிவின்பாற் படுத்துணர்க.

> "அடிநோக்கி னாழ்கடல் வண்ணன்றன் மேனிப்
> படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரோன் - முடிநோக்கிற்
> றேர்வளவ னாத றெளித்தேன்றன் சென்னிமே
> லாரலங்க றோன்றிற்றுக் கண்டு"[2] (தண்டி.ப.39)

என்பதனுள், ஆழ்கடல் வண்ணனையும் கொன்றைத் தாரோனையும் உவமை கூறி யவற்றை மறுத்துத் தேர்வளவனெனத் தெளிந்தேனெனப் பொருளையே நாடுதலின் அஃது, உவமம் வேறுபட வந்ததாயிற்று.

---

1. கண்ணனும் மாறனும் அரச மரபால் ஒன்றாக அமைந்தனர். ஆனால் பெயரால் அவன் கண்ணன் இவன் மாறன். அவன் மாலை துழாய். இவன் மாலை வேம்பு. நிறத்தால் அவன் கரியன். இவன் சேயன் (செம்மையன்). அவன் ஆயர்குலத்தான். இவன் அரசகுலத்தான். ஒப்புமை நீக்குதலின் இதுவும் ஒருவகை உவமையே.

2. அடியைப் பார்த்தால் உலகளக்கும் நிலையின் கடல்வண்ணனாகிய திருமாலாக நினைத்தேன்; உடம்பைப் பார்த்தால் செம்மைநிறத்தால் சிவனாக நினைத்தேன்; ஆனால் முடியைப் பார்த்தபோது அதில் ஆத்திமாலை யிருக்கக்கண்டு வளவனாக (சோழனாக)த் தெளிந்தேன்.

"இந்திர னென்னி னிரண்டேகண் ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லை - யந்தரத்துக்
கோழியா னென்னின் முகமொன்றே கோதையை
யாழியா னென்றுணரற் பாற்று"[2] (முத்தொள்.130)

என்பதனுள், இந்திரனையும், இறையோனையும், முருகனையும் ஒப்புமறுத்து, நெடியோனை உவமங் கூறலின் ஒப்புமை மறுத்துப் பிறிது நாட்டியது.

"சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானாங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்-பொற்றொடீஇ
யாழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்"[2] (தண்டி.ப.52)

என்பதனான், உவமையும் பொருளும் முன் ஒருங்கு நிறீஇப் பின்னர் ஒவ்வாமை கூறுதலின் இதுவும் பின்னும் வேறுபட வந்ததாயிற்று.

"புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுப - புனனாட
னேற்றெறிந்த மாற்றலர்பா லெய்தியபார் மாயவ
னேற்றிரந்து கொண்டமையா னின்று"[3] (தண்டி.ப.53)

என்பதும் அது.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறு போல
வினியை பெரும வெமக்கே"[5] (புறம்.94)

என்னும் பாட்டினுள், உவமையாகிய பொருளினை யானையுங் கடாமுமென இரண்டாக்கி யானைக்கே ஊர்க்குறுமாக்கள் வெண்கோடு கழாலின் நீர்த்துறை படியு மென்னும் அடைகூறி, ஊர்க்குறுமாக்கள் போல்வாரைத் துன்னருங் கடாத்திற்குச் சொல்லாமையின் இதுவும் வேறுபட வந்த உவமத் தோற்றமெனப்பட்டது.

---

1. கோதையை (சேரனை) இந்திரன் என்னலாம் எனின் ஆயிரம் கண் இல்லை இரண்டு கண்களே உள்ளன. ஏறு ஊர்ந்த சிவன் என்னலாம் எனின் முடியில் பிறைஇல்லை, மேலுயர்ந்த கோழிக்கொடியுடையான் (ஆறுமுகன்) எனின் முகம் ஆறு இல்லை ஒன்றே காணப்படும். அதனால் திருமால் என்று உணரலாம். ஏன்எனில் அவனிடம் ஆழி(சக்கரம்) உண்டு இவனிடம் ஆணைச்சக்கரம் உண்டு.

2. மன்மதனும் கிள்ளியும் நிறத்தால் ஒவ்வார்; ஏன் எனில் ஆழியுடைய திருமால் மகனாகிய மன்மதன் கரியன், கோழி எனும் உறையூரையுடைய சோழ அரசனின் மகனாகிய கிள்ளி செம்மை நிறமுடையவன்.

3. சோழனும் திருமாலும் வினையால் வேறுபடுவர்; மாவலிச் சக்கரவர்த்தியாய்ப் பிறரை வென்று கொண்ட மண்ணைத் திருமால் வாமனனாய் வந்து இரந்து கொண்டான்.

4. யானை கழுவப்படும்போது அதன் வெள்ளிய கோட்டை ஊர்க் குறுமாக்கள் (சிறுவர்) கழுவும்போது அவர்க்கு அவ்யானை இன்பம் செய்தல் போல எமக்கு அரசனே நீ இனியனாவாய் என்பது பொருள். இதற்கு உரையாளர் தரும் விளக்கம் சிறப்பில்லை.

"முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையெனப்
பெயறுளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை"[1] (கலி.56)

என்றவழி, முதிர்கோங்கின் முகையும் முற்றிய குரும்பையும் பெரிய வாகலின் அவைபோலப் பெருத்த நின் இளமுலையென்றால் ஒத்தது, பெயறுளி முகுளஞ் சிறிதாக அவற்றொடு இதனை உடன்கூறி ஆ் பெயறுளி முகுளத்திற்கில்லாத பெருமைக்குணம் பொருட்குப் பின்னர் விதந்து கூறுதலின் அதுவும் வேறுபடவந்த உவமையாயிற்று.

"மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்" (குறள்.1071)

என்பது ஒவ்வாப் பொருளை ஒப்புமை கொண்டது; என்னை? மக்களைக் கயவர் ஒவ்வா ரென்னுங் கருத்தினான் மக்கள் போல்வர் கயவ ரென்றமையின் அதுவும் வேறுபட வந்த உவமையாயிற்று.

"நெடுந்தோட் டிரும்பனை நீர்நிழல் புரையக்
குறும்பல முரிந்த குன்றுசேர் சிறுநெறி"[2]

என்பதனுள், உவமையாகிய நிழல் பொருட்கெய்தியது உவமவினை யன்றே, அதற்கு நெடுந்தோடும் பெருமையும் அடையாகக் கூறினான்; கூறவே, பனைநிழலோ டொக்குங் குன்றஞ்சேர் சிறுநெறி முடிந்தவழிச் சென்றுபுகும் ஊர்க்குவமை நெடுந்தோடென்று கொள்ளவைத்தமையின் அதுவும் வேறுபட வந்த உவமையாயிற்று.

"மண்படுதோட் கிள்ளி மதவேழ மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉந்
தேயுந் தெளிவிசும்பி னின்று"[3] (தண்டி.ப.58)

என்பதனுள், உவமானத்தினை உவமேயமாக்கி அதனையே விலக்கினார்; என்னை? வெண்குடை யென்று யானை குத்துமென்று மதியினைக் குடையுட னொப்பிப்பான் மதியினைக் குடையாகவே கூறித் 'தேயுந் தெளிவிசும்பி னின்று' என்பதனாற் குடையோடு உவமை கூறியதை விலக்கினமையின் அதுவும் வேறுபட வந்த உவமத் தோற்றமாயிற்று.

1. முற்றிய கோங்கரும்பு போலவும் வெளிப்பட்டுத் தோன்றிய தென்னங்குரும்பை போலவும் மழைத்துளியால் எழும் குமிழ்போலவும் பருத்த இளமுலை என்பதில் மழைத்துளிக் குமிழ் சிறியதாயினும் மற்றவற்றுடன் சேர்த்துக் கூறியது வேறுபட வந்த உவமம்.

2. நெடிய மடலையுடைய பெரிய பனைமரத்தின் நீர்நிலையிற் காணப்படும் நிழலைப்போலச் சிறிது சிறிதாக அடைபட்டுச் செல்லும் மலை வழி. நீரிற் காணப்படும் பனைமர நிழல் நீரலையால் நெடிதாகக் காணாமல் விட்டுவிட்டுக் காணப்படும். அதுபோல் குன்றத்துள்ள சிறிய வழி ஆங்காங்கே அற்று அற்றுக் காணப்படும். பனைக்கு நெடிய மடல் அடையாகக் கூறப்பட்டது. அம் மடல் உச்சியில் இருப்பது. அது முடிவிடம் போலச் சிறு நெறியான் முடிவிடம் ஊராக அமையும் என்பது நெடுந்தோடு என்னும் அடையால் பெறப்படும்.

3. கிள்ளியின் வேழம் பகையரசர் குடையைத் தேய்த்த சினத்தால் நம்மையும் குடை யென்று கருதித் தேய்க்க வருமோ என முழுமதி யஞ்சியதால் தான் விசும்பில் தேய்வதாக ஆயிற்று.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" (குறள்.1)

என்றவழி, இரண்டு பொருள் வேறுவேறு கூறியதன்றி அகர முதல எழுத்தெல்லாம் அதுபோல என்றானும், ஆதிபகவன் முதற்று உலகம் அதுபோல என்றானும் ஒன்றாகத் துணியுமாற்றான் உவமையும் பொருளுங் கூறாமையின் அதுவும் வேறுபட வந்த உவமமாயிற்று.[1] பிறவும் அன்ன. இவை ஏனையுவமத்திற் கெல்லாம் பொதுவிலக்கணம்.[2] (32)

## 306. ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே. (35)

### இலக்குவனார்

308. Using it in a different way other than what is prescribed is in accordance with the usage.

### இளம்பூரணர்

**306. ஒரீஇக்..............................பண்பே.**

*என்-னின், இதுவு முவமைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.*

**(இ-ள்)** உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறலும் மருவிய இயல்பு என்றவாறு.

"கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே" (புறம்.8)

என வரும்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்"[3] (குறள்.1120)

என்பது மது. (35)

---

1. இக் குறளில் எது உவமை எது பொருள் எனத் தெளிவாகக் கூறப்படவில்லை. அகரமுதல எழுத்தெல்லாம் அதுபோல உலகு ஆதிபகவன் முதற்று என்றும் கொள்ளலாம்; உலகு ஆதிபகவன் முதற்று அதுபோல எழுத்தெல்லாம் அகர முதல என்றும் கொள்ளலாம். இவ்வாறு வருவதும் வேறுபட வருவதாகும். வேறுபட வரினும் கடவுள் வாழ்த்து என்பதற்கேற்ப எழுத்தெல்லாம் அகரமுதல அதுபோல உலகு ஆதிபகவன் முதற்று எனக் கொள்ளுதல் வேண்டும்.
2. உள்ளுறை யுவமத்துக்குப் பொது இலக்கணம் இல்லை. பிற்கால இலக்கண நூல்கள் இதனை விலக்குவமை என்னும்.
3. அனிச்ச மலரும் அன்னத்தின் சிறகுதூவியும் மாதர் அடிக்குப் படின் நெருஞ்சிப்பழமுள் தைப்பதுபோல் அமையும். அடியின் மென்மையைச் சிறப்பிக்க இவ்வாறு கூறப்பட்டது.

## பேராசிரியர்

**308. ஒரீஇக் கூறலு..........................பண்பே.**

*இதுவும் ஏனையுவமத்திற் காவதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) ஒரீஇக் கூறலும் -- ஒக்குமெனக் கூறாது ஒவ்வாதெனக் கூறுதலும், உம்மை இறந்தது தழீஇயிற்று. மரீஇய பண்பு - அதுவும் உவமையாதற்கு அடிப்படவந்த வழக்கு என்றவாறு.

(உ-ம்)"யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்" (புறம்.8)

"மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி" (குறள்.1118)

என வரும்.

"நின்னோ ரனையைநீ"

என்பதும் அது.[1]

இவற்றுள், 'யாங்கனம் ஒத்தியோ' என்பது ஒவ்வாயென்னும் பொருட்டு. 'காதலை வாழிமதி' என்றவழியும் யான் காதலியாமையால் மதியமே அவள் வாண்முக மொவ்வாயென்றலின் ஒரீஇக் கூறிற்று. இதுவும் மரீஇய பண்பாகலானும் உள்ளுறையுவமம் போலக் குறிப்பினான் உவமங்கோட லொப்புமையானும் ஈண்டுவைத்தானென் பது. 'பண்பு' என்றதனால் அதுவும் இலக்கணத்தோ டொக்கும் என்றவாறு. இவற்றையுங் வேறுபடவந்த உவம மென்னாமோவெனின், உவமையும் அவ்வழி மாறுபட வருமாறு உவமித்துக் கூறினான், உவமையின்மை கூறுதலும் உவமையெனப்படுமென்றற்கு இது கூறினானென்பது. இவற்றுள்ளும்[2] வேறுபட வந்த இலக்கணம் மேலைச் சூத்திரத்துள் அடங்கும். (33)

**307. உவமைத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான. (36)**

## இலக்குவனார்

309. They say that there is similarity of comparison in what is being said plainly to have a benefit out of it.

## இளம்பூரணர்

**307. உவமைத் தன்மையும்...............................தான.**

*என்-னின், இதுவு மது.*

---

1. நின்னை ஒப்பாய் நீ என்பதும் நினக்கு உவமையில்லை என ஒரீஇக் கூறியவாறு.
2. இவற்றுள்ளும் - ஒரீஇக் கூறப்படுவனவற்றுள்ளும்

(இ-ள்) உவமிக்கப்படும் பொருளோடு உவமை தோன்ற வருதலேயன்றி யுவமையது தன்மை கூறலு முவமையாதற் குரித்து; பயனிலை பொருந்திய வழக்கின்கண் என்றவாறு.

எனவே, இவ்வாறு வருவது பயனிலை யுவமைக்கண் என்று கொள்க.

"பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே." (புறம்.107)

இது மாரி போலும் பாரியது கொடை என்னாது இவ்வாறு கூறும் பொருண்மையும் உவமமாம் என்றவாறு. (36)

## பேராசிரியர்

**309. உவமத் தன்மையு.......................................தான.**

*இஃது, எய்தாதது எய்துவித்தது. மேல் ஏனையுவமங் கூறுங்கால் உவமிக்கப்படும் பொருட்குப் பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பக் கூறல் வேண்டுமென்றான், அவ்வாறன்றி உவமமுங் கொள்ளப்படுமென்றமை யின்.*

(இ-ள்) உவமத் தன்மையும் உரித்தென மொழிப - விகார வகையாற் பெருமையுஞ் சிறுமையும் ஒருபொருட்குக் கூறாது பட்டாங்கு உவமங் கூறுதலும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர்; பயனிலை புரிந்த வழக்கத்தான - அதனானும் ஒருபயன் தோன்றச் சொல்லுத னெறிப் பாட்டின்கண் என்றவாறு; அது,

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்"[1] (புறம்.107)

என்னும் பாட்டினுள், உலகளித்தற்கு மாரியும் உண்டென மாரியை உவமித்துச் சிறப்பித்துக் கூறுவான், மாரியைச் சிறப்பித்துப் பாட்டுடைத் தலைவனாகிய பாரியை உயர்த்துக் கூறாதான் போல இயல்பினான் உவமை கூறினானாம். இது மாரிக்கும் பாரிக்கும் ஓரிழிவில்லை யென்னுந் தன்மைபடக் கூறவே அவனுயர்வு கூறுதலிற் பயனிலை புரிந்த வழக்கெனப்படுமென்பது.

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் பெஃகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
வப்புநுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்பட ரன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழற் றுய்வா

1. இதில் பாரியையோ மாரியையோ விலக்காமல் உவமை கூறப்பட்டது.

யுழுதுகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கும்"[1] (அகம்.9)

என்பதும்,

"நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக
ரீத்திலை வேய்ந்த வேய்ப்புறக் குரம்பை"[2] (பெரும்பாண்.83-8)

என்றாற் போல்வனவும் அது.

'கொல்வினைப் பொலிந்த' (அகம்.9)

என்பதனுள் இந் நிலத்தின் மக்கள் அம்பினை உவமையாக்கி ஆண்டையவாகிய இருப்பையின் பூங்கொத்தை உவமிக்கப்படும் பொருளாக்கியும் உவம நிலத்திற்கேற்ற வெண்ணெய்த்திரளொடு கழன்ற பூவினை உவமஞ் செய்தும் அந் நிலத்தியல்பு கூறினமையின் அது பயனிலை புரிந்த வழக்கெனப்பட்டது. பிறவும் அன்ன.

'உவமைத் தன்மையும்' என்ற உம்மையான், உவமத் தன்மையே யன்றி வாளாது தன்மை கூறுதலும் அந் நிலத்திற்கே பயனிலையெனப் படுவனவுங் கொள்க; அவை,

"மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
யீன்பிணை வொழியப் போகி நோன்கா
ழிரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ
லுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்புல் லடக்கிய வெண்ப லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவி

1. வில்வீரர் தம் அம்புக் கூட்டில் நிரம்பப் பெய்த கொல்லும் தொழில் மேற்கொண்ட கூரிய குப்பியுடைய அம்பின் நுனிபோல அரும்பு விட்ட இருப்பைகளில் செப்புத் தகடு போன்ற சிவந்த தழைகள்தோறும் வெண்ணெய் திரட்டியது போன்ற துளையுடைய இனிய பூக்கள் தாளை நீக்கிக் கண்டபோது துளை காணப்படுவனவாகிக் காம்பு கழன்று வானினின்று விழும் ஆலங்கட்டி போலக் காற்றால் சிதறுண்டு பவளம் போன்ற சிவந்த மேட்டு வழியில் இரத்தத்தின்மீது நிணம் பரந்தாற்போலப் பரவியிருக்கும் - பழையவுரை உவே.சா. எழுதிவைத்துள்ளது.

2 நீண்ட தாளுடைய இலவமரத்தினது அசையும் கொம்பு காய்ந்த பஞ்சினையுடைய அழகான பசுங்காய் முதுகு விரிந்து பஞ்சு தோன்றினா லொத்த வரியையுடைய அணில், எலி இவை திரியாதபடி ஆற்றின் கருமணல் ஒக்கும் முதுகையும் கொழுத்த மடலையும் உடைய மேட்டு நிலத்தில் நின்ற ஈச்சமரத்தின் வேலின் நுனியொத்த கூரிய முனை யுடைய இலையாலே வேயப்பட்ட முள்ளம்பன்றியின் முதுகு ஒத்த புறத்தையுடைய குடிசை.

னீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா முலக்கை யோச்சி"[1] (பெரும்பாண்.89-97)

என்றவழி, உவமஞ் செய்யாது அந்நிலத்தியல்பு கூறப்பட்ட தாயினும் உவமத்தாற் பொருட் பெற்றி தோன்றச் செய்தாற்போல அந் நிலத்திற்குப் பயப்பாடு வெளிப்படச் செய்யாமையின் உவம விலக்கணத்துள் இதனை யும் இலேசினாற் கொண்டாமென்பது. அற்றன்று 'மரபே தானும்' (392) என்புழி, 'நாற்சொல் லியல்' எனச் சொற்றன்மையுங் கூறப்பட்டமையின் உவமையாராய்ச்சியுள் அது கூறானென்பது. உம்மை இறந்தது தழீஇயிற்று; என்னை? உயர்ந்ததன் மேற்றன்றி உயர்பிழிபுடைத் தல்லாத தன்மை யுவமையுங் கொள்க வென்றமையின்.

## 308. தடுமாறு வரலும்[2] கடிவரை வின்றே. (37)

## இலக்குவனார்

310. The displaced simile is not to be avoided.

## இளம்பூரணர்

**308. தடுமாறு வரலும்..............................வின்றே.**

*என்-னின், இதுவும் உவமைக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) உவமைக்கண் தடுமாறு வருதல் நீக்கப்படாது என்றவாறு.

தடுமாறுதலாவது - ஐயமுறுதல். எனவே ஐயநிலையுவமமுங் கண்டு கொள்க.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து" (குறள்.1085)

என்றும்,

"ஈங்கே வருவாள் இவள்யார்கொ லாங்கேயோர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்

---

1. பிள்ளை பெற்ற எயிற்றியானவள் மான்தோல் படுக்கையிலே பிள்ளையோடு முடங்கிக் கிடக்க ஏனையோர் சென்று பூண் தலையில் அழுத்தின திரண்ட வலிய வயிரமுடைய சீரிய கோலிற் செருகின உளிபோலும் வாயுடைய பாரைகளாலே மண்கட்டிகள் கீழ்மேலாகக் குத்துகையினாலே கரம்பு நிலத்தில் உண்டாக்கிய புழுதியை அளைந்து மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக்கொண்ட வெண்மையான பல்லுடைய எயிற்றியர் பார்வைமான் கட்டிநின்ற தேய்ந்த தாளினையுடைய விளாமரத்தின் நிழலிலே உள்ள முற்றத்திடத்துத் தோண்டின நிலவுரலிலே அப் புல்லரிசையைச் சொரிந்து குறிய வயிரமாகிய உலக்கையாலே குற்றி.

2. தடுமாறுவமம் - பேரா. பாடம்

பிற்கால இலக்கண நூல்கள் இதனைத் தடுமாறுவமம் எனக் கூறும்.

உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல்"[1] (கலி.56)

என்றும் வரும். பிறவும் அன்ன. (37)

## பேராசிரியர்

**310. தடுமா றுவமங்..................................யின்றே.**

*இதுவும், உவமத்திற்கே யாவதோர் இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) தடுமாறுவமம் - உவமையும் பொருளும் வேறு நிறீஇ இதுபோலும் இதுவென்னாது அவ் விரண்டினையும் உவமையுறச் சொல்லுந் தடுமாறுவமம்; இனி அவ்வாறன்றி உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியுந் தடுமாறச் சொல்லுதலுந் தடுமாறுவமம் எனப்படும்; கடிவரை இன்று - அவ் விரண்டும் உவமமென்று சொல்லற்பாட்டிற் கடியப்படா என்றவாறு.

"அரிமல ராய்ந்தக ணம்மா கடைசி
திருமுகமுந் திங்களுஞ் செத்துத் - தெருமந்து
வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி
யையத்து ணின்ற தரவு"[2] (பொய்கையார்)

என்பதனுள், உவமையினையும் பொருளினையும் வேறுவேறு துணியாது ஐயுற்று வையத்தும் வானத்துஞ் செல்லாது அரவென்றமையின் இது தடுமாறுவம மாயிற்று.

"தளிபெற்று வைகிய தண்சுனை நீல
மளிபெற்றார் கண்போன் மலரு - மளிபெற்ற
நல்லார் திருமுகத் தோற்றத் தளிபெற்ற
கல்லாரம் போன்மலருங் கண்"[3]

என்புழி, நீலத்தோடு கண்ணினையும், கண்ணினோடு நீலத்தினையும் ஒன்றற்கொன்று உவமையாக்கியும், பொருளாக்கியும் ஒருங்கே தடுமாறக் கூறினமையின் இதுவுந் தடுமாறுவம மெனப்பட்டது. பிறவும்அன்ன. (35)

---

1. இங்கு வரும் இவள் யார்? கைவினைஞன் புனைந்த பாவையோ? பெண்களின் உறுப்புகளெல்லாம் ஒன்றாகக் கொண்டு படைக்கப்பட்டவளோ? கூற்றம் தன் தொழிலில் வெறுப்புற்றுத் தான் வேண்டியபடி கொண்ட பெண் உருவோ?

2. செவ்வரி பரந்த மலர்போலும் கண்ணுடைய உழத்தி (கடைசி)யின் அழகிய முகத்தையும் திங்களையும் எண்ணி எது முகம் எது திங்கள் என அறியாது மயங்கித் திங்களைப் பிடிக்க எண்ணிய பாம்பு முகத்தைப் பிடிக்க மண்ணகத்துச் செல்லாமலும் திங்களைப் பிடிக்க வானகத்துச் செல்லாமலும் வருந்தி ஐயப்பாட்டிலேயே நின்றது.

3. சுனையில் உள்ள நீலமலர் மழைத்துளிபெற்றுக் கணவன் அருள் பெற்ற மனைவியின் கண்போல மலரும்; கணவன் அருள் பெற்ற மனைவியின் கண் நீலம்போல் மலரும்.

**309 அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே**
**நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்**
**வரன்முறை வந்த[1] மூன்றலங் கடையே. (38)**

## இலக்குவனார்

311. The appearance of simile in the row of one after another is to be avoided.

312. Placing similes and the objects related to them in order is called order in order(*niral nirai*). The other three *sunnam,adimari* and *molimārru* are deprived of simile.

## பி.இ.நூ.

**தண்டி 67**

நிரல்நிறுத் தியற்றுதல் நிரல்நிறை அணியே.

**மாறன் 162**

குறித்திடும் பெயர்வினை கூறிய செய்யுளின்
நெறிப்பட நிரல்உறல் நிரல்நிறை யாகும்.

**வீர. 170**

நிரல்நிறை யாவது சொல்லும் பொருளும்
நிரல்நிறுத்துதல்

## இளம்பூரணர்

**309. அடுக்கிய தோற்றம்................................கடையே.**

*என்-னின், உவமை பல வந்தவழி வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) அடுக்கிய தோற்றமாவது - உவமைபல அடுக்கித் தோற்றுதல்.

நிரனிறுத்தமைத்த லாவது - ஒரு பொருளொடு தோற்று[2] தொடரையுடைத்தாகப்[3] பலவுவமை வருதல்.

---

1. வரைநிலை வைத்த - பாடம்
2. தோன்றுகின்ற
3. தொடரையுடைத்தாக - தொடர்புடைத்தாக

நிரனிறை யாவது - உவமை பலவற்றையுஞ் சேர நிறுத்தி யுவமிக்கப்படும் பொருளையுஞ் சேர நிறுத்தல்.

சுண்ணமென்பது - உவமையையும், பொருளையுந் துணித்து ஓட்டுதல்.

வரன்முறை வந்த மூன்றலங் கடையே என்பது-அடுக்கியலுவமை கடியப்படும்; ஆமென்று வரையப்பட்ட நிரனிறுத்தன் முதலிய மூன்றும் அல்லாதவழி என்றவாறு.

அவற்றுள் கடியப்பட்டது உவமைக் குவமையாக அடுக்கி வருவது.

"வெண்திங்கள் போன்றுளது வெண்சங்கம் வெண்சங்கின்
வண்டிலங்கு தாழை வளர்கோடு"[1]

என்றவழி அவ்வாறு உவமைக்குவமையாகக் கூறியவதனாற் போதுவதோர் பயன் இன்மையின் ஆகாதென்று கொள்க.

நிரனிறுத்தமைத்தல் வருமாறு:

"நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே." (பதிற்.14)

"மதிபோலுந் தாமரை போலும்"

என வரும்.

நிரனிறை வருமாறு:

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்"[2] (யா.வி.ப.359)

என வரும். சுண்ணமாவது,

"களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே"[3]
(அகத்திணை.11.நச்.)

என்றவழி நிரனிறையன்றிக் களிறுபோலுங் கலன் எனத் துணிக்க வேண்டியவாறு கண்டுகொள்க. (38)

**உவமவியல் இயம்பூரணர் உரை**
**முற்றிற்று.**

---

1. வெண்திங்கள் போன்றுளது வெண்சங்கம், சங்கு போன்றது தாழை.

2. வஞ்சிமகள் கொடிநுசுப்பு, குவளையுண்கண், கொட்டை (தாமரைப் பொகுட்டு) மேனி, மதிமுகம், பவளவாய், முத்தம்முறுவல், பிடிநடை, பிணை (பொன்மான்) நோக்கு, மயில்சாயல் எனும்படியான வடிவுடையாள்.

3. களிறு கலனாகக் கந்து கூம்பாக மாற்றிக் கூட்டப்பட்டது.

## பேராசிரியர்

**311. அடுக்கிய தோற்றம்...............................பண்பே.**

*இஃது, எய்தியது மறுத்தது; என்னை? வேறு ஒரு பொருளோடு ஒரு பொருளை உவமித்து நிறீஇ அப் பொருளோடு பிறிதொரு பொருளை யுவமித்தலும் உவமையென்று கொள்ளுவானாயினும் அது கொள்ளப்படாது, பொருள் விளங்காமையினெனக் கூறி விலக்கி யமையின்.*

(இ-ள்) அடுக்கிய தோற்றம் - உவமையும் பொருளும் நிறுத்தி அடுக்கிய தோற்றம், விடுத்தல் பண்பு - சிறப்பினவாகக் கொள்ளப்படா என்றவாறு.

> "மதியத் தன்ன வாண்முகம் போலும்
> பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை"

என்றக்கால், மதியத்தன்ன வாண்முகத்தினைத் தாமரையென்றமையின் அவை ஒன்று ஒன்றனோடு பொருந்தாவென்பது கருத்து.

> "இலங்குவளை யன்ன நலங்கே ழாம்பற்
> போதி னன்ன தாதவிழ் கைதை"[1]

என்றக்கால், ஒன்று ஒன்றனோடு ஒருவண்ணத்ததாய் உவமைக்கேற்பினும் ஒன்றற்கொன்று உவமையாய் நின்றது. நின்றுற, மற்றும் அதனோடு உவமங் கொள்ளப்படாது. இது[2] வரையறையுடைமையின் விலக்கப் பட்டது. மற்று,

> "ஈர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
> சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
> மால்வரை யொழுகிய வாழை வாழைப்
> பூவெனப் பொலிந்த வோதி யோதி
> .....................................................................
> வளர்த்த நுங்கின் செறிதரு மெயிற்றின்"[3] **(சிறுபாண்.19-7)**

என்பதூஉம், அடுக்கிய தோற்ற மெனப்படாதோ வெனின், படாதன்றே; யானைக்கைபோலுங் குறங்கு, குறங்குபோலும் வாழையென அடுக்கிச் சொல்லாது குறங்கினையுடையாளென்று துணித்துக் கூறிய பின்னர்க்

---

1. வளை (சங்கு) அன்ன ஆம்பல், ஆம்பற் போது அன்ன தாழை

2. உவமை

3. பிடியின் கைபோலும் துடை, துடைபோல உள்ள வாழை, வாழைப் பூப்போலும் கூந்தல்.........இதில் பிடியின் கைபோலும் துடை என்பதை யடுத்துத் தொடர்பாகத் துடைபோலும் வாழை என்பது பொருந்த வாராமையின் எனும் கருத்து வாழைப்பூப் போலும் கூந்தல் என வருவதால் குறங்கினையும் (துடையையும் ஓதி(கூந்தல்) யையும் என உம்மை விரித்துக் கூறப்படுதலானும் ஒன்றையொன்று அடுக்கி வந்தன இல்லை.

குறங்கென மால்வரை ஒழுகிய வாழையென்றானாதலினென்பது, 'தோற்றம்' என்றதனான் உவமையும் பொருளுமாக நிறீஇ உவமவுருபு தோன்றக் கூறுங்கால் அடுக்கப்படுவதென்பது. (36)

**312. நிரனிறுத் தமைத்த......................கடையே.**

*இதுவும், எய்தாதன வரையறையுடைமையிற் கூறியவற்றோடு இனமாகலின் உவமத்திற்காவ தொன்றுணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) நிரனிறுத்து அமைத்தல் நிரனிறை - உவமையையும் நிரலே நிறுத்துப் பொருளினையும் நிரலே நிறுத்து ஒப்புமைகூறின் அது நிரனிறையெனப்படும், சுண்ணம் வரைநிலை வைத்த மூன்றலங்கடையே - சுண்ணத்தினை வரைந்த நிலைமையான் வந்த சுண்ணமும் அடிமறியும் மொழிமாற்று மென்னும் மூன்றுமல்லாத இடத்து என்றவாறு.

சுண்ணத்தினை வரைந்த நிலைமையான் வந்தனவெனவே சுண்ணந்தவிர மூன்றுளவோவெனின், அதனை 'ஒருவரை விலக்க மூவரும் வந்திலர்' என்றாற்போலக் கொள்க.

(உ-ம்)"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்"

என வரும்.

நிரனிறுத்தலென்னாது 'அமைத்தல்' என்றதனான் நிரனிறை யன்றி அமைத்துக்கொள்வதும் உண்டு; அது,

"களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றுந்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே"

என வரும்; பிறவுமன்ன.

என்றார்க்கு "நிரனிறுத் தமைத்தல் நிரனிறை யேனை வரைநிலை வைத்த மூன்றலங் கடையே" என்னாது சுண்ணத்தை வரைந்தோதியது என்னையெனின், அவை மூன்றுஞ் சுண்ணம்போலச் சுண்ணஞ் செய்யப்படுதலின்[1] அவ்வாற்றாற் சிதர்ந்துகிடப்ப உவமையுங் கூறின் அது பொருள் விளக்காதென்பது அறிவித்தற்கென்பது; என்னை? அடிமறியுள் ஓரடியுள் உவமங்கூறி ஓரடியுட் பொருள் வைத்தால் இனிது பொருள் கொள்ளாது அடிமறிக்குங்காலைப் பிறிது பிறிதாகலுடைத்து. இனி ஓரடியுள் உவமங்கூறிப் பின்னர் எத்துணையுஞ் சென்று பொருள் கூறி

1. சுண்ணம் போலச் சுண்ணம் செய்யப்படுதலின் - பொடித்தூள்கள் போலச் சொற்கள் ஓரிடத்தின்றிச் சிதற வைக்கப்படுதலின்.

மொழிமாற்றிக் கொள்ள வைப்பின் அதுவும் உவமத்தாற் பொருள் தோன்றாது. சுண்ணத்திற்கும் அஃதொக்கும்.

* இனி இவ் வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா; என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன் றாகியும் வருந் தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையாவழியு மென்பது; என்னை?

"நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
கூஉய்க் குழாஅ முடன்கொட்கு - மாய்படை
பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்
சென்றெவன் செய்வர் செரு"[1]

என்றவழி, நாய்போலும் நட்புடையர் படையாளரென்பது வினையுவமம்; பன்றியனையர் பகைவேந்தரென்பது நாய்க்குப் பகையாகிய பன்றிபோல வென்பது. வேற்றுவேந்தர் பகைவராதலால் அவ் வுவமை விலக்கரிது. அன்றாமாயினும் அஃதணியெனப்படாது; உவமைதான் உயர்ந்த தின்மையின். அது குற்றமன்றோ வெனின்,

"பேரு ரட்ட கள்ளிற்
கோரிற் கோயிற் றேருமா னின்னே"[2] (புறம்.300)

என்பது, குற்றமன்றாகலின் அதுவுங் குற்றமன்றெனப்படும். இனி, பொன்மாலையும் பூமாலையும்போலப் பொலிவு செய்தலின் இதுவுங்[3] குற்றமாகாது மேலதே[4] குற்றமென்பது. அற்றன்று, இன்ன சொல்லும் இன்ன பொருளுமுடையன பொன்மாலையெனவும் பூமாலையெனவும் வரையறுத்துக் கூறலன்மையின் அதனானும் அதனைக் குற்றமென்று இலக்கணத்தாற் கூறின் நிரம்பாது. அல்லதூஉம் பொருளதிகாரத்துட் பொருட்பகுதிகளெல்லாஞ் செய்யுட்கு அணியாகலான் அவை பாடலுட் பயின்றவை யெனப்பட்டன என்றதனான், அவையெல்லாந் தொகுத்து அணியெனக் கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில் கூற்றாமென்பது.

இனி, இரண்டுபொரு ளெண்ணியவற்றை வினைப்படுக்குங்கால் ஒருங்கென்பதோர் சொற்பெய்தல் செய்யுட்கு அணியென்ப. பிறவும்

---

* இங்கிருந்து வருவனவற்றுக்குப் பின்னர் உரையிறுதியில் சிவலிங்கனார் விளக்கம் காண்க.

1. ஆராய்ந்து கொண்ட படையாளர் தம் தலைவர்க்கு நாய்கள் போல நட்பில் மாறுபடாமல் கூவிக் குழுவுடன் சுற்றிவருவர்; பகைவரோ பன்றி போல்வர்; அதனால் அவர் போர்க்குச் சென்று என்ன செய்வர்?

2. இழிந்த பொருளை உவமித்துக் கூறுவது

3. பன்றியுவமை

4 நாயுவமை

இன்னோரன்ன பலவுஞ் செய்யுட் கணியாமென்பது அவர் கருத்து. ஒருங்கே யென்பதேயன்றி மூன்று தாழிசையுண் மூன்று பொருள் கூறி 'எனவாங்கு' என்பதொரு சொல்லான் முடிந்தவழியும் 'எனவாங்கு' என்பதோர் மொழி எனவென்பது ஓரலங்காரமெனல் வேண்டுமாகலான் அவ்வாறு வரையறுத்துக் கூறலமையாதென்பது. பிறவுமன்ன.

இனி, அவற்றைப் பொருளுறுப் பென்ப தல்லது அணியென்ப வாயிற் சாத்தனையுஞ் சாத்தனாலணியப்பட்ட முடியுந் தொடியும் முதலாயவற்றையும் வேறு கண்டாற் போல அவ் வணியுஞ் செய்யுளின் வேறாகல் வேண்டுமென்பது.

இனி, செய்யுட்கு அணி செய்யும் பொருட்படை எல்லாங் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக்கூறலா (663) மென்பது. அவை யாவையெனின்,

"அகனமர் கேள்வ னகற்சி தீர்த்தற்கு
மகனொடு புகுந்த மகவுநிலை யெனாஅ
மறுக்குங் காலை மறுத்துரை மொழியாது
குறிப்புவேறு கொளீஇய குறிப்புநிலை யெனாஅப்
புலவிக் கண்ணும் போக்கின் கண்ணு
மழுதலு மழாஅது முயங்கலு மென்றாங்
கிருவகைப் பட்ட மங்கல மெனாஅப்
புலம்புறு காலை யறிவொடு படாது
புலம்புகொள வந்த செய்வினை யெனாஅ
வின்னோ ரன்ன பல்பொருட் பகுதி
நன்னெறிப் புலவர் நாட்டல்வகை யுடைய"

என்றோர் சூத்திரஞ் செய்யின் அவையும் அலங்கார மெனப்படுமென்பது; அவற்றுக்கு உதாரணம்:

"ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்" (அகம்.5)

என்பது மகவுநிலை.

"ஓவச் செய்தியி னொன்றுநினைந் தொற்றி" (அகம்.5)

என்பது, குறிப்புநிலை; என்னை? தலைமகன் போக்கினை உவக்குங் குறிப்பல்லாத குறிப்பாகலின் அஃதணியெனப்படும்.

"தும்முச் செறுப்ப வழுதாள்" (குறள்.1318)

என்பது, புலவியு ளழுதமங்கலம்.

"பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
.........................................................................
மோயின ளுயிர்த்த காலை" (அகம்.5)

என்பது, போக்கின்கண் அழாத மங்கலநிலை.

"விளிநிலை கேளா டமியண் மெண்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற" (அகம்.5)

என்பது, அறிவொடு படாது புலம்புகொள வந்த செய்வினை; என்னை? கேளாது கேட்டாள்போல் வந்தமையின், அதுவும் அலங்கார மெனப்படுமென்று சூத்திரஞ் செய்துகொள்ளல் வேண்டும். செய்யுட்கு அணி வேறு கூறினென்பது.

இனி, இங்ஙனங் கூறினவெல்லாங் குற்றமென்று கொள்ளப்படா; என்னை? வேறு காரண முணரப்பெறாது உறழ்ந்து இடையறவுபட்ட காலை இடர்ப்பட்டுச் செய்தனவாதலான் அவையும் அவ்வாற்றானமையு மென்பது.

இனி, ஆனந்தவுவமை யென்பன சில குற்றம் அகத்தியனார் செய்தாரெனக் கூறுப ஆகலின், அவையிற்றை எவ்வாறு கோடுமெனின், அவைகள்தாம் அகத்துள்ளும் பிற சான்றோர் செய்யுளுள்ளும் வருதலிற் குற்றமாகா; அகத்தியனாராற் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை வேறு ஆனந்தவோத்தென்பது ஒன்று செய்தாராயின் அகத்தியமுந் தொல்காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யுங் குற்றம் வேறுபடாவென்பது. அஃதேல், செய்யுட்கு இவை யணியென்பதூஉம் இவை குற்றமென்பதூஉம் மூன்றதிகாரத்துள்ளும் இவ் வாசிரியர் யாண்டுங் கூறாரோவெனின், செய்யுளியலில் முப்பத்து நான்குறுப்புக் (313) கூறி அவற்றதியைபு நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பெனவும் அவை தொடர்ந்த தொடர்நிலை எண்வகையாற் றொடர்நிலைச் செய்யுட்கு வனப்பெனவும் பகுத்தோதிய இலக்கணத்திற் பிறழ்ந்தவை எல்லாங் குற்றமென்பதூஉம் கொள்ளவைத்தா னென்பது. (37)

**உவமவியல் பேராசிரியர் உரை**
**முற்றிற்று.**

## சிவலிங்கனார்

**அடுக்கிய தோற்றம்..............................கடையே.**

*இச் சூத்திரம் 'தடுமாறுவமம்' என்னும் சூத்திரத்துக்குப் புறனடை கூறுகின்றது.*

(இ-ள்) நிரல்நிறையும், சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்னும் மூன்றும் ஆக நான்கும் அல்லாதவிடத்து உவமையை அடுக்கியவாறு செய்தல் செய்யுள் செய்வார் விடுத்தல் அவர்க்குப் பண்பாகும் என்றவாறு.

நிரல்நிறுத்து அமைத்தலாகிய நிரல்நிறைப் பொருள்கோளும் சுண்ணத்தைச் சேர்த்து வரையறைப்படுத்திய அடிமறி மொழிமாற்றுப்

பொருள்கோள்கள் மூன்றும் ஆகிய நான்கும் பொருள்கோள் அல்லாவிடத்து அடுக்கிய தோற்றம் விடுத்தல் என்க.

நிரல்நிறை முதலிய நான்கு பொருள்கோள்களிலும் உவமம் அடுக்கிவரலாம். அல்லாவிடத்துக் கூடாது என்பது கருத்து.

"கொடிகுவளை கொட்டை நுசுப்புஉண்கண் மேனி"

என நிரல்நிறையில் உவமை அடுக்கிவந்தது.

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனையென்ப அதுபோல்
சூளுற வில்லா யாம்துயர் உறவே
சூளுற் றவரோ சுகமுறு வாரே."

இதில் முன்னிரண்டடிகள் சுண்ணத்துக் குரியன, கானகநாடன் சுனையானது சுரைக்குடுக்கை மிதக்கும்படியும், அம்மி ஆழும்படியும், யானை நிற்கும்படியும், முயல் நீந்தும்படியுமாக அமைந்தது. அதுபோலத் தலைவர் சூளுற்றுப் பொய்த்தமையால் துயர் உறுக; சூளுறவில்லா யாம் சுகம் உறுக என்பது பாடலின் பொருள். இதில் சுரை மிதப்பு, அம்மி ஆழ்வு, யானைக்கு நீத்து, முயற்கு நிலை என உவமங்கள் அடுக்கி வந்து, தலைவிக்கும் தலைவனுக்கும் உவமையாகி வந்தமை காணலாம்.

"மஞ்சு போலும் மாயிருங் கூந்தல்
பஞ்சு போலும் பண்பது பாதம்
கொஞ்சு மொழியோ குயிலைப் போலும்
வஞ்சி மகளின் வண்ணம் நன்றே"

இஃது, அடிமறிமாற்றுக் குரியது. வஞ்சிமகளுக்கு - அவள் உறுப்புகளுக்குப் பல உவமைகள் அடுக்கி வந்தன.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்."

இது மொழிமாற்றுப் பொருள்கோளுக்குரியது.

(இ-ள்) "அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் உடையாளே! நம் மா மேனிமேல் உள்ள தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட வெண்கோழி முட்டை உடைத்தாற்போலக் காணப்படும் பசலையை வங்கத்துச் சென்ற தலைவர் வரின் தணிவோம்" என்பது. இதில் தெங்கங்காய் போல, முட்டையுடைத்தன்ன, அஞ்சனத்தன்ன எனப் பலவுவமை அடுக்கி வந்துள்ளன. உவமைகளுக் கேற்பப் பொருள்கள் அமைத்துக் கொள்ளப்படும்.

தடுமாறு உவமம் பல அடுக்கிவரினும் அது ஒன்றற்கே அடுக்கப்படுதலின்றி இதுவோ அதுவோ எனத் தடுமாறி அடுக்கப் படுதலின் அஃது ஏற்புடைத்தாம். 'அணங்கு மயில் மாதர் போல்வாள் இவள்' என்னாமல் இவள் அணங்கோ, மயிலோ, மனிதப் பெண்தானோ எனத் தடுமாறுதலினால்,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (குறள்.1081)

என்றான்.

தடுமாறு உவமம் அடுக்கிவருதலின் எங்கும் அடுக்கிவரலாமோ எனும் ஐயம் எழ நான்கு பொருள்கோள்களிடத்தன்றி வேறெங்கும் அடுக்கி வரலாகாது என்பதற்காக இச் சூத்திரம் கூறப்பட்டது.

இனிப் பேராசிரியர் நிரல்நிறைப் பொருள்கோளில் வரும் உவமம் பற்றிப் புறனடை கூறுகின்றது இச் சூத்திரம் எனக்கொண்டு உரை கூறினார். சுண்ணத்திலும், அடிமறியிலும், மொழிமாற்றிலும். உவமைகள் நிரல்நிறுத்திக் கூறப்படின் அவை நிரல்நிறை யுவமம் ஆகாது. அதற்கு அவர் தரும் விளக்கம்:

> "சுண்ணம் முதலிய மூன்றும் சுண்ணம்போலச் சுண்ணம் செய்யப்படுதலின் அவ் வாற்றாற் சிதர்ந்துகிடப்ப உவமையும் கூறின் அது பொருள் விளக்காது என்பது அறிவித்தற்கு என்பது; என்னை? அடிமறியுள் ஓரடியுள் உவமம் கூறி ஓரடியுட் பொருள் வைத்தால் இனிது பொருள் கொள்ளாது, அடிமறிக்குங்காலைப் பிறிதுபிறிதாதலு டைத்து. இனி, ஓரடியுள் உவமம் கூறிப் பின்னர் எத்துணையும் சென்று பொருள் கூறி மொழிமாற்றிக்கொள்ள வைப்பின் அதுவும் உவமத்தாற் பொருள் தோன்றாது. சுண்ணத்திற்கும் அஃது ஒக்கும்"

என்பது. இவ் விளக்கம் பொருத்தமானதே. எனினும் உவமம் தடுமாறு உவமமாக வரின் அடுக்கிவரும் என்றும் பிறவிடங்களில் அடுக்கி வாராது என்றும் கூறிய ஆசிரியர் யாதோர் இயைபும் இன்றி நிரல்நிறைபற்றிக் கூறினார் என்பதினும் நிரல்நிறை முதலிய நான்கினும் அடுக்கிவருதல் உண்டு எனப் புறனடை கூறினார் என்றலே நன்று.

**உவமவியல் சிவலிங்கனார் உரை**
**முற்றிற்று.**

# தொல்காப்பியம் உரைவளம்

**பொருளதிகாரம் உவமவியல்**
**முற்றிற்று.**

## பேராசிரியரின் அணியிலக்கணக் கோட்பாடு

"இவ் வதிகாரத்தினிற் கூறப்படுகின்ற உவமங்களுட் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும், செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாம் என இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர்" எனக் கூறி அணியிலக்கணம் செய்ய வேண்டுவதில்லை என்பதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறுவர் பேராசிரியர்.

1. ஒரே கருத்தை வல்லார் செய்யின் அணியாகவும், அல்லார் செய்யின் அணியன்றாகவும் கூறப்படும்; இலக்கணத்துக்கு மாறுபட வில்லையானாலும்.

"நாயகர்க்கு நாய்கள்போல் நட்பிற் பிழையாது
கூஉய்க் குழாமுடன் கொட்கும் - ஆய்படை
பன்றி யனையர் பகைவேந்தர் ஆங்கவர்
சென்றெவன் செய்வர் செரு."

இப் பாடலில் நாயகர்க்கு நாயும் பகைவர்க்குப் பன்றியும் உவமம் கூறப்பட்டன. இலக்கணத்திற்கு மாறுபடவில்லை. உவமம் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் இப் பாடலை உவமையணிக்குரியதாகக் கொள்ளுதல் கூடாது. ஏன் எனில் உவமம் உயர்வாக இருத்தல் வேண்டும் அவ்வாறில்லாது வல்லார் அல்லாரால் இப் பாடல் செய்யப்பட்டதாதலின் அணியெனப்படாது.

2. இரண்டு பொருளை எண்ணி ஒருங்கு என்னும் சொற்சேர்த்து அதனால் ஒருங்கணி எனப் பெயர் கொடுப்பர் அணிநூலார். அப்படியாயின் கலித்தாழிசைக்கும், சுரிதகத்துக்கும் இடையே 'என வாங்கு' என்பது வருதலின் அதையும் 'எனவாங்கணி' எனப் பெயர் கொடுத்தல் வேண்டும். இப்படியே சொற்களைக் கொண்டால் வரையறைப்படாமல் அணிசெல்லும்.

3. எனவாங்கு போலும் சொற்களை அணி எனக்கொண்டால் அவை செய்யுள் உறுப்பு என்பது தனித்துப் பிரிக்க முடியாது என்பதும் இல்லாமல் சாத்தனையும் அவன் அணியும் முடிமுதலியவற்றையும் பிரித்து வேறுகாணல் போலக் காணலாகும். அப்படிப் பிரித்துக் காணாமையின் அச் சொற்களால் பெயரிட்டு அணியென்றல் பொருந்தாது.

4. செய்யுட்குரிய அழகுதரும் பொருள்களை யெல்லாம் தனித்தனி அணிகளாகக் கூறாமல் சில பொருள்களைமட்டும் அணியெனல் பொருந்தாது. குன்றக்கூறலாகிவிடும்.

5. குன்றக் கூறல் எனும் குற்றம் தங்காமல் கூறவேண்டுமானால் மகவுநிலை, குறிப்புநிலை, புலவியுள் அழுதமங்கலம், போக்கின்கண் அழாத மங்கலம், அறிவொடுபடாது புலம்புகொள வந்த செய்வினை முதலிய பொருள்களையும் சூத்திரம் செய்து அணியென அவற்றின் பெயர்களாற் கூறுதல் வேண்டும். அவ்வாறு அணிநூலார் கூறவில்லை.

## குற்றமாகக் கருதப்படக் கூடியன குற்றம் ஆகா எனப் பேராசிரியர் கூறுவது வருமாறு:

'நாயகர்க்கு நாய்கள்போல் நட்புடையார்' எனும் செய்யுளில் நாயகர்க்கு நாயும் பகைவர்க்குப் பன்றியும் உவமை கூறப்பட்டன. இழிந்தன உவமம் செய்யப்பட்டனவாயினும் பகைவரைப் பன்றி என்றல் பொருந்துவதே அது விலக்க வேண்டுவதில்லை. உவமை என ஏற்றுக்கொள்ளலாம்.

உவமமாக ஏற்றுக்கொள்ளலா மாயினும் குற்றம் குற்றந்தானே என்றால் சான்றோர் செய்யுளிலும்,

"பேரூர் அட்ட கள்ளிற்கு
ஓரிற் கோயில் தேருமால் நின்னே" (புறம்300)

என இழிந்த கள்ளுக்கு நின்னைத் தேரும் என்பது சான்றோர் செய்யுளில் வந்தமையின் குற்றமாகக் கருதப்படாமைபோல நாய் பன்றியுவமையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொன்மாலை, பூமாலை இரண்டும் அழகு செய்வன. முன்னது உயர்ந்தது; பின்னது அதனின் தாழ்ந்தது. என்றாலும் அழகுசெய்வன. அதுபோலப் பகைவர்க்குப் பன்றி இழிவு கருதிக் கூறப்படுவது குற்றமாகாது; ஆனால் நாயகர்க்கு நாய் கூறப்படுதல் குற்றமாம் என வாதிடலாம். இன்ன சொற்களால் அமைவது பொன்மாலை போல்வதாகும், இன்ன சொற்களால் அமைவது பூமாலை போல்வதாகும் என்ற வரையறை யில்லாமையால் அதுகாட்டிக் குற்றம் கூறலாகாது. ஆதலின் இரண்டு உவமையும் ஏற்கப்படும்.

ஆனந்தக் குற்றம் எனக் கொண்டு உவமையிலும் குற்றமான உவமை ஆனந்த உவமை எனப்படும் என அகத்தியனார் கூறினார். என்றாலும் ஆனந்த உவமைகள் சங்கச் சான்றோர் செய்யுள்களில் காணப்படுதலின் ஆனந்த உவமை என்பது குற்றம் எனத் தள்ளப்படாமல் ஏற்றுக்கொள்ளப்படும்.

# சூத்திர முதற்குறிப்பு அகராதி

(எண் - பக்க எண்)


| | |
|---|---|
| அடுக்கிய தோற்றம் | 100 |
| அன்னான் | 42 |
| அன்ன வாங்கு | 40 |
| அவைதாம் அன்ன | 34 |
| இரட்டைக் கிளவி | 66 |
| இனிதுறு கிளவியும் | 82 |
| உயர்ந்ததன் மேற்றே | 12 |
| உவமப் பொருளின் | 60 |
| உவமப் பொருளை | 64 |
| உவமப் போலி | 71 |
| உவமமும் பொருளும் | 26 |
| உவமைத் தன்மையும் | 95 |
| எள்ள விழைய | 43 |
| ஏனோர்க் கெல்லாம் | 81 |
| ஓரீஇக் கூறலும் | 94 |
| கடுப்ப ஏய்ப்ப | 45 |
| கிழக்கிடும் பொருளே | 19 |
| கிழவி சொல்லின் | 79 |
| கிழவோட் குவமை | 84 |
| கிழவோற் காயின் இடம்வரை | 85 |
| கிழவோற் காயின் உரனொடு | 81 |
| சிறப்பே நலனே | 16 |
| சுட்டிக் கூறா | 24 |
| தடுமாறு வரலுங் | 98 |
| தத்தம் மரபில் | 50 |
| தவலருஞ் சிறப்பினத் | 73 |
| தோழிக் காயின் | 79 |
| தோழியும் செவிலியும் | 86 |
| நாலிரண் டாகும் | 53 |
| பிறிதொடு படாது | 68 |
| பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப் | 31 |
| பெருமையும் சிறுமையும் மெய்ப் | 56 |
| பொருளே உவமம் | 28 |
| போல மறுப்ப | 47 |
| முதலுஞ் சினையுமென் | 21 |
| விரவியும் வரூஉம் | 10 |
| வினைபயன் மெய்யுரு | 1 |
| வேறுபட வந்த | 88 |

# சொல்லகராதி


**அ**

அடுக்கி - 304
அலங்கடை - 304
அன்ன - 288, 283, 284

**ஆ**

ஆங்க - 282
ஆங்கவை - 282

**இ**

இரட்டை - 293
இரட்டைக்கிளவி - 293
இரு - 277
இறப்ப - 283
இனிதுறு - 301

**ஈ**

ஈரிடம் - 302

**உ**

உயர்ந்த - 274
உரு - 287, 296
உவமம் -
உவமப்போலி - 274
உள்ளுங்காலை - 374
உறழ - 282, 283
உறுப்பு - 296

**எ**

எட்டு - 283
எள்ள - 282
என்ற - 282
என்ன - 282, 283, 285

**ஏ**

ஏய்ப்ப - 282, 286

**ஐ**

ஐந்து - 276, 295

**ஒ**

ஒட்ட - 282, 286
ஒடுங்க - 282, 286
ஒத்த - 279
ஒப்ப - 282, 287
ஒரீஇக் - 306
ஒன்று - 282

**ஓ**

ஓட - 282

**க**

கடிவரை - 306
கடுப்ப - 286
கடை - 309
கள்ள - 282, 285
காதல் - 295
காய்த்த - 287
காய்ப்ப - 282
காலை - 292
கிழக்கிடு பொருள் - 276
கிழவி - 297
கிழவோன் - 299
கிளவி - 284,287,299

**ச**

சிறப்பு - 275
சிறுமை - 281, 290
சினை - 276
சுட்டிக் கூறா
உவமம் - 271
சுண்ணம் - 309
செய்தனர் - 280
செவிலி - 304

**த**

தகைய - 282, 283
தடுமாறு - 308
தத்தம் - 287
தன்மை - 296, 307
துனியுறு - 307
தோழி - 298, 304
தோற்றம் - 272, 305, 309

**ந**

நடுங்க - 282
நந்த - 287, 287
நலன் - 275

நளிய - 282, 289
நாட - 282
நாலிரண்டு - 289
நான்கு - 272
நிகர்ப்ப - 282, 286
நிரனிறை - 304
நிலம் - 298
நிலைக்களம் - 275
நேர - 287
நோக்க - 283
நோக்கு - 304

ப

பண்பு - 275
பயன் - 272இ 296
பயனிலை - 285, 397
பிறப்பு - 296
புரைய - 282, 286
புல்ல - 282, 285
பெருமை - 281, 290
பொருவ - 282, 285
பொருளெதிர் - 278
பொற்ப - 282
போல - 282, 287

ம

மதிப்ப - 282, 285
மரீஇய - 306
மருள - 282, 286
மறுப்ப - 282, 287
மாற்ற - 282
மான - 282
முதல் - 277
மெய் - 272
மெய்ப்பாடு - 290

வ

வன்முறை - 309
வலி - 275
வாங்க - 283
வியப்ப - 282, 287
விடுத்தல் - 309
விழைய - 282, 285
விறப்ப 282
வினை - 272, 283, 296
வீழ - 282, 285
வெல்ல - 282, 285

# பயன்படுத்தப்பெற்ற நூல்கள்


1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பேராசிரியர் இரண்டாம் பாகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1935

3. தொல் - பொருள் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை - மேற்படி கழக வெளியீடு, 1965

4. தொல்காப்பியம் பொருளதிகாரம் (இரண்டாம் பாகம்) பின்னான் கியல்களும் பேராசிரியரும், பிரமஸ்ரீ சி. கணேசையர் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1943

5. இறையனாரகப்பொருள் - மேற்படி கழக வெளியீடு, 1953

6. நம்பி அகப்பொருள் - மேற்படி கழக வெளியீடு, 1966

7. இலக்கண விளக்கம் - மேற்படி கழக வெளியீடு, 1973

8. முத்துவீரியம் - மேற்படி கழக வெளியீடு, 1972

9. தொன்னூல் விளக்கம் தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை, 1978

10. Tolkappiyam With Critical Studies - Prof . Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai - 6, 1963

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

| | ரூ.காசு |
|---|---|
| யாப்பருங்கல விருத்தி | 170.00 |
| இராசேந்திரன் (நாடகம்) | 55.00 |
| முல்லை | 25.00 |
| திராவிட மொழியின் மூவிடப்பெயர் | 40.00 |
| தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள் கி.மு. 200 - கி.பி. 1300 | 100.00 |
| வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும் | 65.00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40.00 |
| தமிழ்வள்ளல் பாண்டித்துரையார் | 25.00 |
| தேவநேயப் பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை | 35.00 |
| தமிழ்விடு தூது | 20.00 |
| கபிலர் | 70.00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| நாட்டிய நன்னூல் | 25.00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65.00 |
| கதிர்வேற் பிள்ளை - தமிழ்ச் சொல்லகராதி. மூன்று பாகங்கள் | 600.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி -3 | 30.00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் - ஓர் ஆய்வு | 60.00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| உத்தர ராம சரிதம் | 30.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி -1 | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி -2 | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65.00 |
| தமிழக மேடைநாடகப் பெண்கலைஞர்கள் குறிப்பேடு | 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | 80.00 |
| Cilappatikaram | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| Tamil Culture and Civilization | 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்ககாலம் முதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தொல்காப்பியம் உரைவளம் - பொருள் - செய்யுளியல் பகுதி -1 | 50.00 |
| தடிவீர சுவாமி கதை, வன்னியராயன் கதை | 55.00 |
| சடத்தலம் | 40.00 |
| காத்தவராய நாடகம் | 30.00 |
| மதங்க சூளாமணி | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |